பல்சுவை மாத இதழ்

# மித்ரா டைம்ஸ்

MITRA TIMES

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்
Tamil & English Monthly

| ஆண்டு–6 | இதழ்–06 | நவம்பர் – 2020 | விலை ரூ.20/– | ஆண்டு சந்தா ரூ.240/– |
| --- | --- | --- | --- | --- |
| Volume - 6 | Issue - 06 | November - 2020 | Price Rs.20/- | Annual Subscription Rs.240/- |




வாங்க... விவசாயம் பண்ணலாம்!

● ஆசிரியர் கடிதம்



குருப் பெயர்ச்சிப் பலன்கள்!

● ஜோதிடர் பரணிதரன்

மாத்திரைகளா உயிர் பறிக்கும் யாத்திரைகளா?

பாழான பொருளாதாரம் சீராகுமா?

சிலிண்டர் மானியம் பெறுவது எப்படி?



அணிகள் இணைந்தாலும் மனங்கள் இணையவில்லை

## சசிகலா வருகையால் அ.தி.மு.க.வில் சலசலப்பு!

# ஆசிரியர் பங்கேற்ற ஆயுத பூஜை விழா



சென்னை கே.ஆர்.எம். 99 Delights அலுவலக வளாகத்தில் நடைபெற்ற ஆயுதபூஜை விழாவில் தமது மனைவி திருமதி.சுஜாதாமூர்த்தி, மகள்கள் ஸ்ருதி, சினேகா, மகன் சூர்யா மற்றும் மித்ரா குழும அலுவலர்கள், பணியாளர்களுடன் மித்ரா குழும நிறுவனர் திரு. எம்.எஸ்.மூர்த்தி பங்கேற்றார்.

## எண்ணம்



# வாங்க... விவசாயம் பண்ணலாம்!

அன்புடையீர், வணக்கம்.

வேள் என்னும் சொல்லுக்கு கொடை அல்லது ஈகை என்பது பொருள். இச்சொல்லை அடிச்சொல்லாகக் கொண்டுதான் வேளாண்மை எனும் சொல் உருவானது. நிலம் அள்ளி அள்ளித் தரும் கொடையைச் சார்ந்துதான் உயிர்களின் வாழ்வே இருக்கிறது.

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு

ஒருவன் ஓடி ஓடி உழைத்துத் திரட்டும் பொருளெல்லாம் உரியவர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதற்காகத்தான் என்பது இப்பூவுலகின் அறிவுத் தந்தை வள்ளுவனின் வாக்கு. தக்கார் என்றால் மனிதர்களை மட்டும் குறிக்கிறது என்பதற்காக இன்னொன்றையும் சொன்னான் வள்ளுவன்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை

எவையெல்லாம் சிறந்த குணங்கள் என்று கற்றறிந்தோர் நமக்குச் சொல்லிச் சென்றார்களோ அவை எல்லாவற்றையும்விட, எல்லா உயிர்களோடும் பகுத்து உண்டு வாழும் குணம்தான் தலைசிறந்தது என்பது அவனின் முடிந்த முடிவான கூற்று.

வேளாண்மை எனும் ஒற்றைச் சொல்லில் உலகத்தை வாழவைக்கும் கருத்தியலும் செயல்திட்டமும் அடங்கியிருக்கிறது. அது கூடிவாழ்தலின் ஆகச்சிறந்த வடிவம்.

பழங்குடி மக்களின் வாழ்விலிருந்து நாம் கற்றுக் கொள்ளவேண்டியது நிறைய இருக்கிறது. அவர்கள் தேவைக்கு மீறி எதையும் உற்பத்தி செய்வதில்லை. பசிக்கும் பொழுது அல்லாமல் பிற நேரங்களில் கனியையோ காயையோ தாவரங்களிலிருந்து பறிப்பதில்லை. எளிமையான வாழிடம், எளிமையான தேவைகளோடு அவர்கள் வாழும் கூட்டு வாழ்க்கைதான் சிறந்தது. பொன், பொருள், சாதனை, வெற்றி, புகழ் என்கிற மாயமான்களை அவர்கள் துரத்தி வாழ்வை வீணடிப்பதில்லை. உடல் என்பது தேவையான அளவு உழைப்பதற்கும் புசிப்பதற்கும் சுகிப்பதற்கும் ஓய்வெடுக்கவும்தான் என்கிற இயற்கை இரகசியம் அறிந்தவர்கள் அவர்கள்.

அவர்களுக்கு நோய்த் துன்பம் என்பது கிடையாது. உலகை உலுக்கிக்கொண்டிருக்கும் கொரானா வைரஸ் கூட பழங்குடியினர் பக்கம் தலைகாட்டவில்லை. காரணம் அவர்கள் வாழும் இயற்கை சார்ந்த வாழ்க்கை முறை மற்றும் உடலுக்குத் தேவையானதை மட்டும் உண்ணும் பழக்கம்.

அவர்களைப் போல, வேளாண்மை செய்யும் நிலம் எல்லோருடைய கூட்டு உரிமையில் இருக்க,. குடும்பங்கள் வாழ்வதற்கான சிறிய இடம் மட்டும் தனியுரிமையாக வைத்துக்கொண்டு சாதி, மத, இன, நிற, மொழிப் பாகுபாடு எதுவும் இல்லாமல் ஒன்றாய்க் கூடி, தேவைக்கேற்ற உற்பத்தியை கூட்டுரிமையுள்ள நிலத்தில் விளைவித்தோ, விளைந்த பொருளுக்கு மதிப்புக்கூட்டலோ செய்து, அவற்றில் பயன்படுத்தியது போக சிறிய அளவினதைச் சேமிப்பாக வைத்துக்கொண்டு எஞ்சியதைத் தேவையுள்ளோர்க்குப் பகுத்துத் தந்து வாழ்வது போன்ற ஒரு இயல்பான, இனிமையான வாழ்வு எதுவும் உண்டோ?



# ஆசிரியர் கடிதம்

அண்ணல் காந்தி சொன்ன தற்சார்புப் பொருளாதாரம் என்பது இதைத்தான். இவ்வாறு வாழத் தலைப்பட்டால் சாதி, பொருள் குவிக்கும் அவா, நுகர்ச்சி வெறி போன்ற சமூக இழிவுகளும் வேலைவாய்ப்பின்மையும் ஒழிந்து ஓர் ஊர் மகிழ்ந்து வாழ்ந்திருக்கும். கிராமங்களின் தொகுப்பான இந்திய நாடும் அவ்வாறே மகிழ்ந்திருக்கும்.

இதை நடைமுறைப்படுத்தும் முயற்சியில் அகிம்சா மற்றும் ஜனமித்ரா என்கிற சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்குகிற இரண்டு தொண்டு நிறுவனங்கள் இணைந்து ஈடுபடத் தொடங்கியிருக்கிறார்கள்.

குறைந்த பட்சம் 100 ஏக்கர் உள்ள ஓர் இடம், அதில் நானூறு பண்ணை வீடுகள். ஒவ்வொரு பண்ணை வீட்டிற்கும் 25 சென்ட் அளவுள்ள நிலம் ஒதுக்கப்படும், அதை விலைக்கு வாங்குபவர்கள் 25 சென்ட் நிலத்திலிருந்து 5 சென்ட் நிலத்தை பிரிபடாத கூட்டுப்பண்ணை வேளாண்மைக்கு அளிப்பார், 10 சென்ட் நிலத்தில் அவருக்குத் தேவையான அளவில் ஒரு வீட்டை அவருடைய வசதிக்கேற்ற அளவில் கட்டச்சொல்லி வாங்கிக் கொள்வார். 400 உரிமையாளர்களின் பண்ணை வீட்டுக்கான நில அளவு 40 ஏக்கர். அவர்களது பிரிபடாத கூட்டுப்பண்ணை நிலத்தின் அளவு 20 ஏக்கர், தெருக்கள், விளையாட்டுத்திடல், சமூகக்கூடம், பூங்கா, நூலகம், போன்ற வழக்கமான வசதிகளுக்காக 20 ஏக்கர். மீதமுள்ள 20 ஏக்கரில் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கான அடுக்குமாடிக்குடியிருப்புகள், எல்லாவிதமான மருத்துவ முறைகளும் கொண்ட பன்நோக்கு மருத்துவ மனை, நாட்பொழுதைக் கழிக்க பணியாளர்களுடன் கூடிய முதியோருக்கான மகிழ்விடம், பன்நோக்கு சிறப்பு அங்காடி, குழந்தைகளுக்கான செயல்பாட்டோடு கூடிய சிறப்புப் பொழுதுபோக்கு மையம், எல்லா சமயத்தவரும் வழிபடும் வகையில் தியானம் செய்யும் வசதிகளோடு ஓர் ஒளிக்கோவில் போன்றவை ஏற்பாடு செய்யப்படும். இவை தவிர 20 ஏக்கரில் செய்யப்படும் வேளாண்மை விளைபொருட்களையும் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களையும் விற்பதற்காக ஒரு விற்பனை அங்காடி, மதிப்புக் கூட்டும் தொழில்கள் செய்வதற்கான ஒரு தொழிற்கூடம், இந்தியச் சமையல் முறை வழியே உணவு தயாரித்து வழங்கும் ஓர் உணவு அங்காடி, விருந்தினர்கள் தங்க விருந்தினர் இல்லங்கள், தொடர்ந்து கலை நிகழ்வுகள் நடக்கும் வண்ணம் ஓர் கலை நிகழ்த்துக் கூடம், வேளாண்மைக்கான நீர் சேகரிப்பு மையம், பால் உற்பத்திக்கான கால்நடை வளர்ப்புக் கூடம் மற்றும் மேய்ச்சல் நிலம், சாண எரிவாயு உற்பத்திக் கூடம், வேளாண்மைக்கான இயற்கை உர உற்பத்திக் கூடம், எல்லாவித உற்பத்திப் பொருட்களையும் பாதுகாப்பாகச் சேமித்து வைக்க குளிர்பதனப் பாதுகாப்பு மையம், மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்ய சூரிய ஒளி மின்சாரம் தயாரிக்கும் ஏற்பாடு போன்ற எல்லா வசதிகளும் செய்யப்படும்.


## உள்ளே...

சசிகலா வருகையால் சலசலப்பு!......................10
மாத்திரைகளா உயிர் பறிக்கும் யாத்திரைகளா?....12
பாழான பொருளாதாரம் சீராகுமா?....................14
உணவை வீணாக்கலாமா?..............................20
சிலிண்டர் மானியம் பெறுவது எப்படி?............25
குருப் பெயர்ச்சிப் பலன்கள்..............................39
விவசாயம் செய்யும் சென்னை இளைஞர்........46


மத நம்பிக்கைகளின் அடிப்படையில் பொதுவெளியில் கொண்டாட்டங்களுக்கு அங்கே அனுமதியில்லை. அவரவர் வீட்டிற்குள் எந்தக் கடவுளையும் வழிபட்டுக்கொள்ளலாம். வாரந்தோறும் இலக்கிய விழாக்கள், மாதந்தோறும் கலந்துண்ணும் நிகழ்ச்சிகள் ஆண்டுதோறும் கடவுள் வழிபாடுகளற்ற ஊர்த்திருவிழா போன்றவை நடத்தப்படும்.

வேளாண்மை என்பது, கூட்டுப்பண்ணையில் வாழ்வோருக்குத் தேவையான தானியங்கள், காய்கறிகள், பழங்கள், கீரைகள், மூலிகைகள், மலர்கள், வாசனைப் பொருட்கள் போன்றவற்றை விளைவிக்கும் செயற்பாடாக இருக்கும். பால் மற்றும் இறைச்சித் தேவைக்காக ஆடுமாடுகள், கோழி உள்ளிட்ட பறவையினங்கள் வளர்ப்பு செய்யப்படும். இவற்றோடு மதிப்புக்கூட்டுத் தொழிற்கூடம் இயைந்து செயல்படும். பழங்குடிகளைப் போல உடலுக்குத் தேவையான அனைத்து ஊட்டச் சத்துகளும் கிடைப்பதையும் நோய் எதிர்ப்புச் சக்தியை வலுப்படுத்துவதையும்

நோயற்றை வாழ்வை உறுதிசெய்யும் வண்ணம் அந்த வேளாண்மையும் மதிப்புக்கூட்டுச் செயல்பாடும் இருக்கும்.

இந்தச் செயல்பாடுகளைப் பொறுப்பேற்றுச் செயல்படுத்துவது பண்ணை வீட்டு உரிமையாளர்கள் கூட்டமைப்பு. இது ஒரு கூட்டுறவுச் சங்கமாக உருவாக்கப்பட்டுச் செயல்படும். தானியங்கள் உள்ளிட்ட சமையல் பொருட்களும் காய்கறி பழங்களும் எல்லா வீட்டு உரிமையாளர்களுக்கும் குறைந்தபட்சத் தேவையின் அடிப்படையில் விலையில்லாமல் வழங்கப்படும். அதற்கு மேல் தேவைப்படுபவர்கள், கூட்டுறவுச் சங்கத்தின் விற்பனை அங்காடியில் நியாயவிலையில் வாங்கிக் கொள்ளலாம். பண்ணையில் உற்பத்தியாகாத பிற தேவையான பொருட்களை கூட்டுறவுச் சங்கமே வாங்கி நியாய விலையில் விற்கும். கூட்டுறவுச் சங்கம் ஈட்டும் நிகர லாபத்தில் ஒரு பகுதி எல்லா பண்ணைவீட்டு உரிமையாளர்களுக்கும் பிரித்து அளிக்கப்படும்.

மருத்துவமனை, மருத்துவப் பணியாளர் பயிற்சியகம் விருந்தினர் இல்லம், உணவகம் உள்ளிட்ட சேவைகளை ஒப்பந்த அடிப்படையில் வெளி நிறுவனங்களைக் கொண்டு செயல்படுவதைக் கூட்டுறவுச் சங்கம் உறுதி செய்யும்.

இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக ஜனமித்ரா தொண்டு நிறுவனம் முதலீட்டாளர்களை ஏற்பாடு செய்து தரும். அகிம்சா தொண்டு நிறுவனம், கருத்துவருவாக்கம், வேளாண்மை மற்றும் பிற உற்பத்திக்கான செயல்திட்டம் போன்றவற்றைத் தயாரித்து அதற்கான துறைசார் நிபுணர்களைக் கொண்டு இத்திட்டம் நிறைவேற்றப்படுவதை உறுதிசெய்யும்.

தற்சார்புக் கூட்டுப் பண்ணைத் திட்டத்தின் மாதிரி முயற்சியாக சென்னைக் கிழக்குக் கடற்கரைச் சாலையில் 100 ஏக்கர் நிலம் அடையாளம் காணப்பட்டு, அடிப்படைத் திட்டமிடலை இந்த இரண்டு தொண்டு நிறுவனங்கள் தொடங்கியிருக்கின்றன. இதனை நிறைவேற்றிய பின்னர், இது போன்ற திட்டத்தினை நாடு முழுமையும் நிறைவேற்ற அந்த நிறுவனங்கள் திட்டமிட்டிருக்கின்றன.

இத்திட்டம் செயபடுத்தப்படும் போது சமூக நலம் விழையும், தற்சார்பு வாழ்க்கை வாழ விரும்பும் அனைவரும் இத்திட்டத்தை வெற்றி பெறச் செய்வார்கள் என்பது எமது திண்ணமான எண்ணம்.

வாங்க... விவசாயம் பண்ணலாம்..!

✍எம்.எஸ்.மூர்த்தி


# மித்ரா டைம்ஸ்

மித்ரா -06 நவம்பர் 2020 டைம்ஸ்-06

அச்சிட்டு வெளியிடுபவர் – ஆசிரியர்
**எம்.எஸ்.மூர்த்தி**

நிர்வாக ஆசிரியர்
திருமதி. **சுஜாதா மூர்த்தி**

செய்தி ஆசிரியர்
மணவூர் **கி.விடாரண்யம்** பி.ஏ.,பி.ஜி.எல்.,
9789837069, 9962177865

இதழ் சிறப்பு ஆலோசகர்
**பாவரசு பாரதி** சுகுமாறன்
**(தமிழக அரசின் பாரதியார் விருதாளர்)**

நிர்வாக ஆலோசகர்
**ஆர்.குணசேகரன்**

செய்தி இணை ஆசிரியர்கள்
**பெரும்பாக்கம் அருண்** 9094447057
**சக்தி வி.சேதுபதி** 8778473634
**ஆ.சதீஷ்குமார்**
**வி.பிரகாஷ்**

நிர்வாக மேலாளர்
**ச.அகிலன்**

இணையதள செய்தியாளர்
**எஸ்.சுருதிலட்சுமி** பி.எஸ்சி.,

சட்ட ஆலோசகர்
**வி.என்.பிரசாத்** எம்.ஏ.,பி.எல்.,

வடிவமைப்பு
**அர்ஷ் டிசைன் மீடியா** 8190962034

விளம்பரம், சந்தா தொடர்புக்கு
திருமதி. **இளவரசி**
044-23743007/8



**அலுவலகம்;**
001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா அவென்யு,
9, சூளைமேடு ஹைரோடு, சென்னை – 94.
தொடர்பு: 044-23744661, 2374300718

**8248585067**
mitratimes2015@gmail.com
www.mitratimes.com



சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் மித்ரா குழும நிறுவனத்தலைவர் திரு எம்.எஸ்.மூர்த்தி அவர்களுடன் அஹிம்சா அக்ரி டிவிஷன் திரு.கனகராஜ், திரைப்படக் கலைஞர்கள் எஸ்.என்.பார்வதி, கலாமணி மற்றும் மலர்விழி ஆகியோர் பங்கேற்றனர்.



சென்னை தொழிலதிபர் திரு.எஸ்.விஸ்வநாதன் – வி.சந்தியா தம்பதியரின் அருந்தவச் செல்வி வி.அப்ஸரா பி.இ., – எ.பிரசன்னா.எம்.டெக்.(திரு.எழில்வளவன் – திருமதி.ரேவதி வளவன் புதல்வர்) நிச்சயதார்த்தம் நிகழ்ச்சி 29/10/2020 சென்னை அண்ணாநகரில் நடந்தது. இதில் பங்குபெற்று மித்ரா டைம்ஸ் ஆசிரியர் திரு. எம்.எஸ்.மூர்த்தி வாழ்த்தினார். உடன் பெரம்பலூர் பிரம்மரிஷி மலை சித்தர் மகாலிங்கசித்தர்,ஆர்.டி.ஒ. திரு.ராம்குமார், தொழிலதிபர் திரு.தனசேகர் ஆகியோர் உடன் வாழ்த்தினர்.

# தொழிலும் தமிழும் இரு கண்கள்!

## கவிஞர் பாக்கியலட்சுமி



இந்தியாவின் இதயம் கிராமங்களில் இருக்கிறது என்ற மகாத்மாவின் வார்த்தைகளை மெய்ப்பிக்கும் வகையில் இன்று பிரபலங்களாக உள்ள பெரும்பாலோர் கிராமங்களில் இருந்து அதன் மண் வாசனையையும், கள்ளம் கபடமற்ற வாழ்க்கை முறையையும் உணர்ந்து நகரங்களில் தஞ்சம் அடைந்தவர்கள்தான். அவர்களில் ஒருவர்தான் பாக்கியலட்சுமி.




செஞ்சியை அடுத்த கீழ் செவலம்பாடி கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர்.

சமூகமும் சுற்றுச்சூழலுமே மனிதர்களை வளர்த்தெடுக்கிறது என்றாலும், ஒரு சின்ன எண்ண அலை... மற்றவர்களின் மீது உண்டாகும் ஒரு பிரமாண்ட உணர்வு அந்த திசையை நோக்கி நம்மையும் நடைபோட வைத்து விடும்.

பெண்களுக்குரிய விடுதலை.. முன்னேற்றம் என்பதெல்லாம் அவர்கள் கற்கும் கல்வியில்தான் உள்ளது என்பதை உணர ஆரம்பித்த பாக்கியலட்சுமிக்கு கல்வியின் மீது அதீத நாட்டம் உண்டானது

ஒரு லட்சியத்தில் உறுதியாக இருப்பவர்கள் அதில் வெற்றி பெறுவார்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் முதுகலைப் பட்டமும், கல்வியியலில் இளங்கலைப் பட்டமும் பெற்றதுடன் உடனடி வேலைவாய்ப்பு என்பதை நோக்கி லேப் டெக்னாலஜியில் மாஸ்டர் பட்டமும் பெற்றவருக்கு, அவருடைய குடும்பத்தினரின் வாழ்க்கைப் பயண திசையில் சென்னையை நோக்கி இடம் பெயர வைத்தது.

சென்னையில் இவருடைய சகோதரர் உருவாக்கிய கல்லூரிகள் மற்றும் பள்ளிகளை நோக்கியதான தரனிஷ் சினர்ஜிசர்ஸ் நிறுவனம் மாணவர்களுக்கு அடையாள அட்டைகள் மற்றும் பைகள், ஷீல்டுகள்,சான்றிதழ்கள், நோட்டுகள் போன்றவற்றைத் தயாரிப்பதில் முன்னணி நிறுவனமாகவே மாறத் தொடங்கியது.

அதன் காரணமாக தன் சகோதரருக்கு உதவியாக நிறுவனத்தில் செயல்பட ஆரம்பித்த பாக்கியலட்சுமி தனது திறமை மற்றும் அணுகுமுறையின் காரணமாக பல்வேறு கல்வி நிறுவனங்களையும் தன் பக்கம் ஈர்த்தார்.



தமிழ் மொழியின் மீதிருந்த ஆர்வம், ஆசிரியராக பணியாற்றக்கூடிய பட்டப் படிப்பு என்று இவருக்குள் மையமிட்டிருந்த திறன், இவருடைய தொடர்புகளில் வந்த கல்வி நிறுவன ஆசிரியர்கள், நிர்வாகிகளை இவர் பக்கம் ஈர்க்க ஆரம்பித்தது.

மாணவர்கள் மத்தியில் குறைந்து வரும் தாய்மொழிப் பற்று, தமிழர்களின் கலைகள் பற்றி அறிய முடியாத நிலை என்று எல்லாவற்றையும் கண்டறிந்தவர் முதலில் அவர்களுக்குள் மொழியின் மீதான ஆர்வத்தை அதிகரித்திட வேண்டும், தமிழர்களின் கலைகளை மாணவர்களும் அறியும்படி செய்தல் வேண்டும் என்ற நோக்கத்துடன் உலகத் தமிழ்ப் பண்பாட்டுச் சங்கம் என்று ஒரு அமைப்பினை உருவாக்கி அதற்கு அரசிடம் பதிவும் பெற்றதுடன் இலக்கிய ஆளுமைகளையும் தமிழ் ஆர்வலர்களையும் உலகத் தமிழ்ப் பண்பாட்டுச் சங்கத்திற்குள் கொண்டு வந்து 2021 ஜனவரி திங்களில் சென்னையில் தமிழ் தமிழர் எழுச்சி மாநாட்டினை சங்கத்தின் தலைவரான தமிழ்நாடு அரசின் மகாகவி பாரதியார் விருதாளரான பாவரசு. பாரதிசுகுமாரன் தலைமையில் நடத்திட திட்டங்கள் தீட்டி செயல்படவும் ஆரம்பித்துள்ளார்.

தேசமும் தெய்வீகமும் தனது இரண்டு கண்களாக கொண்டு, தேசபக்தி கொண்ட இயக்கத்தின் துணையையும் தனது பணிகளுக்கு ஆதரவாக பெற்றுள்ளார்.

இளைய தலைமுறையை வளர்த்தெடுப்பதின் வழியாகத்தான் எதிர்கால இந்தியாவை மிகச் சிறப்பானதாக உருவாக்கிட முடியும் என்பதை உணர்ந்து மாணவர்களிடம் இயல் இசை நாடகம் போன்றவற்றை எடுத்துச் செல்லும் வழியில் தனது சங்கம் சார்பாக பல்வேறு குழுக்களை உருவாக்கி அதன் வழியாக பேச்சுப்போட்டி, வழக்காடு மன்றம், கவிதைப் போட்டி, என்று தொடர்ந்து நடத்தி வரும் பாக்கியலட்சுமி தான் நடத்த இருக்கும் மாநாட்டில் மாணவ மாணவிகளின் நடனங்களையும் நடத்திட முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார்.

பிரபல கல்லூரிகள் மற்றும் பிரபல பள்ளிகளில் தனது தயாரிப்புகளின் வாயிலாக தொழிலில் வெற்றியாளராக பவனி வந்து கொண்டிருக்கும் பாக்கியலட்சுமி முனைவர் பட்டம் பெறுவது தனது லட்சியம் என்றும் கூறுகிறார்.

கல்வி என்பது வேலை வாய்ப்பை நோக்கியது மட்டுமல்ல அறிவை விசாலப் படுத்திக் கொள்வதும் கூட, வேலை கிடைத்தால்தான் வாழ முடியும் என்ற குருட்டு நம்பிக்கையை உடைத்துப் போட்டு விட்டு, வேலை கிடைக்கும் வரை வாழ்க்கைக்காக நம்மிடம் உள்ள திறமையைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்... என்றும் பாக்கியலட்சுமி கூறுகிறார்.

உழைத்து வாழ முடிவு செய்யும் ஒவ்வொருவருக்கும் அதற்குரிய வாசல் கண்டிப்பாகத் திறக்கும், சில நேரங்களில் அதற்குரிய பலன் இல்லாமல் கூட போகும், ஆனால் எடுத்து வைத்த அடியில் பின் வாங்காமல் இருப்பவர்கள் நிச்சயமாக ஒரு கட்டத்தில் வெற்றி அடைந்தே தீருவார்கள் என்று அழுத்தமாகவே கூறும் பாக்கியலட்சுமியை நாள்தோறும் ஏதேனும் ஒரு கல்லூரியிலோ அல்லது பிரபல பள்ளியிலோ பார்க்க முடியும்.

அரசு வேலையை மட்டும் எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்காமல் சுய தொழிலில் தனது கவனத்தை திருப்பி வெற்றியாளராக பவனி வந்து கொண்டிருக்கும் கடும் உழைப்பாளியான பாக்கியலட்சுமி இலக்கிய உலகிலும் தனது அடியை அழுத்தமாக பதித்துள்ளார், வாய்ப்பினை எதிர்ப் பார்ப்பவராக அல்ல மற்றவர்களுக்கு வாய்ப்பினை வழங்கிடக் கூடியவராக.

தமிழ்மொழி வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்ட பாக்கியலட்சுமியின் பணியும் சாதனைகளும் தொடரட்டும்...

✍ **சுஜாதா மூர்த்தி**



# உன்னுடனான தீராப்பொழுது!

## உமாமகேஸ்வரி ஸ்கந்தவேள்

'ஆ' காட்டு எனச்சொல்லி
ஆசையாய் உணவுதர
உன்வாயும் எம்மனசும்
ஒண்ணாவே நெறையுது...

அவசரமா நாலுவாய்
நானள்ளித் திங்கையிலும்
அருகில் நீ இல்லேன்னா
தொண்டை குழி தாண்டாது...

இதமாக இமைமூட
எத்தனிக்கும் வேளையிலே
சுகமான சுமையாக
எந்தன்மேல் விழுகின்றாய்...

அடுத்து செய்திட
ஆயிரம் இருந்தும்
தடுத்து நிறுத்தி
தாலாட்டச் சொல்கின்றாய்...

இருகண்ணில் ஒருகண்ணை
எப்பவுமே ஒம்மேல
தப்பாம வெச்சித்தான்
செய்கின்றேன் வீட்டுவேலை...

உன்னுடனான தீராப்
பொழுதும் சேர்ந்து
நாளுக்கு நாப்பத்தெட்டு
மணிநேரம் எனக்கு!!!

கண்விழித்துப் பார்த்ததுமே
காணவில்லை என்றாலோ
விண்ணதிரக் குரலெழுப்பி
கூப்பாடு போடுகின்றாய்...

கண்டதுமே தாவிவந்து
கழுத்தைக் கட்டிக்கொண்டு
கன்னங்கள் இரண்டிலுமே
முத்தமழை பொழிகின்றாய்...

கெஞ்சிக் கூத்தாடி
குளியென்று சொன்னாலோ
கொஞ்சிக் குலாவி
காலைச்சுற்றி வருகின்றாய்...

ஒருவழியாய் குளிப்பாட்டி
உடைமாற்றி விட்டதுமே
சிறுவிழியால் எனைப்பார்த்து
அடைமழையாய் சிரிக்கின்றாய்...

# சசிகலா வருகையால் அ.தி.மு.க.வில் சலசலப்பு!



> தமிழக அரசியலில் அசைக்க முடியாத சக்தியாக திகழ்ந்த ஜெ.வின் மறைவு, அ.தி.மு.க.வின் அஸ்திவாரத்தையே ஆட்டம் காணச் செய்தது, அ.தி.மு.க.ஆட்சி கவிழ்ந்து விடும் என்று எதிர்க் கட்சிகள் நினைக்க ஆரம்பித்தன.

ஜெ.வின் நிழலாக இருந்து அரசியலிலும் அதிகாரத்திலும் கொடிகட்டிப் பறந்த சசிகலாவிற்கு முதல்வர் பதவியின் மீது உண்டான ஆசை அ.தி.மு.க.வில் பெரும் சல சலப்பை உண்டாக்கிய நிலையில், ஜெ வைப் போலவே சசிகலா வேடம் போட்டது தமிழக மக்களையே முகம் சுழிக்க வைத்தது, ஓ.பி.எஸ் அணி சசிகலாவிற்கு எதிரானது.

அ.தி.மு.க.ஆட்சி முடிந்து விட்டது என்ற எண்ணத்திற்கு பெரும்பாலானோர் வந்துவிட்ட நிலையில் , அதன்பின் நடைபெற்ற சம்பவங்கள் அ.தி.மு.க.வை ஆட்சிக் கட்டிலில் நிலைபெற வைத்தது.

ஊழல் வழக்கில் சசிகலா குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டு சிறைச்சாலை செல்ல ஆட்சியின் பாதுகாவலராக எடப்பாடியார் உருவெடுத்தார்.

எடப்பாடியார் ஆட்சியை எப்படியாவது கவிழ்த்து விட வேண்டும் என்று தி.மு.க.ஸ்டாலினும், அ.தி.மு.க.வினால் அடையாளம் பெற்ற ஓ.பி.எஸ் சும் ஒரு சேரவே முயற்சித்தனர்.

எடப்பாடியார் ஆட்சி நம்பிக்கை வாக்கெடுப்பு கோரிய போது, தன்னை வளர்த்து விட்ட அ.தி.மு.க.வையே அழித்து விட வேண்டும் என்ற நோக்கில் தி.மு.க.வுடன் சேர்ந்து அ.தி.மு.க.ஆட்சிக்கு எதிராக வாக்களித்தது ஓ.பி.எஸ்.அணி. அந்த நிலையிலும் தன் பலத்தை நிரூபித்து எம்.ஜி.ஆரால் தோற்றுவிக்கப்பட்டு ஜெ.வால் வளர்க்கப் பட்ட அ.தி.மு.க.வை பாதுகாத்தார் எடப்பாடியார்.

அதன் பின் தமிழக மக்கள் மனதில் இருந்து காணாமலே போய் விட்டார் சசிகலா என்று சொல்வதை விட, ‘அம்மாவின் பெயரை வைத்துக்கொண்டு அம்மாவிற்குத் தெரியாமல் ஊழல் செய்தது, கொள்ளையடித்தது எல்லாம் சசிகலாதான்’ என்றும் மக்கள் பேச ஆரம்பித்தனர்.

முதல்வர் பதவியில் அமர்ந்த எடப்பாடியார்

# அணிகள் இணைந்தாலும் மனங்கள் இணையவில்லை

● **திருக்கோவிலூரான்**

பல வழிகளிலும் அ.தி.மு.க.வையும் அரசையும் பாதுகாத்திடும் முயற்சியில் இறங்கினார், அ.தி.மு.க.விற்கு துரோகம் செய்து, ஜெ அமைத்த ஆட்சியைக் கவிழ்த்திட முயற்சித்த ஓ.பி.எஸ் சையும் மீண்டும் கட்சிக்குள் கொண்டு வந்து அ.தி.மு.க.உடைந்து விடவில்லை, எவராலும் உடைக்கவும் முடியாது என்பதை நிரூபித்த எடப்பாடியார் தொண்டர்களையும் நிர்வாகிகளையும் அரவணைத்து ஆட்சியை நிலை நிறுத்தினார்.

எடப்பாடியார் தவிர்த்து வேறு எவர் முதல்வராக இருந்திருந்தாலும் ஆட்சியும் நீடித்திருக்காது கட்சியும் இருந்திருக்காது என்று அ.தி.மு.க.வினர் மட்டுமல்ல எதிர்க் கட்சியினரும் பேசுகின்ற அளவிற்கு செயல்பட்டு அதில் வெற்றியையும் கண்டிருக்கிறார் எடப்பாடியார். தமிழக மக்களும் பெருந்தலைவர் காமராஜருக்குப் பின் ஒரு தமிழர் முதல்வராகி இருக்கிறார், மக்களில் ஒருவர்போல செயல் பட்டு எளிமையானவராகத் திகழ்கிறார் எடப்பாடியார் என்று நினைக்கும் அளவிற்கு மக்கள் மனதிலும் இன்று இடம்பெற்றுள்ளார் எடப்பாடியார்.

அ.தி.மு.க.ஆட்சியை வீழ்த்தி விட வேண்டும் என்று பல முயற்சிகளை மேற்கொண்டு எந்த முயற்சியும் வெற்றி அடையாமல் கடைசியாக அடுத்த தேர்தலிலாவது வெற்றி பெற வேண்டும் என்ற முடிவுடன் பிரசாந்த் கிஷோரின் ஐபேக் நிறுவனத்தின் உதவியை நாடி வடக்கே இருந்து அழைத்து வந்திருக்கிறது தி.மு.க.தலைமை. அந்த அளவிற்கு அசைக்க முடியாத சக்தியாக எடப்பாடியாரால் உருவெடுத்துள்ளது இன்று அ.தி.மு.க. எதிர் வரும் பொதுத் தேர்தலையும் எப்படி சந்திக்க வேண்டும், அதற்காக என்ன என்ன செய்ய வேண்டும் என்பதையெல்லாம் திட்டமிட்டு செயல்பட ஆரம்பித்திருக்கின்றனர் அ.தி.மு.க.வினர்.

எல்லாமே சரியாகி, ஆட்சியை இழந்து விட்டால் கட்சி சீர்குலைந்து விடும் என்பதையும் உணர்ந்து அ.தி.மு.க. மீண்டும் வெற்றி பெற்று அரியணை ஏற வேண்டும் என்ற நோக்கத்துடன் உள்ளுக்குள் இருக்கும் பிரச்னைகளை எல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு இன்று அ.தி.மு.க.வின் வெற்றிக்காக எடப்பாடியார் முழு மூச்சாக செயல் பட ஆரம்பித்துள்ளார்.

ஆனாலும், சமீபத்தில் கட்சிக்குள் பூகம்பத்தை உண்டாக்கிய ஓ.பி.எஸ்சும் அவரது அணியினரும் முழுமையான ஈடுபாட்டுடன் நட்பு கொள்ளவில்லை என்பதை தாமரை இலைமேல் தண்ணீர்போல் இருக்கும் அவர்களுடைய செயல்பாடுகளே காட்டிக் கொண்டிருக்கிறது.

மாநிலம் முழுவதும் ஓ.பி.எஸ் அணியினர் இணைந்தும் இணையாமல் எந்த நேரத்திலும் தங்களை வேறுபடுத்தி காட்டிக் கொள்ளும் நிலையிலேயே உள்ளனர். இந்த சூழலிலும் தேர்தல் நேர சூழல், அ.தி.மு.க.மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை, அமையப் போகும் கூட்டணி, உதவிக்கு வரும் அமைப்புகள், தேர்தல் அறிக்கை, தேர்தல் பணி, கடைசி நேர கவனிப்பு, எடப்பாடியாரின் சாணக்கியத்தனம் என்பதெல்லாம் மீண்டும் அ.தி.மு.க.வை ஆட்சியில் அமர வைத்தாலும் வைக்கலாம்.

இத்தகைய சூழலில், ஊழல் வழக்கில் சிறையில் இருக்கும் சசிகலா விரைவில் வெளியில் வரலாம் என்று ஒரு தகவல் வெளியாகியுள்ளது.

சசிகலா வெளியில் வந்தாலும் அவரால் இப்போது தேர்தலிலும் நிற்க முடியாது, முதல்வர் பதவியின் மீதும் ஆசை கொள்ள முடியாது, ஆனாலும் சசிகலாவால் பொறுப்பிற்கு வந்த, பதவிகளைப் பெற்ற ஒரு சிலர் சசிகலாவிற்கு ஆதரவு தெரிவித்தாலும் தெரிவிக்கலாம் என்றாலும் அவர்கள் ஒரு சிறு பகுதியினராகத்தான் இருப்பார்கள், அவர்கள் கூட ஆட்சி அதிகாரத்தில் உள்ள எடப்பாடியாரின் ஆதரவு இருந்தால்தான் தேவையானவற்றை சாதித்துக் கொள்ள முடியும் என்ற எண்ணத்துடன் சசிகலாவை சந்திப்பதையே தவிர்க்கலாம்.

இது ஒரு பக்கம் என்றாலும், மறு பக்கம் இணைந்து செயல் படுவதாக காட்டிக்கொண்டு ஒட்டியும் ஒட்டாமலும் உள்ள ஓ.பி.எஸ். சசிகலா வருகைக்குப் பின் என்ன செய்வார் என்பதும் ஒரு கேள்வியாகவே இருக்கிறது.

என்ன நடந்தாலும் இன்றுள்ள அரசியல் சூழல் அ.தி.மு.க.என்பது எடப்பாடியாராகவே உள்ளது, மூன்று வருடமாக ஆட்சியையும் கட்சியையும் காப்பாற்றிய எடப்பாடியார் எல்லாவற்றையும் எதிர்கொண்டு அ.தி.மு.க.வை வழி நடத்துவார் என்பதாகவே உள்ளது. ■



# மாத்திரைகளா உயிர் பறிக்கும் யாத்திரைகளா?

ஆங்கில மருத்துவம் நான்கு வகை மருந்துகளை வைத்தே இயங்குகிறது.

1. ஜுரம் – குறைப்பதற்கான மாத்திரைகள்.

2. Antibiotics – நுண்ணுயிர்க் கொல்லி – ஆன்டிபயாட்டிக் மாத்திரைகள்.

3. Anti – inflammatory Drugs – வலி, வீக்கம், குறைப்பதற்கான மாத்திரைகள்

4. Alliergy Drugs – ‘அலர்ஜி’க்கான மாத்திரைகள்.

இது குறித்து மருத்துவ மாணவரும் அவருக்கு பாடம் சொல்லும் புரபொசரும் பேசிக்கொண்டது நம் காதில் விழுந்தது. நீங்களும் கேளுங்க....

நான்: சார், எனக்கு சில சந்தேகங்கள் ஏற்பட்டிருக்கிறது. கேட்கலாமா?

ப்ரொஃபசர்: 3ம் ஆண்டுக்குள் நுழைந்து 3 மாதங்கள்கூட ஆகவில்லை. அதற்குள் என்ன சந்தேகம்?

நான்: ஆரம்ப பாடத்திலேயே சந்தேகம் வந்து விட்டது. எனவே ஆரம்பத்திலேயே தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

ப்ரொஃபசர்: சரி. கேள்.

நான்: மருந்துகள் சம்பந்தமான Pharmacology-யில் முதல் பாடமே ஹிப்போக்ரேட்டஸ் என்பவரைப் பற்றியது.

ப்ரொ: ஆம். அவர் தாம் பா “நவீன மருத்துவத்தின் தந்தை” என்றழைக்கப்படுபவர். அவர் மட்டும் இல்லையென்றால் மருந்துகளே உருவாகியிருக்காது. அவரைப் பற்றி என்ன சந்தேகம்?

நான்: அவரைப் பற்றி எந்த சந்தேகமும் இல்லை. அந்தப் பாடத்தில் மருந்துகளைப் பற்றி அவர் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

“ஒறு மருந்தை ஒறு நோயயாளியிடத்தே பிரயோகிக்கும்போது, அவர் நோய் குனமடையாவிட்டாலும் பரவாயில்லை; மருந்துகளின் காரணமாக அவர் வேறு நோய் தொந்தரவுகளுக்கு ஆளாகக் கூடாது. புது நோய்களும் உருவாகக்கூடாது. அவ்வாறு மருந்துகளுக்குப் பக்க விளைவுகளாக வேறு வேறு நோய்கள் தோன்றினால், அந்த மருந்துகளை உபயோக்கிக்கக் கூடாது. அது உடல் நலனுக்குக் கேடு. அது வைத்தியமும் இல்லை.”

சார், நவீன மருத்துவத்தின் தந்தை என்றழைக்கப்படும் ஹிப்போக்ரேட்டஸ் குறிப்பிடும், எச்சரிக்கும் இந்தக் கொள்கையை ஏன் நாம் கடைபிடிப்பதில்லை. நாம் நோயாளிகளுக்குக் கொடுக்கும் ஒவ்வொரு மருந்துக்கும் ஒன்றல்ல, இரண்டல்ல, எக்கச்சக்கமான பக்கா விளைவுகள். இதற்கு உங்கள் விளக்கம் என்ன?

புரொ: உன்னுடைய கேள்வி சரிதான். நம்முடைய மருத்துவம் உண்மையான நியாயமான மருத்துவமில்லைதான். இதெல்லாம் பார்த்தால் ‘ப்ராக்டீஸ்’ பிழைப்பு நடத்தவே முடியாதே?

நான்: நோயாளிகளுக்குத் துரோகமான தொழில் என்று தெரிந்தும் நாம் செய்யும் இந்தப் பாதகம் எப்படி பிழைப்பு ஆகும்?

புரொ: நோயாளிகளும் நன்மை அடையத்தானே செய்கிறார்கள்? எத்தனை ஆயிரக்கணக்கான நோயாளிகள் நம்மைச் சுற்றி வருகிறார்கள் பார்! நம்மால் அவர்களுக்கு ஏதும் நன்மைகள் இல்லை என்றால் இவ்வளவு கூட்டம் வருமா?

நான்: நம் மருத்துவ அறிவின்படி நோயாளி துன்பத்துடன் தான் வருகிறார். மருந்துகள் கொடுக்கிறோம். பக்கா [பக்க] விளைவுகள் நிச்சயம். ஒவ்வொரு மருந்துக்கும் இருக்கிறது என்பதை நாம் நன்றாக அறிந்திருக்கிறோம். ஒன்றோ, இரண்டோ பக்க விளைவுகள் இல்லை. எண்ணிக்கையில்லா பக்க விளைவுகள். பக்க விளைவுகள் ஒவ்வொன்றும் நோய்கள் தானே? ஒரு நோயாளிக்கு, பல நோய்களை நம் கொடுக்கும்போது அது எப்படி நோய்களைக் குணப்படுத்தும்?

புரொ: அவை பக்க விளைவுகள்தான். நோய்கள் அல்ல.

நான்: பக்க விளைவுகள் என்றால் என்ன? நோய்கள் என்றால் என்ன? வித்தியாசம் என்ன?

புரொ: நோய்கள், உடலில் தானே தோன்றுவது. பக்க விளைவுகள் மருந்துகளால் ஏற்படுவது. அது தானே சரியாகி விடும். மருந்தை நிறுத்தி விட்டால் போதும்.

நான்: நோய்கள், தானே சரியாகாதா?

புரொ: சரியகாமல்தானே நோயாளிகள் நம்மிடம் வருகிறார்கள்? தானே சரியாகியிருந்தால் ஏன் வரப் போகிறார்கள்?

நான்: நோய்கள் தானே சரியாகாது என்றால், உடலில் நோய் எதிர்ப்பு சக்தி என்று ஒன்று இருக்கிறதே? அதன் வேலை என்ன?

புரொ: ஆம். உடலில் நோய் எதிர்ப்பு சக்தி இருக்கத்தான் செய்கிறது. அதன் வேலை நோயை எதிர்ப்பதாகும்.

நான்: ஒரு நோய் வந்து விட்டால், நோயை எதிர்த்து நோய் எதிர்ப்பு சக்தி எப்போது உருவாகிறது?

புரொ: நோய் ஏற்பட்ட பிறகே நோய் எதிர்ப்பு சக்தி உருவாகிறது. நோயின் வீரியம் ஒரு குறிப்பிட்ட அளவை அடைய வேண்டும். The disease force must reach an optimal level before defense force develops against the particular disease.

நான்: சார், தவறாக நினைக்காதீர்கள். அப்படியானால் நிச்சயமாக நோயை எதிர்த்து, நம் உடலிலேயே ஒவ்வொரு நோய்க்கும் எதிர்ப்பு சக்தி தோன்றி விடும். பின்னர் அந்த எதிர்ப்பு சக்தி குறிப்பிட்ட வியாதியை நம் உடலில் மீண்டும் தோன்ற விடாது. அந்த நோயிலிருந்து நிரந்தரமாக Immunity விடுதலை கிடைக்கப்பெறுவார்கள். சரிதானே?

புரொ: சரிதான். ஆனால் வாழ்நாள் முழுதும் திரும்பவும் அந்த நோயே வராது என்று சொல்ல முடியாது.

நான்: சரி, அப்படியானால் குறைந்த பட்சம் அடிக்கடி வராமலாவது இருக்கும் இல்லையா?

புரொ: ஆம்.

நான்: நோய் எதிர்ப்பு சக்தி இருப்பதாலும், குறிப்பிட்ட வியாதிக்கு எதிராக ஏற்கனவே Immunity, நோய் எதிர்ப்பு சக்தி தோன்றி விட்டதாலும், நோய் திரும்ப வந்தாலும், அந்த நோய் பெரிய பாதிப்பை ஏற்ப்படுத்துவதர்க்கு முன்பாகவே அழிக்கப்பட்டு விடும் இல்லையா?

புரொ: சரிதான்.

நான்: ஒரு நோய் திரும்பவும் வரும்போது, அந்த நோயை எதிர்த்து நோய் எதிர்ப்பு சக்தியின் வீரியம் இன்னும் உறுதியாகும் இல்லையா? இதன் விளைவாக எவ்வளவு தான் ஒரு நோய் திரும்ப திரும்ப வந்தாலும், ஒவ்வொரு முறையும் திரும்பவும் நம் உடலில் ஏற்படும் அந்த நோய் ஒரு முறைக்கு அடுத்த முறை பலவீனமடைந்து தானே இருக்கும்?

புரொ: ஆம்.

நான்: இந்த இயல்பு உடல் சுகத்திற்கு மாறாக, நம்மிடம் வரும் நோயாளிகள் ஒவ்வொருவரும், சில நாட்கள் அல்லது சில வாரங்கள் சுகத்திற்குப் பிறகு (?) மீண்டும் அந்த நோயால் முந்தியதை விட பலமாகத் தாக்கப்பட்ட நிலையில் அல்லவா வருகிறார்கள்? இது நமக்கு எதை உணர்த்துகிறது?

புரொ: நோய்களை உருவாக்குவதும், நோய்களை வளர்ப்பதும், நோயாளிகள் பெருக்கத்திற்கும், பின் நோயாளிகள் சாவதும் நம்மால் தான் என்றா சொல்ல வருகிறாய்.

நான்: தப்பாக நினைக்காதீர்கள். என் சந்தேகம் தான் அப்படிக் கேட்டேன். நீங்களும் அதே சந்தேகத்தில்தான் இருப்பதாகத் தோன்றுகிறது.

புரொ: நீ ஆபத்தானவன். இதற்கு மேல் உன்னிடம் பேசினால், ஆங்கில மருத்துவத்தையே காட்டிக் கொடுத்து விடுவாய் !

நான்: நான் எப்படி சார் கட்டிக் கொடுக்க முடியும்?! எனக்கு யாரும் காட்டித் தரவில்லையே? உண்மை தானாகவே வெளிவருகிறது.

புரொ: ஏம்ப்பா உயிரை எடுக்கறே? உங்கிட்டே இவ்வளவு நேரம் பேசியதே ஜாஸ்தி.

நான்: அது வீண் போகவில்லை சார்! உங்களால் தான் சார் என சந்தேகம் தெளிவடைந்தது. சந்தேகமே இல்லை. 'நாம் தான் நோய்களை உருவாக்குகிறோம்; நோய்களை வளர்க்கிறோம்' என்ற உண்மையை எவ்வித சந்தேகமுமின்றி உங்களால் தான் சார் உணர முடிந்தது. இன்னும் ஒரே ஒரு விளக்கம் வேணும் சார்.

புரொ: என்ன? (எரிச்சல் வந்துவிட்டது சாருக்கு)

நான்: ஆங்கில மருந்துகளைக் கொடுக்கும்போது புதிய வியாதிகளை நாம் நோயாளியின் உடலில் புகுத்துகிறோம்?

புரொ: ஏய் குழப்பாதே. அதுக்குப் பெயர் பக்க விளைவுகள். அதாவது Side Reactions. புதிய நோய்கள் என்று உளறாதே.

நான்: Side Reactions என்றே கூறுகிறேன் சார், இந்த பக்க விளைவுகளுக்குக் காரணம், உடல் எதிர்ப்பு சக்தி நாம் நோயாளிகளுக்குக் கொடுத்த மருந்துகளை உடலின் நோய் எதிர்ப்பு சக்தி எதிர்த்து அழிப்பதால் ஏற்படுகிறதா?

புரொ: அதப்பத்தியெல்லாம் தெரியாது. நீ மூன்றாம் ஆண்டு எம்.பி.பி.எஸ். தான் படிக்கிறாய். சொல்லிக் குடுக்கறதைப் படிச்சிட்டு பாஸ் பண்ற வழியைப் பார்.

நான்: படிச்சிட்டுத்தானே சார் சந்தேகம் கேட்கிறேன். எப்படிப் பாஸ் பண்ணாமல் போய் விடுவேன்?

புரொ: எங்கிட்டே கேள்வி கேட்கிற மாதிரி மத்த பேருங்ககிட்ட கேட்டுடாதே. ஜென்மத்துக்கும் நீ பாஸ் பண்ணமாட்டே!

நான்: சரி சார், அப்ப சந்தேகம்?

புரொ: யோவ்! போய்யா! (ப்ரொஃபசர் வேகமாக திரும்பிப் போயே போய் விட்டார்)...

✍ *சித்த பித்தன்*



# பாழான பொருளாதாரம் சீராகுமா?

இதுவும் கடந்து போகும்? சுலபமாகச் சொல்லி விடலாம். ஆனால், அப்படிக் கடந்து போவது எளிதான ஒன்றல்ல என்று நமக்கு. ஏன் உலகிற்கே பாடம் கற்பித்துள்ளது. கொரோனா பாதிப்புகளில் தொடரும் இந்த கால கட்டம்.

உலகப் பொருளாதாரத்தையே உலுக்கிப் போட்டிருக்கும். இந்த பாதிப்புகளில் இருந்து இந்தியா மீளப்போவது எப்படி?

## தடம் புரளும் பொருளாதாரம்?

135 கோடி இந்தியர்களின் வாழ்க்கையையும் கொரோனா தடம் மாற்றிப் போட்டுவிட்டது. ஏழைப் பணக்காரன், மாதச் சம்பளக்காரன், நடுத்தர வர்க்கம், தொழிலாளி என்ற எந்த பாகுபாடுமின்றி பெரும்பானவர்களை வாழ்க்கைப் பின் ஓரத்திற்கே தள்ளி விட்டுள்ளது

கடந்த 5 மாதங்கள் உள்நாட்டின் உற்பத்தி மற்றும் சேவை சார்துறைகள் பல முடங்கிப் போயின, வளர்ச்சி என்பது தளர்ச்சியை அல்ல ஏறத்தாழ பல குறுசிறு நிறுவனங்கள் மூடல் என்கிற முடிவையே முன்னெடுத்தன. பெரிய நிறுவனங்கள்

இருக்கின்றன என்றாலும் ஆட் குறைப்பு, சம்பளக் குறைப்பு, பகுதி நேர வேலைகள், என நிர்வாகச் செலவுகளை மட்டுப்படுத்துவதிலேயே முதன்மை கவனம் செலுத்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

## சமாளிப்புகள் தீர்வல்ல

சரி, உலகப் பொருளாதாரத்தை விட்டு விடலாம். இந்திய பொருளாதாரத்தை மட்டுமே எடுத்துக் கொள்வோம். பிரதமர் மோடியும் அவரது அமைச்சரவை சகாக்களும் பேசி வருவதை இரண்டுப் பிரிவுகளாகச் சுட்டிக் காட்டலாம்.

கொரோனாவின் பாதிப்புக்கும் முன்னர் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நடந்த தவறுகளே காரணம் என தங்கள் நடைமுறைத் தவறுகளால் ஏற்பட்ட அனைத்துப் பிரச்சனைகளுக்கும் குறிப்பிட்டுக் கொண்டே இருந்தார்கள்.

கொரோனாவின் தாக்குதலுக்குப் பிறகு ஏற்பட்டுள்ள இந்தியப் பொருளாதாரம் பாதிப்புகளுக்கு கொரோனாவே காரணம். பொய்களை மேலும் வலுவாகச் சொல்ல தொடங்கியுள்ளனர்.

**● ஜே.கே.மாறன்**

இப்போது உங்களுக்குப் புரிய வந்திருக்கலாம். மத்திய பி ஜேபி அரசு நமக்கு புரிய வைக்க முயற்சிப்பது இரண்டே காரணங்கள்.

அதாவது தாங்கள் கொண்டு வரும் பொருளாதாரச் சீரமைப்பு நடவடிக்கைகள் வெற்றி பெறாமல் போனதற்கும், போவதற்கும் முந்தைய காங்கிரஸ் ஆட்சிக்காலமான ஏறத்தாழ 60 ஆண்டுகள், இப்போது கொரோனா தாக்குதலே காரணம் எனச் சாதிக்க முயல்கிறது. பிரதமர் மோடியின் தலைமையிலான மத்திய அரசு.

இதெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும்... 2014ஆம் ஆண்டுக்குப் பிறகு மோடி ஆட்சிக்கு வந்துள்ள இந்த ஆறாண்டுகளில் பிரமாதமாக சொல்லத்தக்க பொருளாதார சீரமைப்பு என்பது வெற்றிகரமாக நடந்துள்ளதா என்றால் உங்கள் பதில் என்ன?

## தோல்வியடைந்த திட்டங்கள்

மோடி அரசு பிரமாதமாக அறிவித்த நிதி ஆயோக் மூலமான திட்டங்கள், பண மதிப்பிழப்பு, வரிச் சீரமைப்பு, தொழிலாளர் நலச் சட்ட மாற்றங்கள்,



**“வாரக் கடன்களால் வங்கிகளுக்கு ஏற்பட்ட மூச்சுத் திணறலைத் தடுக்க, அவற்றை பெரிய வங்கிகளுடன் இணைப்பது என்று பிஜேபி அரசு நடவடிக்கை எடுத்துள்ள போதிலும், இணைப்புக்குப் பின்னரும் எந்த வங்கியும் எள்ளளவு வளர்ச்சியும் பெறவில்லை.”**

வாகனம் போக்குவரத்து சீரமைப்பு, மசோதா, வேளாண்மை சார்ந்த பல மசோதாக்கள், வங்கிகள் விற்பனை என எது ஒன்றாவது வெற்றிகரமான இலக்கை எட்டி விட்டன? சாதனை முகடைத் தொட்டுவிட்டன. எனச் சொல்ல முடியவில்லையே?

தங்களின் பரிவாரங்களால் ஆஹா ஓஹோவென வாழ்த்து மழைகளுடன் அறிவிக்கப்பட்ட அவர்களின் பொருளாதாரத் திட்டச் சீரமைப்பு நடவடிக்கைகள், எல்லாமே தொடங்கப்பட்ட இடத்திலிருந்து கொஞ்சமே முன்னேறி இருக்கின்றன. அவ்வளவே?

புதிய புதிய பெயர்களை மட்டும் சூட்டி விட்டால் பிள்ளைகள் வளர்ந்து விடுவார்களா என்ன? மேக் இன் இந்தியா, ஸ்டார்ட் அப் இந்தியா, ஸ்டான்ட் ஆப் இந்தியா, சுய சார்பு இந்தியா, இதைப் பற்றியெல்லாம் பேசும் போது புதிய இந்தியா என்று சொல்லிக் கொண்டே இருப்பது.

இதில் எந்த ஒரு நடவடிக்கையாவது முழுமையான இலக்கை எட்டியுள்ளதா? சீரமைப்புக்காக கொண்டு வரப்பட்டதாகச் சொல்லப்பட்ட நோக்கங்களையாவது சராசரியான மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்களா? என்றால் அதுவும் இல்லை.

## தொடரும் பிரச்சனைகள்

இவர்களின் ஆட்சிக்குப்பிறகுதான் கார்ப்பரேட் கடன்கள் வாரக்கடன்களாகப் பட்டன. கடனைக் கட்டமுடியாத, அல்லது பணமில்லாத முதலாளிகள் அல்ல கார்ப்பரேட் நிறுவனர்கள் கடல் கடந்து விமானத்தில் பறந்து ஓடிப் போனார்கள்.

இவர்களை எல்லாம் சட்டப் பிடிக்குள் கொண்டுவருகிறேன் என மோடி அரசு அவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய அறிவித்த திவால் சட்டங்கள் ஏதோ பலனை அளித்தது போன்ற தோற்றந்தான் உருவாக்கப்பட்டுள்ளதே தவிர அங்கும் சறுக்கல்தான்.

வாரக் கடன்களால் வங்கிகளுக்கு ஏற்பட்ட மூச்சுத் தினறலைத் தடுக்க, அவற்றை பெரிய வங்கிகளுடன் இணைப்பது என்று பிஜேபி அரசு நடவடிக்கை எடுத்துள்ள போதிலும், இணைப்புக்குப் பின்னரும் எந்த வங்கியும் எள்ளளவு வளர்ச்சியும் பெறவில்லை.

பங்குச் சந்தைப் பக்கம் நம் பார்வையை திருப்பினால் அங்கும் பல குளறுபடிகள். அரசின் நடவடிக்கைகள் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கே சாதகமாக இருப்பதால் அவர்களின் வளர்ச்சி மட்டுமே போராட்டமான பொருளாதாரக் காலக் கட்டங்களில்கூட தாக்குப் பிடிக்கும் தன்மையுடன் இருந்ததாக, நடுநிலைப் பொருளாதார வல்லுனர்கள் குறிப்பிடுகின்றனர்.

## எதிர்ப்பார்ப்புகள்

கொரோனா பாதிப்புகளால், ஊரடங்கு நாடுமுழுவதும் நிலவிவந்த கால கட்டத்தில் ஏறத்தாழ எல்லா நாடுகளிலும் பொருளாதார பின்னடைவு ஏற்பட்டது என்பது ஒரு தவிர்க்க இயலாத சூழல்.

அதைத் தவிர்த்து மக்கள் முன்னேற்றம் அடையும் பிஜேபி அரசு எடுத்த முயற்சிகள், அறிவிப்புகள், இந்தியாவை பொருளாதாரப் பாதையில் வளர்ச்சியை நோக்கி வழி நடத்துமா என்பதைவிட, இப்போதுள்ள மூச்சுத் திணறல் சூழலில் இருந்து மக்களையும், அதைத் தொடர்ந்து சிறு, குறு, நடுத்தரத் தொழில் துறையினரையும் விடுவிக்குமா என்பதே அனைவரின் எதிர் பார்ப்பு.

## சீராகுமா சிக்கல்கள்

கொரோனா சூழல் பொருளாதார பாதிப்புகளில் இருந்து மக்கள் மற்றும் தொழில் துறையினர் விடுபடுவார்கள் என்று பிஜேபி அரசு, அரசின் நிதி சார் உதவி நடவடிக்கைகளுக்காக 20 இலட்சம் கோடி அறிவிப்பு செய்தது.


அதன்படி இந்தியாவின் ஏற்றுமதியில் 40 சதவீதப் பங்கு வகிப்பதோடு, 11 கோடி மக்களுக்கு வேலை வாய்பினை அளித்து வரும், MSME மூலம் குறு சிறு நடுத்தரத் தொழில் முனைவோர் பயனடையும் வகையில் கடன் வசதிக்காக ரூ 3 லட்சம் கோடியை அறிவிக்கப்பட்டது.

புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் அவர்கள் ஊர்களிலேயே தங்கி வரும் பட்சத்தில் கட்டுமானம், ஜவுளி, காஸ்டிங்ஸ் போன்ற பல்வேறு துறைகளின் உற்பத்தியில் பாதிப்பு ஏற்படும்.

மத்திய அரசு ஊரடங்கு கால தொழில் முடக்கத்திற்குப் பிறகு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் வேகமானதாக இருந்தால்தான் நாடு மீண்டெழும் என்கிறார்கள் பொருளியல் வல்லுனர்கள்

பொருளாதாரத்தை தூக்கி நிறுத்த தொழில்கள் வளர்ச்சி பெறவும் பொருளாதாரத்தை மறுபடியும் சுழச்சி நிலையில் இயல்புக்கு கொண்டு வரவும் சீரமைப்பு பொருளாதாரம் என்பது முக்கியம். ■

# கேட்டுப் பெறுவதல்ல மரியாதை!




**ராஜா இரவில் மாறுவேடத்தில் நகர்வலம் வந்தார். இரண்டு மெய்க்காப்பாளர்களும் கூடவே சென்றனர்.**

திடீரென்று கடுமையான மழையும், காற்றும் அடித்தன. வானம் இருண்டு போனது . ராஜா காவலாளிகளை விட்டு வழி தவறிப் போய்விட்டார்.

எங்கும் காரிருள்,சற்று தொலைவில் ஒரு சிறு குடிசை தெரிந்தது . அதிலிருந்து லேசான வெளிச்சமும் வந்து கொண்டிருந்தது. ராஜா வேகமாக அதனை நோக்கி நடந்தார்.

அதற்குள்ளே கந்தல் ஆடை அணிந்த ஒரு மனிதனைத் தவிர வேறு யாருமில்லை. ராஜா உள்ளே நுழைந்தும் அவன் எந்த சலனமும் இல்லாமல் அமர்ந்திருந்தான்.

மாறு வேடத்தில் இருந்த போதிலும், அவன் மரியாதை தராமல் அமர்ந்திருந்ததில் ராஜாவுக்குக் கொஞ்சம் கோபம் வந்தது .

“ஏம்பா! உன் வீட்டுக்கு வந்திருக்கேன் , நீ மரியாதையே இல்லாம, ஒரு வணக்கம் கூட சொல்லாம உக்காந்திருக்கியே?” என்றார்.

பதிலுக்கு அவன், “நீதான் என் வீட்டுக்குள்ள அடைக்கலமா நுழைஞ்சிருக்க. உனக்கு எதுக்கு நான் வணக்கம் சொல்லணும்?” என்றான்.

ராஜாவால் இதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவர் எப்போதும் நகர்வலம் போகையில் ஒரு பொற்காசு மூட்டையைஉடன் வைத்திருப்பார்.

அதை அவனிடம் பிரித்துக் காட்டி விட்டு “பார்த்தாயா? நான் எவ்வளவு பெரியவன் என்பதை?

இப்ப எனக்கு வணக்கம் சொல்வாயா ?” என்றார்.

அவனும் பதிலுக்கு, “ஒரு ஏழை பக்கத்தில இருந்தும் ஒரு மூட்டை பொற்காசை நீயே வச்சிருக்கியே, உனக்கு எப்படி வணக்கம்

சொல்வது?” என்றான்.

ராஜா கோபமாய் ஒரு காசை அதிலிருந்து எடுத்து அவனிடம் வீசி, “இப்ப வணக்கம் சொல்வாயா?” என்றார்..

காசைத் தொடாமல் அவன் சொன்னான்,

“ஒரு மூட்டை காசை வச்சுக்கிட்டு அற்பமா ஒத்தக் காசை வீசுறியே, உனக்கா வணக்கம் சொல்வேன்?”

அரசர் இன்னும் உக்கிரமானார். பாதி மூட்டையை அவனருகே பிரித்துக் கொட்டி விட்டுக் கேட்டார், “எங்கிட்ட இருந்ததுல சரி பாதியைக் கொடுத்துட்டேன். இப்பவாவது வணக்கம் சொல்வியா?”

மெல்லிய புன்னகையுடன் அவன் சொன்னான், “உங்கிட்ட இருக்குற அளவுக்கு இப்ப எங்கிட்டேயும் இருக்கே! இப்ப நீயும் நானும் சமமாயிட்டோமே. சரி சமமா இருக்கிற உன்னை எதுக்கு நான் மதிக்கணும்?

“ராஜாவுக்கு ஆத்திரம் கண்ணை மறைத்தது. மிச்சமிருந்த மூட்டையும் அவனிடத்தில் வீசி விட்டார், “இருந்த எல்லாத்தையுமே கொடுத்துட்டேன். இப்பவாவது வணக்கம் சொல்” என்றார்..

அவன் சிரித்துக் கொண்டே சொன்னான் ,


“இப்ப உங்கிட்ட ஒன்னுமே இல்லை. ஆனா எங்கிட்ட ஒரு மூட்டை தங்கம் இருக்கு. இப்ப நீதான் எனக்கு வணக்கம் சொல்லணும்?” என்றான்.

ராஜா வாயடைத்துப் போனார்...

எத்தனைதான் அள்ளிக் கொடுத்தாலும் மனித இதயம் திருப்திப் படுவதில்லை. நிரந்தரமான மரியாதை என்பது பணத்தைக் கொண்டு வாங்கும் பொருளுமில்லை. உண்மையான அன்பைப் பிறருக்குக் கொடு. அதுவே பலமடங்காக உனக்குத் திரும்பக் கிடைக்கும் மரியாதை.

● **அனுப்பியவர்: குன்றத்தூர் பக்தவச்சலம்**

கையில் புதிதாக வாங்கிய துணி வகைகளோடு அலுவலகத்தில் நுழைந்தார்.



"என்ன பையெல்லாம்?"

"தீபாவளி பர்சேஸ்" என்றவரிடம் இந்த லெட்டர் நீங்க அனுப்பியதா !என்று நீட்டினோம்.

வாங்கி படித்துவிட்டு "இல்ல நான் எழுதல... ஆனா அதில் இருக்கிற விஷயங்கள் கரெக்ட்" ன்னார்.

"ஆஹா ஏதோ கடிதத்தைப் பத்திய விஷயம் சொல்லப் போறாரோ." என்று யோசிக்கும் போதே,

"கரெக்ட்... உங்க மைண்ட் வாய்ஸ் கேட்டுச்சு... அரசியல கலக்கப்போற ரெண்டு லெட்டரைப் பத்தி சொல்றேன். இடைமறிக்காம கேளுங்க" என்றவர்,

தனிக்கட்சி தொடங்கி வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் போட்டியிடுவேன்' என்று கடந்த 2017 டிசம் பர் 31ம் தேதி அறிவித்த ரஜினி இதுவரை கட்சி தொடங்கவில்லை. கடந்த மார்ச் 12ம் தேதி செய்தியாளர்களை சந்தித்த அவர், "நான் முதல்வராக மாட்டேன். வேறு ஒருவரை முதல்வராக முன்னிறுத்துவோம்" என்று அறிவித்தார். அதன்பிறகு அரசியல் கட்சி தொடங்குவதற்கான எந்த நடவடிக்கையும் தொடங்கவில்லை இல்லையா?

ஆமா!

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் தேதி அறிவிக்க இன்னும் 4 மாதங்களே இருக்கும் நிலையில் ரஜினி கட்சி தொடங்க வேண்டும் என்று அவருக்கு ரசிகர்களும், ஆதரவாளர்களும் தொடர்ந்து நெருக்குதல் கொடுத்து வருகின்றனர். இந்நிலையில், அக்டோபர் 29ம் தேதி ரஜினி வெளியிட்ட ட்விட்டர் பதிவில், 'என் அறிக்கைபோல ஒரு கடிதம் சமூக வலைதளங்களிலும் ஊடகங்களிலும் தீவிரமாக பரவிக் கொண்டு வருகிறது. அது என்னுடைய அறிக்கை அல்ல என்பது அனைவருக்கும் தெரியும். இருப்பினும் அதில் வந்திருக்கும் என் உடல்நிலை மற்றும் மருத்துவர்கள் அளித்த அறிவுரைகள் குறித்த தகவல்கள் அனைத்தும் உண்மை. இதைப் பற்றி தகுந்த நேரத்தில் ரஜினி மக்கள் மன்ற நிர்வாகிகளோடு கலந்தாலோசித்து எனது அரசியல் நிலைப்பாட்டை மக்களுக்கு தெரிவிப்பேன்'ன்னு சொன்னாரு!



**கபாலிகான் நியூஸ்**

"அதான் தெரியுமே"

'துக்ளக்' வார இதழின் ஆசிரியர் எஸ்.குருமூர்த்தி, நடிகர் ரஜினிகாந்தை போயஸ் கார்டனில் உள்ள அவரது இல்லத்தில் திடீர்னு போய் சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பின்போது, ரஜினியின் பெயரில் வெளியான கடிதம் குறித் தும் அதற்கு ரஜினி அளித்த பதில் குறித்தும் விவாதிக்கப்பட்டுள்ளது.

"என்ன விவாதமோ'



கடந்த 1996ல் தனிக் கட்சி தொடங்கியிருந்தால் நீங்கள் முதல்வராகி இருப்பீர்கள். தமிழகத்தின் வரலாறு மட்டுமல்ல, இந்தியாவின் வரலாறும் மாறியிருக்கும். அப்போது செய்த வரலாற்று தவறை இப்போதும் செய்ய வேண்டாம். கட்சி தொடங்குங்கள். அதற்கு உடல் நிலை ஒத்துழைக்காவிட்டால் திமுகவுக்கு எதிரான அணிக்கு அதாவது பா.ஜ.கவுக்குவெளிப்படையான ஆதரவு அளிக்க வேண்டும்' என்று ரஜினி யிடம் குருமூர்த்தி வலியுறுத்தியதாக நம்ம வட்டாரங்கள் தெரிவிக்குது".

"ரஜினி என்ன முடிவு எடுப்பாரு?"

"மேல இருக்கிறவனுக்குதான் தெரியும் !என்று கையை மேலே தூக்கினார் கபாலிகான்.

'மேலன்னா ஆண்டவனா? மேல ஆள்றவங்களா'ன்னு கேட்டத கண்டுக்காம

சசிகலா கடிதம் படிச்சீங்களான்னு கேட்டார்.

"என்ன கடிதமோ?"

சசிகலாவின் வழக்கறிஞர் ராஜா செந்தூர்பாண்டியன் " திருமதிசசிகலாஉடல்நிலை குறித்த செய்திகள் ஊடகத்தின் வழியாக வெளியாகின. அதுகுறித்து பலரும் என்னிடம் கேள்வி எழுப்பியதால், சிறைத்துறை கண்காணிப்பாளர் வாயிலாக நான் அவருக்கு கடிதம் எழுதியிருந்தேன். அதற்கு அவர் பதில் கடிதம் எழுதியுள்ளார்." ன்னாரு.

ஓ...

அதில், தமிழக மக்கள் கொரோனாவிலிருந்து மீண்டு முற்றிலும் சகஜ நிலைக்கு வரவேண்டும் என்று குறிப்பிட்டுள்ள அவர், நன்னடத்தை ரெமிஷன் விஷயத்தில் கர்நாடக சிறைத்துறை முடிவெடுப்பார்கள் என நான் நம்புகிறேன். உத்தரவு எனக்கு முறைப்படியாகக் கிடைத்த பிறகு உங்களுக்கு தெரிவிக்கிறேன். அதன்படி பைன் தொகையை முறைப்படி நீதிமன்றத்தில் செலுத்த ஏற்பாடு செய்யவும், கர்நாடக நீதிமன்றத்தில் பைன் கட்டிய பிறகும் உச்ச நீதிமன்றத்தில் 14.2.2017 தேதிய தீர்ப்பு வழக்கு விஷயத்தில் சட்டப்படியாக சுயூரிட்டு மனுவைத் தாக்கல் செய்ய இயலுமா என்பதனை மீண்டும் டெல்லி மூத்த வழக்கறிஞர்களிடம் உறுதி செய்யவும். அதுபற்றி டிடிவி தினகரனிடம் ஆலோசித்து செயல்படவும். இவ்வாறு அவர் அபராதம் செலுத்துவது பற்றியும் மறு சீராய்வு மனு பற்றியும் சொல்லியிருக்கிறார்.

ஆக இரண்டு கடிதங்களும் தமிழக அரசியலின் தேர்தல் பாதையை தீர்மானிக்கப் போகுது பாருங்க"

தீபாவளிஸ்வீட்ஸ்பாக்ஸ்கொடுத்தோம்.தேங்க்ஸ் ஹாப்பி தீபாவளி என்று சொல்லிக்கொண்டே வெளியேறினார் கபாலிகான்.



# பலபேர் பசித்திருக்க... உணவை வீணாக்கலாமா?

உலகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் 16வது நாள் உலக உணவு தினமாகக் கடைப்பிடிக்கப் படுகிறது. 1945ஆம் ஆண்டு ஐ.நா சபையால், கனடாவில் உள்ள கியூபெக் நகரில், உலக உணவு மற்றும் வேளாண் அமைப்பு (FAO) நிறுவப்பட்டது. அதன் பின்னர், 1979 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண் அமைப்பின் மூலம் உலக உணவு தினம் அறிவிக்கப்பட்டது.

தற்போது ஒவ்வொரு வருடமும் 150க்கும் மேற்பட்ட நாடுகளில் இந்தத் தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதைப் பற்றிய விழிப்புணர்வை நம் இந்தியா பெற்றுள்ளதா? இல்லை என்பதுதான் பதில். அதை விரிவாக நாம் தெரிந்து கொள்வதற்கு முன்பு, கீழ்கண்ட விவரத்தையும் உணர்ந்து கொள்வது முக்கியம். உணவு, உடை, உறைவிடம் மூன்றும் மனிதனின் இன்றியமையாதத் தேவைகள். இதில் முதன்மையாவது உணவு. மனிதனுக்கு மட்டுமல்ல, உயிரினங்கள் அனைத்துக்கும் உணவே முதன்மைத் தரும்.

இந்தியாவில் தினமும் 30 கோடிக்கும் அதிகமான மக்கள் இரவு உணவு இல்லாமல்தான் உறங்குகின்றனர். 18 கோடிக்கும் அதிகமான மக்களோ காலை அல்லது மதிய உணவின்றியேதான் வாழ்கிறார்கள் என்கின்றன எடுக்கப்பட்ட ஆய்வுகள்.

உணவை வீணடிப்பதை தடுக்கவும், பிறருக்கு உதவி செய்யவும், விழிப்பு உணர்வு ஏற்படுத்தவும் உலக உணவு தினம் (World Food Day) கொண்டு வரப்பட்டது.

உலகிலேயே அதிகமாக இந்தியாவில் 30 சதவீத பேர் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளன. இதில் கிராமப்புற பகுதியினர் 41 சதவீதமும், நகரப் பகுதியினர் 11 சதவீதப் பேரும் அடங்குவர். இது மட்டுமா?

இந்தியாவில் ஊட்டச்சத்துக் குறைபாடு ஏற்பட்டுள்ள குழந்தைகளில் 72 சதவீதம் பேர் ரத்தச் சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழ் நாட்டில் 27 சதவீதம் பேர் ஊட்டச் சத்து குறைப்பாட்டுடன் காணப்படுகின்றனர்.



இந்த கணக்கெடுப்பு ஆய்வானது, 2018ஆம் ஆண்டு இறுதியில் எடுக்கப் பட்டதாகும். இது எவ்வளவு வருத்ததிற்குரியது.

எப்படி வீணாகிறது?

உலகின் உணவு உற்பத்தியில், சுமார் மூன்றில் ஒரு பங்கு உணவு வீணடிக்கப்படுகிறது. அதன் அளவு 1.3 மில்லியன் டன் ஆகும். குறிப்பாக உணவை வீணடிப்பதில், இந்தியர்கள் முதலிடத்தில் இருக்கின்றனர். என உலக உணவு மற்றும் வேளாண் அமைப்பின் அறிக்கையில் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.

பெரும்பான்மையாக வீணடிக்கப்படும் உணவுப் பொருட்களில், பழங்களும், காய்கறிகளும் அடங்குகின்றனர். முக்கியமாக ஆய்வுகள் குறிப்பிடுவது என்னவென்றால், இந்தியாவில் கோயில் விழாக்கள், அரசியல் கட்சி நிகழ்ச்சிகள், திருமணங்கள் எனப் பல்வேறு நிகழ்வுகளில் பரிமாறப்படும் உணவுகளில் பாதிக்கு மேல் குப்பைக்குதான் போகின்றதாம்

உணர்வோமா? விழிப்போமா? ●



# தொழிலில் சிறந்து விளங்க..!

தொழிலை வெற்றிகரமாக மாற்றிய வணிகர்களும், வருமானம் மற்றும் வாழ்க்கையை வளமான தாக வைத்திருக்க நினைக்கும் புதிய தொழில்முனைவோர்களும் நேரத்தை மிக முக்கியமாகக் கருதி செயல்படுகின்றனர். இதில் பெரிய வெற்றியாளர்கள் மட்டுமல்லாது சிறு, குறு நடுத்தர வணிகர்களும் அட ங்குவர். இது போன்ற சிந்தனை செயல்திட்டங்களால் மட்டுமே அவர்கள் வெற்றிக்கனியைச் சுவைக் கின்றனர். ஆனால், தங்களது உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தாமல் விட்டு விடுகின்றனர். இதனால் நடுத்தர வயதைத்தாண்டியதும் இதய நோய், சர்கரை குறைபாடு, ரத்த அழுத்தம், மன அழுத்தம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு பாதி சம்பாத்தியத்தை இழந்துவிடுகின்றனர்.

பல வணிகர்கள் நாள்தோறும் 16 மணிநேரம் வரை கூட உழைக்கின்றனர். தொடர்ந்து வாரம் 6 நாட்கள் ஏன் சில நேரம் 7 நாட்கள் கூட வேலைசெய்கின்றனர். இப்படி ஓய்வின்றி உழைப்பதால் குறைந்த அளவே ஓய்வு நேரம் என்பது கிடைக்கிறது. மேலும் தொழில் சூழல் மற்றும் குடும்ப சூழலால் அதிக மன அழுத்தத்திற்கும் உள்ளாகின்றனர். இவர்களில் பெரும்பாலானோருக்கு தங்களது உடல் நலத்தை பாதுகாக்க முடியாமல் போய்விடுகிறது. எப்போதும் வேலைக்கே முன்னுரிமை தரும் வணிகர்கள் தங்களது உடல் நலத்துக்கும் முக்கியத்துவம் அளிக்கும் வகையில் மருத்துவ வல்லுநர்கள் சிலர் சில ஆலோசனைகளை வழங்கியுள்ளனர். அதுகுறித்து பார்க்கலாம்.

வாழ்க்கையில் இதுவரை ஆரோக்கியத்தைப் பேணுவதற்கான எந்த ஒரு முயற்சியையும் மேற் கொள்ளாதவராகவும், இதுவரை உடலைத்தகுதியாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற சிந்தனை வராத வணிகர்கள், தொழில் முனைவோர்களுக்காக இந்த ஆலோசனைகள் தரப்படுகின்றன. இந்த கட்டுரையைப் படித்த பிறகாவது உடல் நலம் குறித்த விழிப்புணர்வோடு இருங்கள். அதற்கான சில எளிய தீர்வுகள் உள்ளன. இதனால் உடலும், குடும்பமும் ஆரோக்கியமாக மாறும் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

## உடலையும் உள்ளத்தையும் பாதுகாக்க உடற்பயிற்சிகள் முக்கியம்!

நாள்தோறும் ஓடிக்கொண்டும் உழைத்துக்கொண்டும் இருக்கும் நீங்கள், முதலில் உடலை தகுதி யாக வைத்துக்கொள்ள பழக வேண்டும். இதற்கு உடற்பயிற்சிகள் மிகவும் அவசியம். காலை எழுந்ததும் உடற் பயிற்சிகளை மேற்கொள்ளலாம். அல்லது சிறிய விளையாட்டுப்பயிற்சிகளை செய்யலாம். அல்லது எளிமையான நடைப்பயிற்சியைகூட மேற்கொள்ளலாம். இதில் எது உங்களுக்கு எளிமையானதோ, வசதியா னதோ விருப்பமானதோ அதனை தேர்வு செய்து பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள். இது நாள்முழுக்க உங்களை உற்சாகமாக வைத்திருக்க உதவும். மேலும் மூளையை சுறுசுறுப்பாக்கி வணிகத்தில் புத்தி சாலித்தனமான முடிவுகளை எடுக்க உதவும்.

## கண்டிப்பாக காலை உணவுகளைத் தவிர்க்காதீர்கள்!

உங்கள் உடலுக்குத்தேவையான சத்துகள் கிடைக்க சரியான நேரத்தில் சரியான உணவுகளை எடுத்துக்கொள்ளவேண்டும். இதனால் உடலுக்குத்தேவையான எரிபொருள் கிடைப்பதோடு உங்களைச் சோர்வின்றி அது பாதுகாக்கும். முக்கியமாக இரவு நெடுநேரம் வரை விழித்திருந்து படுத்து தூங்கினால் மறுநாள் காலையில் எழுந்திருப்பது கடினமாகும். எனவே சரியான நேரத்தில் படுத்து அதிகாலையில் கண் விழிப்பது உடலுக்கு நல்லது. இப்படி காலையில் எழுந்து காலைக்கடன்களை முடித்து, உடற்பயிற்சி மேற் கொண்டு பின்னர் அலுவலகத்திற்கோ, தொழில்வணிகநிறுவனங்களுக்கோகிளம்பும்போது நேரமாகி விட்டது என்று சாப்பிடுவதைத்தவிர்த்து விட்டு ஓடாதீர்கள். இப்படி ஓடுவதால் எந்த ஒரு

● **மேகலைவாணன்**

வேலையையும் சிறப்பாகச் செய்துமுடிக்க முடியாது. காரணம் உடல் சோர்வும், மூளைச்செயல்பாடும் மந்தமாகிவிடும் என்பதே உண்மை. எனவே, எந்த நிலையிலும் உங்களது காலைச்சிற்றுண்டியை விட்டு விடாதீர்கள்.

## பணிகளையும், சந்திப்புகளையும் முறைப்படுத்துங்கள்!

உங்களது தனிப்பட்ட செயல்பாடுகள் தவிர்த்து வணிகரீதியிலான சந்திப்புகள், வேலைகள் ஆகிய வற்றை முன்கூட்டியே திட்டமிட்டுக்கொள்ளுங்கள். இதில் அவரவர்களுக்கான நேரம் என்பது மிகமுக்கியம். இதுகுறித்து ஒரு வழிகாட்டி நாட்குறிப்பையும் வைத்து பயன்படுத்திக்கொள்ளுங்கள். அதுமிகவும் பயனுள்ள தாக இருப்பதோடு, உங்களது நேரம் மற்றும் செயல்பாடுகளைப்போலவே அடுத்தவர்களுக்கான நேரம் மற்றும் செயல்பாடுகள் முக்கியமாக இருக்கும் என்பதை உணர்ந்து கொள்ள ஏதுவாக இருக்கும். இன்றைய சூழலில் இது சாத்தியப்படாமல்கூட இருக்கலாம். ஆனால் உங்களையும், உங்களைச் சுற்றியுள்ளவர்களுக் கும் இந்த சூழலை எடுத்துக்கூறினால் சுமார் ஒரு 30 நாட்களுக்குள்ளாகவே உங்களது செயல்பாடுகளை திட்டமிட்டபடி செய்துமுடிக்க முடியும். அதற்கு உடங்களுடனானவர்களும் ஒத்துழைக்க முடியும்.

## சிக்கலான நேரத்திலும் உடல் சோர்வுக்கு இடமளிக்காதீர்கள்!

வணிக கட்டமைப்பில் நேரம் கிடைப்பது என்பது எளிதானது அல்ல. தொழிலாளர்களை சந்திப்பது, உற்பத்தி குறித்து அலுவக பணியாளர்களிடமும், அதிகாரிகளிடமும் ஆலோசனை செய்து முடிவெடுப்பது, நிதி உள்ளிட்ட சிக்கல்களுக்கு உடனடியான தீர்வுகளை மேற்கொள்வது என எத்தனையோ வேலைகள் உங் களுக்கு முன்னாள் வந்து நிற்கும். இதனால் சற்றே இளைப்பாறுவதற்குக்கூட ஏன் ஒரு சத்தான பானங்கள் அருந்துவதற்குக்கூட நேரம் கிடைக்காது. ஆனால் வயிறு மட்டும் ஏதாவது தேவை என கேட்டுக் கொண்டே இருக்கும். இதனை கருத்தில் கொண்டு உடனடியாக ஏதாவது சிற்றுண்டிகளை எடுத்துக் கொள்ளலாம். அல்லது அதற்கு நேரமில்லை என்று கருதினால் பழச்சாறு வகைகளை எடுத்துக்கொள்ளலாம். இதனால்



உடலுக்குத்தேவையான ஆற்றல் கிடைக்கும். தொடர்ந்து பணிகளைத் தொய்வில்லாமல் செய்ய உதவியாக அமைந்திருக்கும். இதற்காக உங்களது சிற்றுண்டி உள்ளிட்ட உணவு பண்டங்கள் மற்றும் ஊட்டச்சத்து உணவு வகைகளை நீங்களே வீட்டில் செய்து தயாராக எடுத்து வந்து விடுங்கள். இது ஒரு கடலை உருண்டையாக இருந்தாலும் சரி, அல்லது சாலட் போன்ற சத்துமிக்க சிற்றுணவாக இருந்தாலும் சரி, சூடான பானமாக இருந்தாலும் சரி, அவற்றை எப்போதும் தயாராக உங்களுடன் வைத்திருங்கள். இது அலுவலகத்தில் இருக்கும் போதோ அல்லது வெளிப்பயணத்தின் போதோ உங்களது களைப்பைப்போக்கி புத்துணர்ச்சியை தரும் என்பதை மறந்து விடாதீர்கள்.

## சாப்பிடும் சூழலை ஆரோக்கியமானதாக மாற்றுங்கள்!

சாப்பிடும் நேரத்தில் அதற்கான இடத்தை அமைதியான சூழல் நிறைந்ததாக, வெளியாட்கள் தொந்தரவு இல்லாத இடமாக, உணவருந்தும் நேரத்தில் எந்த அலுவலக வேலைகளையும் வைத்துக்கொள்வதைத் தவிர்க்க வேண்டும். சுவர் இருந்தால்தான் சித்திரம் என்பதை நினைவில் வைத்துக்கொண்டு, உணவருந்தும் நேரத்தை மகிழ்ச்சியான நேரமாக மாற்றுங்கள். முற்றிலும் வணிகம், அலுவலகம் சார்ந்த சிந்த னைகளை மறந்து விட்டு, அந்த உணவு இடைவேளையை உணவுக்காக மட்டுமே செலவிடுங்கள். மற்ற வற்றில் கவனம் செலுத்தாதீர்கள். இது முடியாது என்று நீங்கள் நினைக்கும்போது அரசியலாகவோ, திரைப்படமாகவோ, புத்தகம் சார்ந்ததாகவோ உங்களது சிந்தனையை மாற்றிக்கொள்ளலாம். அதாவது உங்கள் தொழில் சிந்தனையை அந்த நேரத்தில் விட்டு விட்டு, உங்களுக்குப் பிடித்தமானதைப்பற்றி பேசுவது, சிந்திப்பது என சூழலை மாற்றிக்கொள்ளுங்கள். இது உங்களுக்குள் ஒரு ஆரோக்கியமான மன நிலையை உருவாக்கும்.

## குடும்பத்தில் மகிழ்ச்சியான தருணங்களை எதிர்கொள்ளுங்கள்!

நாள்முழுக்க தொழில் வணிகம் சார்ந்த செயல்பாடுகளில் கவனத்தைச் செலுத்தி விட்டு வீட்டிற்கு வந்ததும், நேராக உணவு மேசைக்கு வந்து சாப்பிட்டு படுக்கைக்குப்போய்விடாதீர்கள். உங்கள் மனைவி, தாய்தந்தையர் இருந்தால் அவர்களுடன் சற்று உரையாடுங்கள். பிள்ளைகள் இருந்தால் அவர்களுடன் அமர்ந்து அன்றைக்கு செய்த செயல்கள் குறித்தும் பள்ளி கல்லூரிகளில் நடந்த நிகழ்ச்சிகள் குறித்தும் கேட்டறிந்து கொள்ளுங்கள். தேவைப்பட்டால் ஆலோசனைகளையும் வழங்குங்கள். இது அவர்களுக்கு மட்டுமல்ல உங்களுக்கும் ஆரோக்கியத்தை கொண்டுவந்து சேர்க்கும். எல்லாவற்றிற்கும் மேலாக, நம்மீது அக்கரை எடுத்துக்கொண்டு விசாரிக்கின்றாரே என மனைவி, பிள்ளைகள் உட்பட அனைவருக்கும் நினைப்ப தோடு அவர்களிடம் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தும். உறவில் புதிய புதிய நம்பிக்கைகளையும் இது தோற்று விக்கும்.

உலகில் வெற்றிபெற்ற பெரியபெரிய தொழில் அதிபர்கள் முதற்கொண்டு சாதனை படைத்த விளையாட்டு வீரர் வரை அவர்களது வாழ்க்கை வரலாற்றை படித்துப்பார்த்தால் அவர்கள் எப்படி தங்களது தொழில் மற்றும் குடும்பச்சூழலை மகிழ்ச்சியாக கட்டமைத்துக்கொண்டார்கள் என்பது புரியும். இனி உங்களது ஆரோக்கியம் உங்கள் கைகளில்! ■

# சிலிண்டர் மானியம் பெறுவது எப்படி?

**தற்போது, ஒரு வருடத்தில் 12 LPG சிலிண்டர்களுக்கு அரசு மானியம் வழங்குகிறது. மானியத்தின் அளவு நேரடியாக மக்களின் வங்கிக் கணக்கில் (Bank Account) செல்கிறது. இருப்பினும், சிலிண்டர் வாங்கும்போது, நுகர்வோர் முழுத் தொகையையும் செலுத்த வேண்டும். பின்னர் மானியம் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.**

இருப்பினும், LPGயின் மானியம் வங்கிக் கணக்கில் வந்துள்ளதா இல்லையா என்பதை பலர் சரிபார்க்கவில்லை. இது சில நிமிடங்கள் மட்டுமே ஆகும். உங்கள் வங்கிக் கணக்கில் சிலிண்டரின் மானியம் வந்துள்ளதா இல்லையா என்பதை நீங்கள் எவ்வாறு எளிதாக சரிபார்க்க முடியும் என்பதை நாங்கள் உங்களுக்குச் சொல்லப்போகிறோம், இரண்டு வழிகள் உள்ளன. முதலாவது பதிவுசெய்யப்பட்ட மொபைல் எண் வழியாகவும், இரண்டாவது LPG ID மூலமாகவும், இந்த IDகள் உங்கள் எரிவாயு பாஸ் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளன.

LPG சிலிண்டர் விநியோக முறையில் புதிய மாற்றம்... நாம் தெரிந்து கொள்ள வேண்டியது..!

IOC உடன் நீங்கள் ஒரு சிலிண்டரை முன்பதிவு செய்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம், இதுவே வழி.

LPG மானியத்தை எவ்வாறு சரிபார்க்கலாம்

1. முதலில் IOC **cx.indianoil.in**ன் அதிகாரப்பூர்வ வலைத்தளத்தைப் பார்வையிடவும்
2. LPG சிலிண்டரின் புகைப்படத்தைக் கிளிக் செய்தால், ஒரு சிறிய பெட்டி திறக்கும். அங்கு **'Subsidy Status'** என்று எழுதி **proceed** பொத்தானைக் கிளிக் செய்க
3. 'மானியம் தொடர்பான (PAHAL)' விருப்பத்தை சொடுக்கவும். பின்னர் கீழே வாருங்கள், அது 'Subsidy Not Received' என்று எழுதப்படும். அதைக் கிளிக் செய்க
4. ஒரு புதிய உரையாடல் பெட்டி திறக்கும், அங்கு 2 விருப்பங்கள், பதிவு செய்யப்பட்ட மொபைல் எண் மற்றும் **LPG ID** இருக்கும்.
5. உங்கள் எரிவாயு இணைப்பு மொபைலுடன் இணைக்கப்பட்டிருந்தால், அதைத் தேர்ந்தெடுக்கவும், இல்லையென்றால், 17 இலக்க **LPG** IDயை உள்ளிடவும்
6. LPG IDயை உள்ளிட்டு சரிபார்த்து சமர்ப்பிக்கவும்
7. நீங்கள் இணைப்பைக் கிளிக் செய்தவுடன் உங்கள் கணக்கு செயல்படுத்தப்படும்.
8. இதற்குப் பிறகு நீங்கள் **mylpg.in**-க்குச் சென்று உள்நுழைக
9. உங்கள் ஆதார் அட்டை **LPG** கணக்கில் இணைக்கப்பட்டிருந்தால், அதைக் கிளிக் செய்க
10. இதற்குப் பிறகு, கேஸ் சிலிண்டர் முன்பதிவு வரலாறு / மாற்றப்பட்ட மானியத்திற்கான விருப்பங்கள் காணப்படும்.

மானியம் உங்கள் வங்கிக் கணக்கிற்கு மாற்றப்பட்டதா இல்லையா என்பதை இங்கிருந்து நீங்கள் அறிந்து கொள்வீர்கள். விலையுயர்ந்த எரிபொருளின் சுமையிலிருந்து சாமானியர்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் எரிவாயு மானியத்தை வழங்குகிறது. ஆனால் இது ஆண்டு வருமானம் 10 லட்சத்திற்கு மிகாமல் இருப்பவர்களுக்கு மட்டுமே கிடைக்கும். கணவன்மனைவியும் சேர்ந்து 10 லட்சம் சம்பாதித்தால் அவர்களுக்கு LPG மானியம் கிடைக்காது. இந்தேன் தற்போது 9 கோடி வீடுகளுக்கு LPG சிலிண்டர்களை வழங்குகிறது. LPG சிலிண்டர் மானியம் நேரடியாக பஹால் திட்டத்தின் மூலம் மக்களின் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.



*தகவல்:*
*ஆர். குணசேகரன்*

## ரசிகர்களுக்குப் புதிர்..!

நடிகை திரிஷா கிட்டத்தட்ட 15 வருடங்களுக்கும் மேல் தமிழ் சினிமாவில் முன்னணி நடிகையாக வலம் வந்து கொண்டிருக்கிறார். இன்னமும் இவரை அடித்துக் கொள்ள ஆளில்லை. ஒரு கட்டத்தில் கமர்ஷியல் நடிகையாக வலம் வந்த திரிஷா தற்போது கதையின் நாயகியாக தொடர்ந்து பல படங்களில் நடித்து வருகிறார். திரிஷா நடிப்பில் அடுத்தடுத்து கர்ஜனை, பரமபத விளையாட்டு, ராங்கி போன்ற படங்கள் வெளியீட்டுக்குத் தயாராக உள்ளன.

சமீபகாலமாக திரிஷாவின் நடவடிக்கைகள் அனைத்துமே ரசிகர்களுக்குப் புதிர் போடும் விதமாக அமைந்துள்ளது. தெலுங்கு நடிகர் ராணாவைக் காதலிப்பதாகத் தகவல் வெளியானது. ராணா சமீபத்தில் திருமணம் செய்து கொண்டதை அடுத்து திடீரென சமூக வலைத்தளங்களில் இருந்து ஒரு மாதம் ஓய்வு எடுக்கப் போவதாக அறிவித்தார்.

ஆனால், இருவருக்குள்ளும் நட்பு மட்டும்தான் இருக்கிறது எனத் தற்போது வரை கூறி வருகிறார் திரிஷா. இந்நிலையில் தன்னுடைய சிறுவயது நினைவுகளை ரசிகர்களுடன் பகிர்ந்து வருகிறார் திரிஷா. அந்த வகையில் தன்னுடைய சிறுவயது புகைப்படம் ஒன்றை வெளியிட்டு, தேவதை முகம், பேய்க் கனவுகள் என்பதைப்போல வாசகம் பதிவிட்டு புகைப்படத்தை வெளி யிட்டுள்ளார். இந்தப் புகைப்படம் தற்போது இணையதளங்களில் காட்டுத்தீ போல் வைரலாகி வருகிறது.



## ‘தளபதி 65’... தடுமாறும் முருகதாஸ்!

மாஸ்டர் படத்திற்கு பிறகு தளபதி விஜய், ஏ ஆர் முருகதாஸ் இயக்கத்தில் சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் தளபதி65 படத்தில் நடிக்க உள்ளார். இந்த படத்தின் கதை விவாதம் மற்றும் நடிகர் நடிகைகளின் தேர்வு ஆகியவை பரபரப்பாக சென்று கொண்டிருக்கின்றன.

விநாயகர் சதுர்த்தி அன்று படத்தின் அறிவிப்பை வெளியிட இருந்த சன் பிக்சர்ஸ் நிறுவனத்திடம் விஜய், முருகதாஸ் முழு கதையையும் ரெடி செய்த பின் அறிவிக்கலாம் என கூறி விட்டதாக தெரிகிறது. முருகதாஸின் கதைகளில் முன்னர் இருந்த சுவாரஸ்யம் தற்போது இல்லாதது விஜய்க்கு அப்பட்டமாகத் தெரிந்து விட்டதாம். இதனால் பல மாற்றங்களைச் செய்யச் சொல்லிக் கொண்டிருக்கிறாராம்.

இது ஒருபுறமிருக்க சன் பிக்சர்ஸ் நிறுவனம் தளபதி65 படத்திற்காக 130 கோடி பட்ஜெட் ஒதுக்கியுள்ளதாம். அதில் விஜய்யின் சம்பளம் மட்டுமே 80 கோடிக்கும் மேல் என்கிறார்கள் சினிமா வாசிகள். மற்ற நடிகர் நடிகைகளின் சம்பளம், முருகதாஸ் சம்பளம் ஆகிய அனைத்தையும் சேர்த்தால் கிட்டத்தட்ட 20 கோடிக்கு மேல் வந்து விடும். எவ்வளவு சிக்கனமாக முருகதாஸ் இந்த படத்தை எடுக்கப் போகிறோம் என விழித்து கொண்டிருக்கிறாராம்.

பெயரிலேயே ‘நிதி’யை வைத்திருப்பவருக்கும் பட்ஜெட்டில் துண்டுவிழுவதெல்லாம் ஒரு பொருட்டா..?

## பாலிவுட் ஷூட்டிங்கில் தனுஷ்!

நடிகர் தனுஷ் தமிழ் சினிமாவின் மிக முக்கிய நடிகர்களில் ஒருவராக கருதப்படுபவர், இவருக்கு தமிழகமெங்கும் அதிகப்படியான ரசிகர்கள் உள்ளனர். கடைசியாக இவர் நடிப்பில் பட்டாஸ் திரைப்படம் கடந்த ஜனவரி மாதம் வெளியாகியிருந்தது, அடுத்ததாக இவர் கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் ஜகமே தந்திரம் திரைப்படத்தில் நடித்திருந்தார்.

மேலும் இயக்குனர் மாரி செல்வராஜ் இயக்கத்திலும் இவர் கர்ணன் திரைப்படத்தில் நடித்து வந்தார், கொரோனா காரணமாக ஷூட்டிங் பணிகள் அனைத்தும் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில் நடிகர் தனுஷ் தற்போது பாலிவுட் திரைப்படமான அத்ராங்கி ரே திரைப்படத்தின் ஷூட்டிங் பணியில் கலந்து கொண்டுள்ளார். இப்படத்தின் ஷூட்டிங் காரைக்குடியில் 10 நாட்கள் வரை நடைபெறவுள்ளதாகவும், மேலும் அது பாடல் காட்சி என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

## ’நயன்தாரா கிட்ட போய் கேளுங்க...’

தமிழில் 7ஜி ரெயின்போ காலணி, கோவில் போன்ற படங்களில் நடித்து ரசிகர்களின் கவனத்திற்க வந்தவர் சோனியா அகர்வால். இப்போதும் இவர் உடலை பிட்டாக வைத்து படங்களில் நடித்து வருகிறார். ஒருசில இயக்குனர்கள் அம்மா வேடத்தில் நடிக்க இவரை கேட்டுள்ளார்கள். அண்மையில் ஒரு பேட்டியில் இவர் பேசும்போது, “நான், திரிஷா, நயன்தாரா எல்லாம் ஒரே வயதுடையவர்கள் தான், 81, 82களில் பிறந்திருக்கிறோம்.

என்னை அம்மா வேடத்தில் நடிக்க கேட்பவர்கள் நயன்தாராவிடம் போய் கேளுங்கள், அம்மா வேடத்தில் நடிக்க. நான் பிட்டாக இல்லை என்றால் கேட்கலாம், என் உடலமைப்பை நான் பிட்டாக தான் வைத்திருக்கிறேன்” என கூறியுள்ளார்.

என்ன செய்ய... நம்ம வாழ்க்கையில் மட்டும் விதி இப்படி விளையாடுகிறது!

# பிளிப்கார்ட் வழங்கும் தீபாவளி சலுகைகள்!

அமேசான், பிளிப்கார்ட் ஆகிய வணிகத்தளங்கள் இந்த தீபஒளித் திருநாளையொட்டி வாடிக்கையாளர்களுக்கு பலவிதனான சலுகைகள் மற்றும் தள்ளுபடி விற்பனையைத் தொடங்கியுள்ளன. தீப ஒளித்திருநாள் இந்த மாதம் 14 ஆம் தேதி கொண்டாடப்பட உள்ள நிலையில், இதுபோன்ற வலைத்தள நிறுவனங்கள் தங்களது விற்பனையை உயத்தும் உத்திகளை வழக்கம் போலவே கையிலெடுத்துவிட்டன. இந்த விற்பனை நடவடிக்கையில் கடந்த மாதம் இரண்டாவது வாரத்திலே தொடங்கிவிட்டது. இதற்காக அனைத்து முன்னணி ஆங்கில, தமிழ் நாளிதழ்கள் மற்றும் வார இதழ்களில் விளம்பரங்களை வெளியிட்டு வாடிக்கையாளர்களை ஈர்க்க ஆரம்பித்து விட்டன.

அமெரிக்காவின் அமேசான் நிறுவனமும், இந்தியாவின் பிளிப்கார்ட் நிறுவனமும் போட்டிபோட்டுக்கொண்டு தங்களது சலுகைகளை அறிவித்து விற்பனையில் களம் இறங்கியுள்ளன. அந்த வகையில் தீப ஒளித்திருநாளையொட்டி பிளிப்கார்ட் நிறுவனம் நவம்பர் 4 ஆம் தேதிவரை கைக்கணினி எனப்படும் ஸ்மார்ட் போன்கள் விற்பனையில் அறிவித்துள்ள சில சலுகை விலைகள் குறித்து இங்கே பார்க்கலாம்.

ரியல்மீ செல்போன்கள்

ஸ்மார் போன்கள் விற்பனைப்பிரிவில் ரியல்மீ நார்சோ 20 புரோவின் விலையை 13,999 ரூபாய்க்கு தருகிறது. இதன் உண்மையான விலை 14,999 ஆகும். தீபத்திருநாளையொட்டி இந்த ரகத்திற்கு ஆயிரம் ரூபாயை குறைத்துள்ளது. இது 6 ஜிபி நினைவக திறன் மற்றும் 64 ஜிபி கொள்ளளவு சேமிப்பு திறனுடன் கிடைக்கிறது. மேலும் இதே ரகத்தில் கூடுதல் திறனாக 8ஜிபி நினைவக திறன் மற்றும் 128 ஜிபி கொள்ளளவு சேமிப்பு திறன் கொண்ட கைக்கணினி ஆயிரம் ரூபாய் சலுகை விலையில் கிடைக்கும்.

இதேபோல் மற்றொரு கைக்கணினியான ரியல்மீ சி 11 ரகமானது 6 ஆயிரத்து 999 ரூபாய்க்குக்கிடைக்கும். இதன் உண்மையான விலை 7ஆயிரத்து 499 ரூபாயாகும். இதேபோல் 3 ஜிபி நினைவகம், 32 ஜிபி கொள்ளளவு சேமிப்புத்திறனுடன் விற்பனைக்கு வரும் ரியல்மீ சி 15 ரக மாடலானது 8 ஆயிரத்து 999 ரூபாய்க்குக்கிடைக்கும். இதன் உண்மையான விற்பனை வி லை என்பது 9



ஆயிரத்து 499 ரூபாய் ஆகும். இதேபோல் ரியல்மீ 6 ரக கைக்கணினி 4ஜிபி மற்றும் 64 ஜிபி கொள்ளளவு சேமிப்பு திறன் கொண்டதாக 12 ஆயிரத்து999 க்கும் கிடைக்கும் என்றும் இதன் உண்மையான விற்பனை விலை 13 ஆயிரத்து 999 ஆகும் என்றும் பிளிப்காா்ட் நிறுவனம் அறிவித்துள்ளது.

போக்கோ ரகங்களுக்கான சலுகைகள்

ஸ்யோமி நிறுவனத்தின் போக்கோ ரக கைக்கணிகளில் பிளிப்காா்ட், பொக்கோ சி 3; போக்கோ எம் 2; போக்கோ எம் 2 புரோ உள்ளிட்ட செல்பேசிகளுக்கும் தள்ளுபடி சலுகை விலைகளை அளித்துள்ளது.

இதன்படி, போக்கோ சி 3 கைக்கணிகளி 3ஜிபி நினைவகம் மற்றும் 32 ஜிபி கொள்ளளவு சேமிப்பு திறனுடன் விற்பனைக்கு வந்துள்ளன. இது 500 ரூபாய் தள்ளுபடி விலையில் 7 ஆயிரத்து 499 ரூபாய்க்கு கிடைக்கிறது. இதேபோல் 4ஜிபி மற்றும் 64 ஜிபி திறன் செல்பேசிகளும் 500 ரூபாய் தள்ளுபடி விலையில் கிடைக்கும். போக்கோ எம் 2 ரக கைக்கணினி 6ஜிபி நினைவக வசதி மற்றும் 64 ஜிபி கொள்ளளவு சேமிப்பு வசதியுடன் 10 ஆயிரத்து 499 ரூபாய்க்குக்கிடைக்கும். இதே 6ஜிபி நினைவகத்திறன் மற்றும் 128 ஜிபி கொள்ளளவு சேமிப்பு திறன் வசதி கொண்ட செல்பேசியை அதன் விற்பனை விலையிலிருந்து ஆயிரம் ரூபாய் தள்ளுபடியில் 11 ஆயிரத்து 499ரூபாய்க்கு வாங்கலாம்.

இதேபோல் போக்கோ எம் 2 புரோ ரகங்களின் மூன்று வகைகளும் ஆயிரம் ரூபாய் தள்ளுபடி விலையில் 12,999 ; 13,999 மற்றும் 6 ஜிபி நினைவகம் மற்றும் 128 ஜிபி கொள்ளளவு திறன் கொண்டது 15 ஆயிரத்து 999 ரூபாய்க்கும் கிடைக்கிறது. போக்கோ எக்ஸ் 2 ரகத்தில், 6ஜிபி நினைவகம்,64 ஜிபி கொள்ளளவு சேமிப்பு; மற்றும் 6ஜிபி நினைவகதிறன், 128 ஜிபி கொள்ளளவு சேமிப்பு திறன் கொண்ட செல்பேசிகள் ஆயிரம் ரூபாய் என்ற தள்ளுபடியில் கிடைக்கும் என்றும் பிளிப்காா்ட் தெரிவித்துள்ளது.

மோட்டோரோலா செல்பேசிகள்

மோட்டோரோலா நிறுவனம் ஒன் ப்யூசன் பிளஸ்,



● மேகலைவாணன்

மொட்டோ ஜி 9 மற்றும் மோட்டோ இ 7 பிளஸ் ஆகியவற்றிற்கும் தீபஒளித்திருநாள் விற்பனையில் சிறப்பு சலுகைகளையும் அறிவித்துள்ளது. ஒன் ப்யூசன் பிளஸ் 16 ஆயிரத்து 999 ரூபாய்க்கும், மோட்டோஜி ஜி 9 ரகம் ஒன்பது ஆயிரத்து 999 ரூபாய்க்கும் கிடைக்கும். இதன் விற்பனை விலை 11 ஆயிரத்து 499 ஆகும். மோட்டோ இ 7 பிளஸ் ரகமானது 9 ஆயிரத்து 499 க்குப்பதிலாக 8 ஆயிரத்து 999 ரூபாய்க்குக் கிடைக்கும்.

சில முன்னணி நிறுவனத் தயாரிப்புகள்

இதுதவிர பிளிப்காா்ட் நிறுவனம் ஐபோன் எக்ஸ் ஆர் 64 ஜிபி ரகத்திற்கு 7 ஆயிரத்து 900 ரூபாய் தள்ளுபடியும் தருகிறது. இந்தரகம் வாடிக்கையாளர்களுக்கு 39 ஆயிரத்து 999 ரூபாய் என்ற சலுகை விலையில் கிடைக்கும். இதேபோல் ஐபோனின் எஸ் இ ரக 64 ஜிபி மாடலை 32 ஆயிரத்து 999 ரூபாய்க்கு கிடைக்கும். இதன் உண்மையான விற்பனை விலை 39 ஆயிரத்து 900 ரூபாய் என்பது குறிப்பிடத்தக்கது.

எல்.ஜி ரக கைக்கணினி ரகங்களிலும் சலுகைகளை பிளிப்காா்ட் அளிக்கிறது. எல்ஜி ஜி 8 எக்ஸ் செல்போனில் 6ஜிபி நினைவகம் மற்றும் 128 ஜிபி கொள்ளளவு சேமிப்பு திறனுடன் வரும் ரகங்களை 24 ஆயிரத்து 990 ரூபாய்க்கு வாங்கலாம். இதன் உண்மையான விற்பனை விலை 54 ஆயிரத்து 990 ரூபாய் என்பது கவனிக்கத்தக்கது. இந்த விற்பனை நவம்பர் 3 ஆம் தேதி மதியம் 12 மணிக்கு நடைபெறும் என பிளிப்காா்ட் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதேபோல் பிளிப்காா்ட் நிறுவனம் பிக் தீபாவளி விற்பனையின் போது ஒப்போ, விவோ, சாம்சங், சியோமி, இன்பினிக்ஸ், நோக்கியா, டெக்னோ, ஹானர் உள்ளிட்ட செல்பேசி ரகங்களுக்கும் சில சலுகைகளை அறிவித்து விற்பனையில் ஈடுபட்டுள்ளது.

இந்த தீபஒளித்திருநாளி வாடிக்கையாளர்களின் வாங்கும் சக்தியை அதிகரிக்கும் வகையில் நிதிக்கடன் வசதிக்கும் ஏற்பாடுகளை செய்துள்ளது. அந்த வகையில் ஆக்சிஸ் வங்கியுடன் இணைந்து வாய்ப்புகளை வழக்குகிறது. மேலும் கடன் மற்றும் பற்று அட்டைகள் மூலம் செல்பேசி வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு கூடுதலாக 10 விழுக்காடு வரை தள்ளுபடி வசதியையும் வழங்குகிறது. ■

# வள்ளலாரும் ஔவையாரும்!

> ஔவையாருக்கும் வள்ளலாருக்கும் என்ன ஒற்றுமை? மற்றும் வேற்றுமை? இருவரும் இயற்றிய செய்யுள்களிலிருந்து இதை பதிவிடுகின்றேன்.

ஔவையார் இயற்றிய உலக நீதி செய்யுள்.

ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்

ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்

மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்

வஞ்சனைகள் செய்வாரோடிணங்க வேண்டாம்

நெஞ்சாரப்பொய் தன்னைச் சொல்ல வேண்டாம்

நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்

அஞ்சாமல் தனி வழியே போக வேண்டாம்

அடுத்தவரை ஒரு நாளும் கெடுக்க வேண்டாம்

மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்

மாற்றானை உறவென்று நம்ப வேண்டாம்

சினந் தேடி அல்லலையும் தேட வேண்டாம்

சினந் திருந்தார் வாசல் வழிச் சேரல் வேண்டாம்

வார்த்தை சொல்வார் வாய் பார்த்துத் திரிய வேண்டாம்

மதியாதார் தலை வாசல் மிதிக்க வேண்டாம்.

மூத்தோர் சொல் வார்த்தை தனை மறக்க வேண்டாம்.

முற் கோபக்காரரோடிணங்க வேண்டாம்.

பத்து வயது கூட நிரம்பாமல் பள்ளியில் படித்துக்கொண்டிருந்த ஒரு சிறிய மாணவனாக இருந்த வள்ளலார் பெருமானுக்கு வேண்டாம் என்ற எதிர்மறையான வார்த்தைகளை கூற விரும்பாமல் 'வேண்டும்','வேண்டும்' என ஒரு நேர்மறையான கருத்துக்களை கூறும் பாடலை பாடினார்.

இது நடந்தது மிகவும் பழைய காலமல்ல,150 ஆண்டுகளுக்கு முன்னாள் நடந்த ஒரு சம்பவம்.

பத்து வயது கூட நிறைவடையாமல் ஒரு சிறிய மாணவனாக பள்ளியில் படித்துக்கொண்டிருந்த வள்ளலார் பெருமானுக்கு பிறவியிலேயே ஞானம் மிகுதியாக இருந்தது.

ஒரு முறை அவரது ஆசிரியர் மாணவர்களுக்கு ஔவையாரின் ஆத்திச்சூடியை சொல்லிக்கொடுக்கிறார்.

"ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்"

மாணவனாக இருந்த வள்ளலார் மட்டும் ஆத்தி சூடியை சொல்ல வில்லை.

ஆசிரியருக்கு கோபம் வந்து விட்டது.

ஏண்டா வாயை திறக்க மாட்டேங்குற".

"வேண்டாம், வேண்டாம் என்று



● திருச்சி வை.சுவாமிநாதன்

சொல்லபிடிக்கவில்லை அய்யா, வேண்டும் வேண்டும் என இதை மாற்றிப்பாடலாம் அல்லவா" என்கிறார் வள்ளலார்.

ஆசிரியர் திகைத்தார், அவரின் திகைப்பு அடங்கும் முன்னரே, சின்னஞ்சிறு பிள்ளையான வள்ளலார் கீழ்கண்டவாறு பாடுகிறார்.

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்

பெருமை பெறு நினது புகழ் பேசவேண்டும் பொய்மை பேசாதிருக்க வேண்டும்

பெருநெறி பிடித்தொழுக வேண்டும்

மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்

மருவு பெண்ணாசையை மறக்கவே வேண்டும்

உனை மறவாதிருக்க வேண்டும்

மதிவேண்டும் நின் கருணை நிதி வேண்டும்

நோயற்ற வாழ்வு நான் வாழவேண்டும்

தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்துள் வளர் தலமோங்கு கந்தவேளே தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி சண்முகத் தெய்வமணியே.

ஔவையார் 'வேண்டாம்' என எதிர்மறையாகவும், வள்ளலார் 'வேண்டும்' என நேர்மறையாகவும் என நீதி கருத்துக்களை பாடியது இருவருக்குமுள்ள வேற்றுமை!

ஔவையாரும் வள்ளலாரும் நல்ல நீதி கருத்துக்களை பாடியது இருவருக்குமுள்ள ஒற்றுமை.

அதைவிட இருவருமே தமிழ்ஞான கடவுளான முருகனின் தரிசனம் பெற்றவர்கள் என்பது இருவருக்குமுள்ள பெரிய ஒற்றுமை.

ஔவையாருக்கு சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? எனக்கேட்டு முருகப்பெருமான் தரிசனம் கொடுத்தார்.

வள்ளலாருக்கு முருகப்பெருமான் கண்ணாடியில் தரிசனம் கொடுத்தார்.

ஔவையார், வள்ளலார் இருவருமே சித்தர்களுக்கு எல்லாம் சித்தனான முருகப்பெருமானிடம் நிறைவுத் தீட்சை பெற்று மரணமிலாப் பெருவாழ்வு எய்தியவர்கள் என்பது மறுக்க முடியாத ஒற்றுமை! ■





### தேவர் குரு பூஜை நடந்துள்ளது பற்றி?

தேசியமும்,தெய்வீகமும் தனது இரண்டு கண்களாக எண்ணி வாழ்ந்தவர் பசும் பொன் முத்துராமலிங்கத்தேவர். சிறை சென்ற தியாகி. தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு தங்களுடைய நிலத்தை தானம் செய்ய கொடை வள்ளல். தங்கள் தலைவரைப் பெற்றதற்காக முக்குலத்தோர் பெருமையோடு ஆண்டு தோறும் எடுக்கின்ற விழாவில் அவர்கள் பெருமைப்படுத்திக்கொள்வதில் உரிமை உண்டு.ஆனால் அங்கேயும் அரசியல் புகுந்ததுதான் வேதனை. 1908 அக்டோபர் 30ந்தேதி பிறந்த தேவர் திருமகனார் அதே அக்டோபர்30ந்தேதி1963ல் இறந்தார்.எனவே இரண்டையும் இணைத்து அவர் பிறந்த பசும்பொன்னில் குருபூஜை வெகு கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. மற்றவர்களுக்காக பெயருக்கு அவருக்கு மரியாதை செய்வதை விட அவர் சொன்ன பொன்மொழிகளில் ஒன்றிரண்டாவது ஏற்போம்

“உண்மையாகவே ஏழை விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று சர்க்கார் கருதினால் விவசாயிகள் நவீன முறையில் விவாசாயம் செய்து கிராமங்களில் தங்கி இருப்பதற்கு வழி செய்ய வேண்டும்.”

“யாவரும் வாழ்க என்று சொல்லுங்கள், ஒழிக என்று ஏன் சொல்ல வேண்டும்...? நல்லவைகள் வாழ்க என்று சொன்னால் நீங்கள் நினைக்கிற கெட்டவைகள் ஒழியத்தானே செய்யும்.”

இது போன்றவை அவர் சொன்னது ஏராளம். அவற்றைக் கடைபிடிப்போமா!

### அமைச்சர் துரைக்கண்ணு மறைவு குறித்து.....

கொரானாவிற்கு தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகளில் தி.மு.க . எம்.எல்.ஏ ஜெ.அன்பழகன்,காங்கிரஸ் எம்.பி வசந்தகுமார், அ.ம.மு.க முன்னாள் எம் எல்.ஏ.வெற்றிவேல் வரிசையில் அ.தி.மு.க வேளாண்துறை அமைச்சர் துரைக்கண்ணு பலியாகியிருக்கிறார்.

அமைச்சர் துரைக்கண்ணு மறைவு குறித்து இரங்கல் செய்தி வெளியிட்டுள்ள பிரதமர் மோடி, "தமிழக அமைச்சர் துரைக்கண்ணு மரணம் வேதனை தருகிறது. சமுதாயத்திற்கு சேவையாற்றவும், விவசாயிகளுக்கு அதிகாரம் அளிக்கவும் குறிப்பிடத்தக்க வகையில் துரைக்கண்ணு முயற்சிகளை மேற்கொண்டார். இந்த துயரமான நேரத்தில் துரைக்கண்ணுவின் குடும்பத்தினருக்கும் ஆதரவாளர்களுக்கும் இரங்கல் தெரிவித்துக் கொள்கிறேன்" என மோடி தெரிவித்துள்ளார்.

1948ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்டம் ராஜகிரியில் பிறந்தவர் துரைக்கண்ணு. இவருக்கு மனைவியும் இரண்டு மகன்களும் நான்கு மகள்களும் உள்ளனர். 2016ஆம் ஆண்டு பாபநாசம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்று வேளாண்துறை அமைச்சராகப் பதவியேற்றார்.

அதே தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் 2006, 2011 தேர்தல்களிலும் போட்டியிட்டு வெற்றிபெற்றாலும் இந்த முறைதான் அவருக்கு அமைச்சர் பதவி கிடைத்தது.

அ.இ.அ.தி.மு.க. துவங்கப்பட்டபோது அக்கட்சியில் சேர்ந்த இவர், மாணவரணி, இளைஞரணி உட்பட பல்வேறு பொறுப்புகளில் இருந்தவர். பாபநாசம் ஒன்றியத்தின் அ.இ.அ.தி.மு.க செயலராகவும் துரைக்கண்ணு இருந்துள்ளார்.



# எம் பதில்கள்



## ஜேம்ஸ்பாண்ட்....?

ஸ்காட்லாண்டில் உள்ள எடின்பர்க் நகரில் தாமஸ் கானரி என்ற ஏழை ஆலைத்தொழிலாளியின் மகனாக 1930 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் தேதி பிறந்தவர், சீன் கானரி.

திரையில் கதாபாத்திரங்களை பார்க்கும் நாம் அதில் நடிப்பவரை அந்த பாத்திரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறோம்.அப்படி ஜேம்ஸ்பாண்ட் வேடத்தில் நடித்து நம்மைக் கவர்ந்தவர். சீன்கானரி 1962 ஆம் ஆண்டு வெளிவந்த “DR.NO” என்ற படம் மூலம் ஜேம்ஸ்பாண்டாக

“பாண்ட்.. ஜேம்ஸ்பாண்ட்” என்ற வசனத்துடன் இவர் அறிமுகம் ஆகும் போது, தியேட்டர்கள் அதிரும். ஜேம்ஸ்பாண்டாக, சீன்கானரி நடித்த கடைசி படம் ‘நெவர் சே.. நெவர் அகெய்ன்’.

பொருத்தமான; டைட்டில்’... அதன் பின் அவரை ஜேம்ஸ்பாண்ட் வேடங்களில் பார்க்க முடியவில்லை அல்லவா? அந்த டைட்டில் இன்றும் பொருந்துகிறது. சீன்கானரியை இனி பார்க்க முடியாது. NEVERAGAIN.



# Suggestion for success for Entrepreneur

**Owning your own business gives you a sense of freedom and empowerment. You can build things and watch them grow.**

*Entrepreneurs make decisions for themselves, realize their creative visions, and develop lasting relationships with other entrepreneurs, customers, and vendors.*

*It's a great way to live. That's why I've founded so many companies - I can't get enough.*

*That's why I've put together these tips to help you to become more successful.*

*1. Get gritty Grit is perseverance. Grit is the go-get-'em attitude that we expect of entrepreneurs. Grit is the ability to keep working when everyone tells you that you should give up.*

*If you want to be a successful entrepreneur, you have to be gritty.*

*Honestly, without hard work and perseverance, you're not going anywhere in the entrepreneurial world.*

*If you want to be a successful entrepreneur, you have to challenge yourself. No one else is going to push you, so it's up to you to do it.*

*Challenges keep entrepreneurs nimble and on their toes. If you're constantly looking for the next challenge, you'll always be prepared for what comes your way.*

*If you don't love what you do, don't do it. I truly believe it's as simple as that.*

*As an entrepreneur, you're going to have to put in long hours and make sacrifices for your business.*

*When you're passionate about what you do, putting in the long hours won't feel like a sacrifice anymore.*

*If you're not passionate about what you do, you're not going to have the motivation to keep*

going when you're stressed and tired.

Have you ever noticed those entrepreneurs who never seem to get tired? Those entrepreneurs who get that gleam in their eye when they talk about what they do?

Humans are generally risk-averse, but part of being an entrepreneur is recognizing the risks that you should take.

Successful entrepreneurs take risks. It's part of the job.

Successful entrepreneurs also know which risks to take and which they shouldn't. Learn to recognize the risks that will benefit your business and take them.

Being a successful entrepreneur means that you've learned to listen to your intuition and rely on your wisdom when making decisions.

Your ability to trust and believe in yourself will show your confidence. People are more likely to follow and trust confident leaders.

Trusting in your own skills will also take some of the pain of uncertainty out of being an entrepreneur.

When you feel uncertain, remember how much experience and knowledge you have. Most entrepreneurs start their business after years of experience working for someone else.

As an entrepreneur, if you let fear be your guide, you won't be able to listen to your intuition, you'll be afraid to take the necessary risks, and your judgment will be clouded by emotion.

Find ways to reduce and manage your fear and you'll be a much more successful entrepreneur.

When you can clearly articulate and visualize your goal, it becomes more achievable

Successful entrepreneurs aren't successful within a vacuum. We all have a great team and support network behind us

It's easy to get wrapped up in planning, considering potential failures, discussing funding, and talking in meetings with board members. If all you do is talk, you'll get nothing done.



Concept by
**S.SHRUTHI LAKSHMI**
B.Sc., (Phychology)

Successful entrepreneurs take the time that's required to reach succes.

Many entrepreneurs spend too much time looking for money and not enough acting, but that doesn't mean that you can leap into the abyss without a plan.

For most entrepreneurs, they're using their own savings to start their business. That's risky. Have a plan and you minimize your risk.

One of the most common reasons that entrepreneurial businesses fail is that there isn't a customer.

If you start a business or make a product but don't know who will buy it, that person might not actually exist.

Before you make a financial plan, raise capital, or even choose a name, make sure that there's a customer who would buy your product or use your services. Without a customer, you don't have a business. Successful entrepreneurs know who their customers are.

You might have customers who are interested in your product or service, but if you don't listen to their complaints, you soon will have no customers

If you deliver more than you promised, you're sure to have satisfied customers, investors, and business partners. Learn to recognize which risks are worth taking and which you should walk away from.

As an entrepreneur, you'll be inundated with your business, needing to take care of it all the time. So when you get home and have some leisure time, you might be tempted to read fiction or books for entertainment

Meet everyone you come into contact with and have a short chat. You never know who you're sitting next to and what connections or resources they might be able to offer you. ■

# காலத்துக்கும் பொருந்தும் கண்ணதாசன் பாடல்கள்!

கொரானா காலத்தில் மரணங்கள் சாதாரணமாகிப் போய்விட்டது. அடுத்தவர் மரணம் நமக்கு அதிர்ச்சியானதாக இருந்தது. ஆனால் மரணம் தொடர்ந்து நடைபெறுவதால் நமக்கு பழகிவிட்டது. பிறப்பும், இறப்பும் நமக்குத் தெரியாது. இடைப்பட்ட காலத்தில் மனிதன் போடும் ஆட்டம் அவனுக்கு பின்னாள் தமக்கு வரப்போவதை உணராததுதான். காலத்துக்கும் பொருந்தும் கண்ணதாசன் பாடல் முகராசியில் எம்.ஜி.ஆர். பாடுவதாக அமைந்தது.



**நன்றி: இதயக்கனி எஸ்.விஜயன்**

உண்டாக்கி விட்டவர்கள் ரெண்டு பேரு இங்கே
கொண்டு வந்து போட்டவர்கள் நாலு பேரு
கொண்டாடும் போது ஒரு நூறு பேரு உயிர்
கூடு விட்டுப் போன பின்னே கூட யாரு?
உண்டாக்கி விட்டவர்கள் ரெண்டு பேரு இங்கே
கொண்டு வந்து போட்டவர்கள் நாலு பேரு

தீராத நோய்களையும் தீர்த்து முடித்தான் இவன்
தேராத வைத்தியத்தைத் தேர்ந்து படித்தான்
படித்தான் முடித்தான் ஹோய்
தீராத நோய்களையும் தீர்த்து முடித்தான் இவன்
தேராத வைத்தியத்தைத் தேர்ந்து படித்தான் பிறர்
நோய் தீர்க்கும் வைத்தியன்
தன் நோய் தீர்க்க மாட்டாமல்
பாய் போட்டுத் தூங்குதப்பா உயிரும்
பேயோடு சேர்ந்ததப்பா ஹோய்

உண்டாக்கி விட்டவர்கள் ரெண்டு பேரு இங்கே
கொண்டு வந்து போட்டவர்கள் நாலு பேரு

கல்யாணம் செய்வதற்கும் நாள் சொல்லுவார் எந்தக்
காரியத்தை செய்வதற்கும் தேதி குறிப்பார்
கல்யாணம் செய்வதற்கும் நாள் சொல்லுவார் எந்தக்
காரியத்தை செய்வதற்கும் தேதி குறிப்பார் நல்ல
சேதி சொல்லும் ஜோசியர்க்கும்
நீதி சொல்லும் சாவு வந்து
தேதி வைத்து விட்டதடியோ கணக்கில்
மீதி வைக்கவில்லையடியோ ஹோய்

உண்டாக்கி விட்டவர்கள் ரெண்டு பேரு இங்கே
கொண்டு வந்து போட்டவர்கள் நாலு பேரு

பட்டணத்தில் பாதி இவன் வாங்கி முடித்தான் அந்தப்
பட்டயத்தில் கண்டது போல் வேலியெடுத்தான் எடுத்தான்
முடித்தான் ஹோய்
பட்டணத்தில் பாதி இவன் ஙாங்கி முடித்தான் அந்தப்
பட்டயத்தில் கண்டது
போல் வேலியெடுத்தான் அதில்
எட்டடுக்கு மாடி வைத்துக்
கட்டிடத்தைக் கட்டி விட்டு
எட்டடிக்குள் வந்து படுத்தான் மண்ணைக்
கொட்டியவன் வேலியெடுத்தான் ஹோய்

உண்டாக்கி விட்டவர்கள் ரெண்டு பேரு இங்கே
கொண்டு வந்து போட்டவர்கள் நாலு பேரு
கொண்டாடும் போது ஒரு நூறு பேரு உயிர்
கூடு விட்டுப் போன பின்னே கூட யாரு? ■

# சீரான குளம்: நிரம்பிய மழை



## ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவரின் அரும்பணி...

ஊராட்சி குளத்தை, ஒன்றிய நிர்வாகம் துார் வாரி சீரமைத்ததால், தற்போது பெய்த பலத்த மழையால், குளத்தில் தண்ணீர் நிரம்பியுள்ளது.

திருவாலங்காடு ஒன்றியம், குப்பம்கண்டிகை ஊராட்சியில், பொன்னியம்மன் குளம் உள்ளது. இந்த குளத்தில், தண்ணீர் இருந்தால் கிராமத்தில் குடிநீர் ஆதாரம் பெருகும்.மேலும், குடிநீர் தட்டுப்பாடு இருக்காது. இந்நிலையில், குளத்தை ஊராட்சி நிர்வாகம் முறையாக பராமரிக்காததால், குளம் பழுதடைந்தும், நீர்வரத்து கால்வாய் புதைத்தும் இருந்ததால், தண்ணீர் இல்லாமல் குளம் வறண்டு கிடந்தது.

இதையடுத்து, ஒன்றிய நிர்வாகம், 2019 20ம் ஆண்டு, மாநில நிதிக் குழு மூலம், 5 லட்சம் ரூபாயில், பொன்னியம்மன் குளம் துார்வாரி சீரமைக்க தீர்மானிக்கப்பட்டது. இதை தொடர்ந்து, குளத்தை துார் வாரும் பணியை, கடந்த மாதம் துவக்கப்பட்டது.தொடர்ந்து நீர்வரத்து கால்வாய் சீரமைத்தும், துார் வாரும் பணிகள் நிறைவடைந்த நிலையில், கடந்த வாரம் தொடர்ந்து பலத்த மழை பெய்ததால், குளத்தில் தண்ணீர் நிரம்பியுள்ளது.ஐந்து ஆண்டுகளுக்கு பின், குளம் நிரம்பியதால், பொன்னியம்மன் குளக்கரையில், ஒன்றிய குழுத் தலைவர் ஜீவா மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் பங்கேற்று, பூஜை போட்டு, குளத்தில் மலர் துாவி, வருண பகவானுக்கு, நன்றி தெரிவித்தனர்.குளத்தில் தண்ணீர் நிரம்பி உள்ளதால், கிராம மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ■


## மித்ரா டைம்ஸ் உங்கள் இல்லம் தேடி வரவேண்டுமா?

ஆறாம் ஆண்டின் துவக்கத்தில் அடியெடுத்து வைக்கும் மித்ரா டைம்ஸ் இலட்சக்கணக்கான வாசகர்களோடு பயணிக்கிறது. இதழ்களில் இடம் பெறும் செய்திகள், கட்டுரைகள் பயனுள்ளதாகவும் தங்களின் முன்னேற்றத்திற்கு உதவியாய் இருப்பதாகவும் மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

தாங்கள் அறியாத செய்திகள், புதிய தகவல்களையும் மித்ரா டைம்ஸ் எங்களுக்கு வழங்குகிறது என்பது வாசகர்களின் கருத்து.

மித்ரா டைம்ஸ் சந்தாதாரராக தாங்கள் இதுவரை ஆகவில்லையென்றால் உடனே செலுத்துங்கள்.

| |
|---|
| ஆயுள்சந்தா : ரூ.2400.00 |
| ஆறாண்டு சந்தா : ரூ.1440.00 |
| ஆண்டு சந்தா : ரூ.240.00 |

மேலும் விபரங்களுக்கு: 044-23743007/8

தொகை செலுத்த வேண்டிய விபரம்:

| | | |
|---|---|---|
| Name | : | MITRA TIMES |
| A/C no | : | 50200012576292 |
| Bank | : | HDFC Bank |
| Branch | : | T.Nagar |
| IFSC | : | HDFC0000206 |



# ஓர் எழுத்து ஒரு சொல்!

ஒரு எழுத்து தனியாக நின்று ஒரு சொல்லாகுமானால் அந்த எழுத்து ஒரெழுத்து ஒரு சொல் ( அல்லது) ஒரெழுத்து ஒரு மொழி என்பார்கள்.

ஈ, மை, நீ, கை, கோ, வா, பூ, போ, பை போன்ற ஒரெழுத்து ஒரு சொல்லை பேச்சு வழக்கில் நாம் பயன்படுத்துவோம். ஆனால், தமிழில் நாற்பத்தி இரண்டு எழுத்துக்கள் ஒரெழுத்து ஒரு சொல் உள்ளது.

ஒரு எழுத்து சொல்லாகி தருகிற அர்த்தங்களோடு பார்ப்போம்.

ஆ - பசு
ஈ - பறவை
ஊ - றைச்சி
ஏ - கணை
ஐ - தலைவன்
ஓ - வியப்பு
மா - பெரிய
மீ - மேல்
மூ - மூப்பு
மே - மேன்மை
மை - இருள்
மோ - மோதுதல்
தா - கொடு
தீ - நெருப்பு
தூ - தூய்மை
தே - தெய்வம்
தை - மாதம்
சா - சாதல்
சீ - இலக்குமி
சே - எருது
சோ - மதில்
பா - பாட்டு
பூ - மலர்
பே - நுரை
பை - பசுமை
போ - செல்
நா - நாக்கு
நீ - முன்னால் இருப்பவர்
நே - அருள்
நை - இகழ்ச்சியை குறிப்பத்து
நோ - வலி
கா - பாதுகாப்பு
கூ - வெல்
கை - ஒப்பனை
கோ - அரசன்
வீ - மலர்
வை - வைக்கோல்
வெள - கைப்பற்றுதல்
யா - கட்டுதல்
நொ - துன்பம்
து - உணவு

இந்த அனைத்து ஓர் எழுத்து சொற்களையும் கவனித்தீர்களானால் ஓர் ஆச்சர்யம் உங்களுக்குத் தெரியும். இவற்றில் நொ, து, என்ற இரண்டு எழுத்துக்கள் மட்டும் தான் குறில் என்கிற குறைந்த கால அளவுடைய எழுத்துக்கள். மற்றவை எல்லாம் நீண்ட ஒலி அளவுடைய நெடில்கள் என்பதுதான் அந்த ஆச்சிர்யம்... ■



S.JANAKI



# குருப் பெயர்ச்சி 2020 – 2021

## 12 ராசிகளுக்கும் துல்லியமான பலன்கள்




ஜோதிட வித்தகர்
**பரணிதரன்**
9444 393 717


**குரு பகவான் தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் குருவாக விளங்குபவர், ஜாதகத்தில் மற்ற கிரகங்களின் நிலை எப்படி இருந்தாலும் பொன்னவனான குருவின் பலம் இருந்தால் அவர் சிறப்பினை அடைந்திடுவார், சந்திரன், செவ்வாய், சூரியன் இவருக்கு நட்பானவர்கள், புதனும் சுக்கிரனும் இவருக்குப் பகைவர்கள், தனுசு,மீனம் இவருடைய ராசி வீடாகும், கடக ராசியில் உச்சமாகும் குரு பகவான் மகர ராசியில் நீச்சமடைவார், புனர் பூசம், விசாகம், பூரட்டாதி நட்சத்திரங்கள் இவருக்கு உரியவை ஆகும்.**

தலைமைப் பதவி, திருமணம், குழந்தைகள், கௌரவம், அறிவாற்றல் ஆகியவை இவரால்தான் நாம் அடைகிறோம், இவர் அமரும் வீட்டிற்கு பலன் தருவதை விட இவர் பார்க்கும் ராசிகளுக்கு பலன் தருவார், அதனால்தான் அனைத்திற்கும் குரு பார்வை வேண்டும் என்கிறோம்.

ஆண்டிற்கு ஒரு முறை ஒவ்வொரு ராசியாக பெயர்ச்சியாவதின் மூலம் 12 ராசியினருக்கும் தன் பார்வை பலத்தால் நன்மைகளை வாரி வழங்கும் குரு பகவான், ஐப்பசி 15 ஆம் தேதி (15.11.2020) அன்று இரவு 9.36 மணிக்கு தனுசு ராசியில் இருந்து மகர ராசிக்குப் பெயர்ச்சியாகி தனது 5,7,9, பார்வைகளால் ரிஷபம், கடகம், கன்னி ராசிகளைப் பார்த்து இந்த மூன்று ராசியினர் வாழ்விலும் நன்மைகளை உண்டாக்கப் போகிறார், என்பது ஒரு பக்கம் என்றாலும் டிசம்பர் 26 ஆம் தேதி (மார்கழி 11) அன்று சனி பகவானும் பெயர்ச்சியாகி இவருடன் மகர ராசியில் இணைய உள்ளார்.

குரு பகவானும் சனி பகவானும் இணைந்திருந்தாலும் பார்த்துக் கொண்டாலும் அது பிரம்மஹத்தி தோஷத்தை உருவாக்கும் என்பது ஜோதிட விதி, கடந்த ஆண்டு முழுவதும் குருவும் சனியும் இணைந்தே இருந்து நாட்டிற்கும் மக்களுக்கும் பல்வேறு சங்கடங்களை உருவாக்கிய நிலையில் நவம்பர் 15 அன்று குரு பகவான் மகரத்திற்கு சென்றாலும் டிசம்பர் 26 அன்று சனி பகவானும் மகரத்திற்கு சென்று குரு பகவானுடன் இணைவது மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பதாகவே இருக்கும் என்றாலும் ஒரு சில மாறுதல்கள் ஒவ்வொரு ராசியினருக்கும் உண்டாகும் என்பது உறுதி, அது பற்றி இங்கே பார்ப்போம்.

## மேஷம்

இதுவரை ஒன்பதாம் வீட்டில் சஞ்சரித்து வந்த குரு பகவான் நவம்பர் 15 முதல் உங்கள் ராசிக்கு 10 ஆம் வீடான மகரத்தில் சஞ்சரித்து உங்களுக்கு பலன்களை வழங்கிட உள்ளார்.

பத்தாம் இடம் என்பது தொழில் ஸ்தானமாகும், இங்கே குரு சஞ்சரிக்கும் போது தொழிலில் பின்னடைவு, உத்தியோகத்தில் சங்கடங்கள் உண்டாகும் என்பது பொது விதி என்றாலும் குரு பகவான் மகர ராசியில் நீச்சமடைகிறார் என்பதும், குருவிற்கு வீடு அளித்துள்ள சனியும் குருவும் மேஷ ராசியினருக்கு தர்ம கர்மாதிபதிகள் என்பதால் உங்களுக்கு குருப்பெயர்ச்சியாலும் அதன்பின் அங்கே வர இருக்கும் சனி பகவானாலும் நன்மைகளே உண்டாகும்.

குரு பகவானின் பார்வை உங்கள் ராசிக்கு 2,4,6 ஆம் வீடுகளின் மீது பதிவதால் கொடுத்த வாக்கை காப்பாற்றும் நிலை உண்டாகும், குடும்பத்தில் இருந்து வந்த சச்சரவுகள் அகலும், உறக்கம் ஒய்வு மகிழ்ச்சி என்று உங்கள் நிலை மாறும், தாயாரின் உடல் நலனில் முன்னேற்றம் உண்டாகும், உடல் நலிவிலிருந்து மீண்டு உற்சாகமுடன் செயல்பட ஆரம்பிப்பீர்கள், எதிரிகளால் உண்டான தொல்லைகள் அகலும், அவர்களை அடக்கி வெற்றி பெறுவீர்கள் என்றாலும் தொழிலிலும் உத்தியோகத்திலும் எச்சரிக்கையாகவும் கூடுதல் கவனத்துடனும் இருங்கள். குரு சனி இணைப்பினால் உண்டாகும் தோஷத்திற்கு ராமேஷ்வரம் சென்று அக்னி தீர்த்தத்தில் நீராடி தில ஹோமம் செய்து தனுஷ்கோடியில் பிண்டம் கரைத்து விட்டு வாருங்கள், மூதாதையரின் அருள் கிடைக்கும் சங்கடங்களும் தடைகளும் அகன்று நன்மை அடைவீர்கள்.

## ரிஷபம்

இதுவரை எட்டாம் வீடான அட்டம ஸ்தானத்தில் சஞ்சரித்து அனைத்திலும் தடை, சங்கடம், உடல் நலனில் பின்னடைவு என்று எதிர் மறையான பலன்களையே அனுபவித்து வந்த உங்களுக்கு 15.11.2020 அன்று ஒன்பதாம் வீட்டிற்குச் செல்லும் குரு பகவானால் யோகமான நிலையை அடையப் போகிறீர்கள்.

அதற்கும் மேலாக உங்கள் ராசிக்கு பாக்கியாதிபதியான சனி பகவான் 26.12.2020 அன்று பாக்கியஸ்தானத்திற்கே வருவது மிகச் சிறப்பான நிலையை நீங்கள் அடைவதற்கு அடிகோளப் போகிறது.

இதுவரை சூனியத்தில் அகப்பட்டது போல் இருந்த உங்கள் நிலையில் மாற்றமும் ஏற்றமும் உண்டாகப் போகிறது, ஆரோக்கியத்தில் இருந்த சங்கடங்கள் அகன்று உற்சாகமுடன் செயல்பட ஆரம்பிப்பீர்கள், இடம் விட்டு இடம் மாறுதல், உத்தியோகத்தில் முன்னேற்றம், வீட்டினைப் புதுப்பித்தல், புதிய வாகனங்கள் வாங்குதல், குடும்பத்தில் சுப நிகழ்வு என்று குரு 15.11.2020 ல் இருந்து உங்கள் நிலை மாறப் போகிறது உங்கள் மதிப்பும் உயரப் போகிறது. குரு பகவான் உங்கள் ராசியையே ஐந்தாம் பார்வையாக பார்ப்பதால் உங்கள் செல்வாக்கு உயரும் மதிப்பு அதிகரிக்கும் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் உண்டாகும், இதுவரை திருமணம் ஆகாமல் இருந்தவர்களுக்கு அதற்குரிய வாய்ப்பு உண்டாகும், உங்கள் வீட்டில் குவா குவா சப்தமும் கேட்கும், உங்கள் ராசிக்கு 3, 5 ஆம் ராசிகளையும் குருபகவான் பார்ப்பதால் உங்களுக்குள் இதுவரை இல்லாமல் இருந்த பலமும் துணிச்சலும் அதிகரிக்கும் சகோதரர் வகையில் ஒற்றுமையும் நன்மையும் அதிகரிக்கும், பிள்ளைகள் வழியில் இருந்த சங்கடங்கள் அகலும் அவர்களுடைய எதிர்காலம் குறித்து திட்டமிடுவீர்கள், பொதுவாக ஒன்பதாம் இடத்து குரு உங்களுக்கு யோகங்களையே உண்டாக்கப் போகிறார்.

குரு பகவான் உங்கள் ராசிக்கு அட்டமாதிபதியும் லாபாதிபதியுமாவார் அவர் பிதுர் ஸ்தானதிபதியான சனி பகவானின் வீட்டில் சஞ்சரிப்பதாலும், சனி பகவான் டிசம்பர் 26 முதல் அதே வீட்டில் குரு பகவானுடன் இணைவதாலும் ராமேஸ்வரத்திற்கு குடும்பத்துடன் சென்று தீர்த்தங்களில் நீராடி, தில ஹோமம் செய்து தனுஷ்கோடியில் பிண்டம் கரைத்து விட்டு வாருங்கள் தோஷங்கள் அகலும் முன்னோரின் ஆசிகள் கிடைக்கப்பெறும்.

## மிதுனம்

இதுவரை ஏழாம் வீட்டில் இருந்து குரு பகவான் நன்மை அளிக்கும் நிலையில் இருந்தாலும் அவருடன் அதே வீட்டில் இணைந்திருந்த சனி பகவானின் சஞ்சாரமும் பார்வையும் ஏழாம் வீட்டில் இருந்த குருவின் பலனை நீங்கள் முழுமையாக அடைய முடியாமல் செய்து விட்டது. இந்த நிலையில்தான் 15.11.2020 அன்று உங்கள் ராசிக்கு 8 ஆம் வீடான மகர ராசியில் சஞ்சரித்து உங்களுக்குப் பலன்களை வழங்கிடப் போகிறார் குரு பகவான்.

எட்டாம் வீட்டில் குரு பகவான் சஞ்சரிக்கும் காலம் அவ்வளவு நல்லதல்ல என்றே கூற வேண்டும், இதுவரை இருந்த செல்வாக்கு மதிப்பு போன்றவற்றை எட்டாமிடத்துக் குரு இல்லாமல் செய்து விடுவார் என்றே சொல்ல வேண்டும், இருந்தாலும் குரு பகவான் உங்கள் ராசி நாதனான புதனுக்குப் பகைவர் என்பதாலும், அவர் எட்டாம் வீட்டில் நீச்சம் அடைவதாலும் உங்களுக்கு பெருமளவில் பாதிப்பு உண்டாக வழியில்லை என்றாலும் உங்களுக்கு ஆயுள் காரகனான சனி பகவான் ஆயுள் ஸ்தானத்திற்கே டிசம்பர் 26 அன்று வருவது உடல் ரீதியான சங்கடத்தை உங்களுக்கு அதிகரிக்கும் என்பதால் கவனமும் உடல் நலனில் அக்கறையும் தேவை.

குரு பகவான் 8 ஆம் வீட்டில் சஞ்சரிக்கும் இக்காலத்தில், உங்கள் ராசிக்கு 2,4,12 ஆம் வீடுகள் அவருடைய பார்வையால் பலம் பெறப் போகிறது என்பதால், குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் விலகும், சொன்ன சொல்லைக் காப்பாற்றும் நிலை உண்டாகும், தாயாரின் உடல்நிலையில் இருந்த சங்கடங்கள் அகலும், வீட்டில் சுப விரயங்கள் உண்டாகும், கணவன் மனைவி உறவு பலப்படும், கல்வியில் இருந்த தடைகள் அகலும் என்றாலும் எந்த ஒன்றையும் சிந்தித்து செயல்பட்டால் மட்டுமே நன்மைகளை அடைய முடியும் என்பதால் இக்காலத்தில் நிதானம் மிக மிக அவசியம்.

சனி பகவானும் குரு பகவானும் உங்களுக்கு தர்ம கர்மாதிபதிகள் என்பதால் அவர்கள் இருவரும் அட்டம ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகும் இக்காலத்தில் நீங்கள் ராமேஸ்வரம் சென்று தீர்த்தங்களில் நீராடி தில ஹோமம் செய்து தனுஷ்கோடியில் பிண்டம் கரைத்து விட்டு வருவதால் சங்கடங்களும் தடைகளும் அகன்று நன்மையை அடைவீர்கள்.



## கடகம்

இதுவரை ஆறாம் வீடான ருண ரோக சத்ரு ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான் உங்கள் உடல் நிலையில் பாதிப்பை உண்டாக்கி இருப்பார், எதிரிகளால் தொல்லைகளை உண்டாக்கி இருப்பார், பாப கிரகமான சனி பகவானும் ஆறாம் வீட்டில் சஞ்சரித்த காரணத்தினால் அனைத்தையும் சமாளித்து வந்திருப்பீர்கள். குரு பகவானுக்கு உங்கள் ராசிதான் உச்ச வீடு என்பதால் உங்களுக்கு சங்கடங்கள் வழங்குவதை விட நன்மைகளையே வழங்குவார் குரு பகவான். ஆறாம் வீட்டில் இருந்து உங்கள் ராசிக்கு ஏழாம் வீடான மகரத்திற்கு 15.11.2020 அன்று பெயர்ச்சியாகும் குரு பகவான் தனது ஏழாம் பார்வையால் உங்கள் ராசியையே பார்த்திடப் போகிறார். ஏழாம் வீடு என்பது களத்திர ஸ்தானம், நட்பு ஸ்தானமாகும், இங்கிருந்து சம சப்தம பார்வையாக உங்கள் ராசியைப் பார்க்கும் குரு பகவான் உங்கள் உடல் நிலையில் முன்னேற்றத்தை உண்டாக்குவார், தோற்றத்தில் இருந்த தளர்வை மாற்றி பொலிவை உண்டாக்குவார், சமுதாயத்தில் மதிப்பையும் மரியாதையையும் உண்டாக்குவார், திருமணம் ஆகாமல் இருப்பவர்களுக்கு திருமண யோகத்தையும், மழலை பாக்கியம் இல்லாதவர்களுக்கு மழலை பாக்கியத்தையும் வழங்கிடுவார் குரு பகவான் என்றாலும் டிசம்பர் 26 அன்று மகர ராசிக்கு பெயர்ச்சியாகும் சனி பகவான் அங்கே ஆட்சி பெறுவதால் குடும்பத்தில் சங்கடம், ஒற்றுமை இன்மை, கணவன் மனைவிக்குள் பிரச்சனை, நட்பில் விரிசல் என்ற நிலையும், தீய நட்புகளின் சேர்க்கையும் உருவாகலாம் என்பதால் எச்சரிக்கையுடன் இருங்கள். குரு பகவானின் ஸ்தான பலத்தை விட அவருடைய பார்வையே பலம் வாய்ந்தது என்பதால் உங்கள் ராசிக்கு 3 மற்றும் 11 ஆம் வீடுகளின் மீதும் குரு பகவானின் பார்வை பதிவதால், உங்கள் தைரியம் அதிகரிக்கும், துணிச்சலாக சில முடிவுகள் மேற்கொண்டு அதில் வெற்றி பெறுவீர்கள், சகோதரர்கள் வகையில் ஆதரவு உண்டாகும், தொழிலில் இருந்த பின்னடைவுகள் அகலும், பல வழிகளிலும் லாபம் வரும், புதிய சிநேகங்கள் உண்டாகும், அவர்களின் தொடர்பு வாழ்க்கை வரை வரலாம். பொதுவாக இக்காலம் கடக ராசியினருக்கு சாதகமான காலமாகவே இருக்கும்.

உங்கள் ராசிக்கு 6 மற்றும் 9 ஆம் வீட்டிற்குரிய குரு பகவானும், 7 மற்றும் 8 ஆம் வீட்டிற்குரிய சனி பகவானும் 26.12.2020 முதல் இணைவதால் உண்டாகும் பிரம்மஹத்தி தோஷத்திலிருந்து விடுபட ராமேஸ்வரம் சென்று தீர்த்தங்களில் நீராடி, தில ஹோமம் செய்து தனுஷ்கோடிக்கு சென்று பிண்டத்தை கரைத்து விட்டு வாருங்கள், தடைகள் அகலும், முன்னோர்களின் ஆசி பரிபூரணமாக உங்களுக்கு கிடைக்கும்.



## சிம்மம்

கிரகங்களில் ராஜ கிரகமான சூரியனுடைய வீடான சிம்ம ராசியில் பிறந்தவர்கள் எப்போதும் எந்த இடத்திலும் தனித் தன்மையுடன் விளங்கிடக் கூடியவர்கள் என்றாலும் உங்களுடைய மண வாழ்க்கை என்பது போராட்டமானதாகி விடும் என்பது பொது விதி. இதுவரை உங்கள் ராசிக்கு 5 ஆம் வீடான தனுசுவில் இருந்து பலன் வழங்கி வந்தார் குரு பகவான், பொதுவாக ஐந்தாமிடத்தில் ஆட்சியாக சஞ்சரித்த குரு உங்களுக்கு அபரிமிதமான பலன்களை வழங்கி இருக்க வேண்டும் என்றாலும், சனி மற்றும் கேதுவின் இணைவினால் எது உங்களுக்கு கிடைக்க வேண்டுமோ அது உங்களுக்கு கிடைக்காமல் போனது, குடும்பத்தில் நிம்மதியற்ற நிலை, பிள்ளைகளால் சங்கடம் என்று தொல்லையாகவே கடந்த ஆண்டினைக் கழித்திருப்பீர்கள், இந்த நிலையில் 15.11.2020 அன்று உங்கள் ராசிக்கு 6 ஆம் வீடான ருண ரோக சத்ரு ஸ்தானத்திற்கு குரு பகவான் பெயர்ச்சியாவதாலும் உங்களுக்கு நன்மைகள் கிடைக்கப் போவதில்லை, உடல் நிலையில் பிரச்சனை, மறைமுக எதிர்ப்பு என்பவை உருவாகக்கூடும் என்றாலும், டிசம்பர் 26 ஆம் தேதி சனி பகவான் பெயர்ச்சியாகி மகரத்தில் ஆட்சியாக சஞ்சரிக்க ஆரம்பித்தவுடன் உங்கள் நிலையில் மாற்றமும் முன்னேற்றமும் உண்டாகும், பாப கிரகமான சனி பகவான் 6 ஆம் வீட்டில் சஞ்சரிக்கும் இரண்டரை ஆண்டு காலமும் எதிர்ப்புகளை அழித்து, நோய் நொடிகளை அகற்றி சுறுசுறுப்பாக செயல்பட வைத்து யோகத்தை அளிப்பார் என்பதால் டிசம்பர் 26 க்குப் பிறகு உங்களுக்கு யோக காலம் என்பது உறுதி. குரு பகவான் 6 ஆம் வீட்டில் சஞ்சரித்து பாதகமான நிலையை வழங்குவார் என்றாலும் அவருடைய பார்வைகள் உங்கள் ராசிக்கு 2, 10, 12 ஆம் வீடுகளில் பதிவதால் குடும்பத்தில் நிம்மதியான சூழல் உண்டாகும், தொழிலில் லாபம் அதிகரிக்கும், உத்தியோகத்தில் இருந்த பிரச்னைகள் அகலும், விரயங்கள் கட்டுக்குள் வரும், நிம்மதியாக உறங்கவும் சந்தோஷமாக இருக்கவும் நிலைமை உருவாகும்.

பொதுவாக குருசனி பகவான் இணைவு பெறுவது உங்களுக்கு கிடைத்திட வேண்டியவற்றிற்கு தடை போடும் என்பது ஜோதிட விதி, கடந்த ஓராண்டு காலமும் குரு சனி இணைந்திருந்த காரணத்தினாலேயே நாட்டிலும் பிரச்சனை பெரும்பாலானோரின் வாழ்விலும் பிரச்னை, இப்போது டிசம்பர் 26 முதல் மீண்டும் குருசனி இணைவு உண்டாகப் போவதால் பிரம்மஹத்தி தோஷத்திற்கு அனைவருமே ஆளாக வேண்டிய நிலை உள்ளது, என்பதால் தோஷ நிவர்த்தியாகி, தடைகள் அகன்று உங்களுக்கு நன்மைகள் உண்டாக ராமேஸ்வரம் சென்று ஆலய தரிசனம் மேற்கொண்டு திலஹோமம் செய்து தனுஷ்கோடியில் பிண்டத்தை கரைத்து விட்டு வாருங்கள் நன்மைகள் உண்டாகும்.



## கன்னி

இதுவரை உங்கள் ராசிக்கு நான்காம் இடமென்னும் மாதுர் மற்றும் சுக ஸ்தானத்தில் இருந்த குருபகவான் உங்கள் வாழ்க்கையில் நன்மைகளை விட சங்கடங்களையே பெருமளவில் உருவாக்கி இருப்பார், அதற்கு குரு பகவான் மட்டும் காரணமல்ல அங்கிருந்த கேது மற்றும் அங்கிருக்கும் சனி பகவானும் காரணமாகும். இந்த நிலையில் உங்கள் ராசிக்கு 5 ஆம் வீடான மகர ராசிக்கு 15.11.2020 அன்று பெயர்ச்சியாகிறார் குரு பகவான், உங்கள் ராசிக்கு ஐந்தில் குரு சஞ்சரிக்கும் போது அவருடைய ஒன்பதாம் பார்வை உங்கள் ராசியில் பதியும். குருவின் பார்வை பலம் உங்களை ஆரோக்கியமாக்கும், உங்களுக்குள் சுறுசுறுப்பை உண்டாக்கும், செயலில் வேகமும் முடிவில் தெளிவும் உண்டாகும். ஐந்தாமிட குரு பூர்வ புண்ணிய யோகத்தை வழங்குவார் என்பதுடன் பிள்ளைகள் வழியே நிம்மதியை உண்டாக்குவார், வீட்டில் சுப காரியங்கள் நடப்பதற்குரிய வழிகள் உருவாகும். குருவின் பார்வை உங்கள் ராசிக்கு 9 மற்றும் 11 ஆம் வீடுகளின் மீதும் பதிவதால் வருவாய் அதிகரிக்கும், தந்தை வழி உறவுகளிடம் இருந்த மனக் கசப்பு விலகி சுமூகமான சூழல் உருவாகும், தொழில் விரிவடையும், உத்தியோகஸ்தர்களும் நன்மையைக் காணுவார்கள், 11 ஆம் வீட்டிற்கு குருப் பார்வை உண்டாவதால் புதிய நட்பு உண்டாகும் அந்த நட்பிடம் அதிக ஈடுபாடும் உண்டாகும், எனவே பழக்க வழக்கத்தை ஒரு அளவுடன் மட்டுமே வைத்துக் கொள்ளுங்கள்.

நவம்பர்.15 அன்று குரு பகவான் 5 ஆம் வீட்டிற்கு வந்து யோகமான பலன்களை வழங்கப் போகும் நிலையில், அந்த வீட்டின் அதிபதியான சனி பகவானும் டிசம்பர் 26 அன்று அங்கே ஆட்சியாக வந்து அமரப் போகிறார் என்பதால் அவருடைய பார்வையும் உங்கள் ராசிக்கு 11 ஆம் வீட்டிலும் உங்கள் ராசிக்கு 2 ஆம் வீட்டிலும் பதிய இருப்பதால் புதிய நட்பால் குடும்பத்தில் குழப்பம், வாழ்க்கையில் சிக்கல், ஏமாற்றம், பிரச்சனை என்று உண்டாக வாய்ப்பிருப்பதால் குருப் பெயர்ச்சிக்குப் பின் எதிர்பாலினரிடம் எச்சரிக்கையாக இருங்கள், புதிய நட்புகளிடம் எதையும் பகிர்ந்து கொள்ளாதீர்கள். டிசம்பர் 26 க்குப் பின் உண்டாகும் குரு சனி இணைவினால் உண்டாகும் தோஷத்தில் இருந்து உங்களை விடுவித்துக் கொள்ள ராமேஸ்வரம் சென்று தில ஹோமம் செய்து தனுஷ்கோடியில் பிண்டத்தை கரைத்து விட்டு வாருங்கள், தடைகள் அகலும் நன்மைகள் உண்டாகும்.

## துலாம்

இதுவரை உங்கள் ராசிக்கு மூன்றாம் இடமான தனுசு ராசியில் சஞ்சரித்து வந்த குரு பகவான் 15.11.2020 அன்று உங்கள் ராசிக்கு நான்காம் வீடான மகரத்திற்கு பெயர்ச்சி ஆகிறார். மூன்றாம் வீட்டில் குரு உள்ள காலத்தில்தான் துரியோதனன் படை மாண்டதாக ஜோதிடப் பாடல் கூறுகிறது, இக்காலத்தில் மூன்றில் குரு இருக்கும் காலம் குடும்பத்தில் சங்கடங்கள், நிம்மதியற்ற நிலை, சில அழிவுகள் உண்டாகலாம் என்பது ஜோதிட விதி, ஆனால் பெரும்பாலான துலாம் ராசியினருக்கு இத்தகைய சங்கடங்கள் நேர்ந்திருக்காது, அதற்கு காரணம் அதே மூன்றாம் வீடான தனுசில் கேது பகவான் இருந்ததும், சனி பகவான் இருப்பதுமே ஆகும்.

மூன்றாம் வீட்டில் பாப கிரகங்கள் இருப்பது சிறப்பான நிலையை உண்டாக்கும் என்பதால் குரு பகவானால் ஏற்பட இருந்த சங்கடங்களில் இருந்து கேதுவும் சனியும் உங்களைப் பாதுகாத்து வந்தனர் என்பதே உண்மை.

இந்த நிலையில்தான் குரு பகவான் 15.11.20 முதல், மாதுர் மற்றும் சுக ஸ்தானமான நான்காம் வீட்டிற்கு பெயர்ச்சியாகிறார், நான்காம் வீட்டில் சஞ்சரிக்கும் குரு இட மாறுதலை ஏற்படுத்துவார் என்பது விதி, இதையே பழம்பாடலில் தர்ம புத்திரர் நாலிலே வனவாசம் போம்படி யானதும் என்று குறிப்பிட்டுள்ளனர். நான்காம் வீட்டில் சஞ்சரிக்கும் குரு பகவான் இட மாறுதலை உண்டாக்கினாலும் அவருடைய பார்வைகள் 8,10,12 ஆம் வீடுகளில் பதிவதால் அந்த இடங்கள் எல்லாம் சுபிட்சமடையும்.

உங்கள் ஆரோக்கியத்தில் இதுவரை இருந்த சங்கடங்கள் அகலும், அவயம் காக்கும் கோழிபோல் இதுவரை இருந்து வந்த நிலையில் இருந்து மாற்றம் பெற்று சுறு சுறுப்படைவீர்கள், தொழில் விருத்தியாகும், உத்தியோகத்தில் இருந்த சங்கடங்கள் அகலும், சிலருக்கு புதிய வேலை வாய்ப்பும் உண்டாகும், நிம்மதியாக உறங்கும் நிலை உருவாகும், வீட்டில் சுப காரியங்கள் நடக்கும், இவையெல்லாம் குருவின் பார்வை பலத்தால் நீங்கள் அடையப் போகும் நன்மை என்றாலும் டிசம்பர் 26 ஆம் தேதி குரு பகவான் சஞ்சரிக்கும் 4 ஆம் வீட்டிற்கு சனி பகவானும் வர இருக்கிறார், நான்கிற்கு வரும் சனி பகவான் சாதகரை வேறு நகரில் குடியேற வைப்பார் என்பதும் சாதகரின் உடல்நிலையிலும் அவருடைய தாயாரின் உடல் நிலையிலும் சங்கடங்களை உருவாக்குவார் என்பதும் ஜோதிட விதி என்பதால் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். மாதுர் ஸ்தானத்தின் அதிபதியான சனி பகவான் மாதுர் ஸ்தானத்திலேயே சஞ்சரிப்பதும், அவருடன் குரு இணைவு பெறுவதும் தோஷத்தை உருவாக்கும் என்பதால் ராமேஸ்வரம் சென்று தரிசனம் மேற்கொள்வதும், திருநள்ளார் சென்று வருவதும் உடல் நலத்திற்கும் வாழ்க்கைக்கும் நன்மையை உண்டாக்கும்.

## விருச்சிகம்

இதுவரை குடும்ப ஸ்தானமென்னும் இரண்டாம் வீட்டில் சஞ்சரித்து வந்த குரு பகவான் 15.11.20 முதல் உங்கள் ராசிக்கு மூன்றாம் வீடான மகரத்தில் சஞ்சரிக்க உள்ளார்,

குரு பகவான் இரண்டில் இருந்த காலம் உங்களுக்கு யோகமான காலம் என்றாலும் அவர் வழங்க வேண்டிய யோகத்திற்கு தடை போடுபவர்களாக கேது அவருடன் இருந்தார், சனி அவருடன் ஏழரை சனியாகவும் இருக்கிறார் என்பதால் இரண்டாமிடத்துக் குரு உங்களுக்கு ஏமாற்றத்தையே வழங்கி இருப்பார், இந்த நிலையில் மூன்றாம் வீட்டிற்கு வரும் குரு பகவான் எத்தகைய பலன்களை வழங்குவார் என்று பார்க்கும் போது மூன்றாமிடத்தில் குரு பகவான் சஞ்சரித்த காலத்தில்தான் துரியோதனன் படை மாண்டதாக பழம் ஜோதிடப் பாடல் கூறுகிறது, பொதுவாக மூன்றில் சஞ்சரிக்கும் குரு சங்கடத்திற்கு மேல் சங்கடம் இழப்பிற்கு மேல் இழப்பு என்று உண்டாக்குவார் என்றாலும் டிசம்பர் 26 ஆம் தேதி மகரத்திற்கு ஆட்சியாக வரப்போகும் சனி பகவான் உங்களின் சக்தியை அதிகரித்து உங்கள் பிரச்னைகளை அகற்றி வைப்பார், சமூகத்தில் மதிப்பினை உருவாக்குவார், செல்வமும் செல்வாக்கும் அதிகரிக்கும் நிலையை உருவாக்குவார்.

இதே நேரத்தில் குருவின் பார்வை உங்கள் ராசிக்கு 7,9,11 ஆம் இடங்களில் பதிவதால், இதுவரை திருமணம் ஆகாமல் இருந்தவர்களுக்கு திருமண யோகம் கூடி வரும், தந்தை வழியில் அனுகூலம் உண்டாகும், வருவாய் அதிகரிக்கும், தடை பட்டிருந்த காரியங்கள் வெற்றியாகும், லாப ஸ்தானம் குருவின் பார்வை பெறுவதால் பல வழிகளிலும் பணம் வரும், எதிர்பாலினரின் நட்பும் நெருக்கமாகும்.

இக்காலத்தில் ஜென்மத்திலேயே கேது இருப்பதும் ஏழில் ராகு இருப்பதும் காதல், காமம் என்று இழுத்துச் செல்வதுடன் சில சங்கடங்களுக்கும் வழி வகுக்கும் என்பதால் எச்சரிக்கையாக இருப்பது அவசியம்.

காளஹஸ்தி சென்று ராகுகேதுவிற்கு பரிகாரம் செய்து விட்டு வருவதுடன் ஒருமுறை திருநள்ளார் சென்று தரிசனம் செய்து விட்டு வருவது நன்மையை உண்டாக்கும்

## தனுசு

இதுவரை உங்கள் ராசியிலேயே ஜென்ம குருவாக சஞ்சரித்து வந்த குரு பகவான் 15.11.2020 அன்று உங்கள் ராசிக்கு இரண்டாம் வீடான மகர ராசிக்கு பெயர்ச்சி யாகிறார், குரு பகவான் உங்கள் ராசி நாதன் என்றாலும் அவர் ஜென்மத்தில் சஞ்சரிக்கும் காலத்தில் உங்களுக்கு யோகத்தை வழங்கி இருக்க மாட்டார், அதற்கும் மேலாக உங்கள் ராசியில் இருந்த கேது பகவானும், ஏழரை சனியில் ஜென்ம சனியாக சஞ்சரிக்கும் சனி பகவானும் உங்களை எல்லா வகையிலும் படாத பாடு படுத்தி இருப்பார்கள்.

இந்த நிலையில் இரண்டாம் இடத்திற்கு வரும் குரு பகவான் உங்கள் குடும்பத்தில் இருந்த குழப்பங்களை அகற்றுவார், கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் போன நிலையில் இருந்து உங்களை மாற்றுவார்.

குரு பகவானின் பார்வை உங்கள் ராசிக்கு 6,8,10 ஆம் வீடுகளில் பதிவதால் உங்கள் உடல் நிலையில் இருந்த சங்கடங்கள் அகலும், மறைமுக எதிர்ப்புகள் விலகும், உங்கள் புகழுக்கும் செல்வாக்கிற்கும் உண்டான சோதனைகள் அகலும், தொழிலில் உண்டான தேக்கம் அகலும், நட்டமான நிலை மாறும், உத்தியோகத்தில் ஏற்பட்ட சங்கடங்களும் விலகும்.

இந்த நேரத்தில், டிசம்பர் 26 ஆம் தேதி உங்கள் ஜென்ம ராசியில் இருந்து விலகி குரு பகவான் உள்ள இரண்டாம் ராசிக்கு பாதச் சனியாக, ஆட்சியாக வரப் போகும் சனி பகவான் உங்கள் நலனுக்கு பாதிப்பை உண்டாக்கலாம், விபத்துகளில் சிக்கவும் வாய்ப்புண்டு என்பதால் வாகனப் பயணத்தில் எச்சரிக்கையுடன் இருங்கள், உடல் நலனில் அக்கறை கொள்ளுங்கள்.

சங்கடங்கள் தீர ஒரு முறை திரு நள்ளார் சென்று வாருங்கள், புத்தாண்டில் ராமேஸ்வரம் சென்று தீர்த்த நீராடல் முடித்து தரிசனம் கண்டு வாருங்கள்.



## மகரம்

இதுவரை விரய ஸ்தானத்தில் இருந்து பல வகையிலும் விரயங்களை உருவாக்கி வந்த குரு பகவான் 15.11.2020 அன்று உங்கள் ஜென்ம ராசிக்கே வந்து ஜென்ம குருவாக சஞ்சரிக்கப் போகிறார். ஏழரைச் சனி, விரய குரு என்று ஒரு பக்கம் வீண் செலவு மறு பக்கம் அலைச்சல், மனக் குழப்பம் என்று வாழ்க்கையை நடத்தி வந்த உங்களுக்கு ஜென்ம குரு எத்தகைய பலன்களை வழங்குவார் என்று பார்க்கும் போது ஜென்ம ராமர் வனத்திலே சீதையை சிறை வைத்ததும் என்ற பழம் பாடல்தான் நினைவிற்கு வரும், ஆனால் இக்காலத்தில் யாரும் ராமர் இல்லை என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும், எல்லாவற்றுக்கும் சந்திரனின் பார்வை பெறும் மகர ராசியினர் சாகசக்காரர்களாக இருப்பார்கள் என்பதால் ஜென்ம குரு காலத்தில் சில சங்கடங்களுக்கு ஆளாக நேரும், கணவன் மனைவிக்குள் வேற்று உறவுகளால் சங்கடமும் பிரச்னையும் வம்பும் வழக்கும் பிரிவும் கூட உண்டாக வாய்ப்புண்டு, வீட்டிற்குள் இருந்தாலே பிரச்னைதான் என்று எண்ணும் நிலையை இக்காலத்தில் குரு பகவான் தோற்றி வைப்பார்.

இந்த சமயத்தில் குரு பகவானின் பார்வை உங்கள் ராசிக்கு 5,7,9 ஆம் வீடுகளில் பதிவதால் அந்த வீடுகள் எல்லாம் சுபிட்சமடையும், பூர்வீக சொத்துகளில் இருந்த பிரச்னைகள் அகலும், புத்திர புத்திரிகள் வழியே உருவான சங்கடங்கள் அகலும், புதிய நட்பும் எதிர்பாலினரின் தொடர்பும் இக்காலத்தில் உருவாகி அதனால் மகிழ்ச்சி, நிம்மதி என்ற எல்லைக்குள் செல்வீர்கள் இதனால் கணவன் மனைவி உறவிற்குள் விரிசல் வர வாய்ப்புண்டு என்பதை நினைவில் கொள்ளுங்கள், தந்தை வழியிலும் தந்தை வழி உறவுகளாலும் இக்காலத்தில் லாபம் உண்டாகும், பாக்கியம் அதிகரிக்கும், பொருளாதாரத்தில் இருந்த தட்டுப்பாடுகள் அகலும். இவையெல்லாம் குருவின் பார்வைகளால் உண்டாகப் போகும் நன்மைகள் என்றாலும், உங்கள் ராசிக்கு 12 ல் உள்ள சனி பகவான் டிசம்பர் 26 அன்று ஜென்ம சனியாக உங்கள் ராசிக்குள் சஞ்சரிக்கப் போகிறார், அன்று முதல் உங்கள் நிலையில் தலை கீழ் மாற்றம் உண்டாகும், சகோதரர்களிடம் பிரச்சனை, நண்பர்களிடமும் புதிய உறவிடமும் சங்கடம், பிரிவு, தொழிலில் நிலையற்றத் தன்மை, லாப நிலையை விட நட்டமே அதிகம், உத்தியோகத்தில் பிரச்சனை என்று உங்கள் வாழ்க்கை சுழலில் சிக்கிய படகுபோல் திக்கு முக்காட ஆரம்பிக்கும் என்பதால் எந்த ஒரு செயலையும் யோசித்து யோசித்து செயல் படுங்கள், இக்காலத்தில் 11 ல் இருக்கும் கேது பகவான் எதிர்பாலினர் வழியாக உங்களுக்கு சங்கடங்களை உண்டாக்கி ஞானத்தை உண்டாக்கலாம் என்பதால் புதிய நட்பு புதிய உறவுகளிடம் எச்சரிக்கையுடன் இருங்கள். ஜென்ம ராசியிலேயே குருவும் சனியும் இணைவதால் ராமேஸ்வரம் சென்று வாருங்கள், அங்கு என்ன செய்ய வேண்டும் என்பதை 9444393717 என்ற எண்ணில் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள், சங்கடங்கள் அகலும்.



## கும்பம்

இதுவரை உங்கள் ராசிக்கு லாப குருவாக இருந்து உங்களுக்கு நிம்மதி சந்தோஷம் என்ற நிலையை உருவாக்கித் தந்த குரு பகவான் 15.11.2020 அன்று உங்கள் ராசிக்கு 12 ஆம் வீடான மகரத்தில் விரய குருவாக சஞ்சரிக்க இருக்கிறார்.குரு 12 ல் அமர்வது எதிர் மறையான பலன்களையே உருவாக்கும் என்பது பொது விதி, இது குறித்து கூறும் பழம் பாடல், வன்மையுற்றிட ராவணன் முடி பன்னிரண்டினிற் வீழ்ந்ததும்... என்று கூறுகிறது, இக்காலத்தில் இதனை, தன் செல்வம், தன் செல்வாக்கு அழியும் என்றும் கூறலாம்.

என்னுடைய அனுபவத்தில் விரய குரு கையில் இருப்பதையெல்லாம் கரைய வைப்பார் என்பதையே தெரிந்துள்ளேன், அதற்காகவே பல வழிகளிலும் செலவினங்களை உருவாக்குவார், விபத்துகளை உருவாக்குவார், நோய் நொடியில் வீழ்த்துவார், தன்னுடன் இருப்பவர்களுக்கு நலிவை உண்டாக்கி அதன் வழியே செலவை உண்டாக்குவார்... உங்கள் கையிருப்பு கரைவதற்காக குரு செய்யும் செயலாகவே இதனைக் கூறுவேன், இந்த நிலையில் விதியை மதியால் வெல்வதுபோல், வீட்டில் மாறுதல் செய்தல், பிள்ளைகளுக்கு சுப காரியங்கள் செய்தல், புதிதாக கட்டிடம் கட்டுதல், இடம் வாங்குதல் என்று நம்முடைய விரயத்தை சுப விரயமாக மாற்றிக் கொள்ளலாம். விரய குரு செலவினங்களுக்கு காரணமாக இருந்தாலும், அவருடைய பார்வை பெறும் 4,6,8 ஆம் வீடுகளும் செலவுகளால் உங்களை ஆரோக்கியமாக்கும். நான்காம் வீடு சுகம் மற்றும் மாதுர் ஸ்தானமாகும், இங்கே குருவின் பார்வை பதியும்போது உங்கள் நிலை சீராகும், அடுத்து ஆறாம் வீட்டின் மீது குருவின் பார்வை பதியும்போது உங்கள் உடலில் இருந்த நோய்கள் சீராகும், அடுத்து எட்டாம் வீட்டின் மீது குருப் பார்வை பதியும்போது இருண்டு கிடந்த உங்கள் நிலையில் மாற்றம் உண்டாகும். விரய குருவால் முதலில் உங்கள் உடல் நலனில் முன்னேற்றம் உண்டாகும் அதற்காகவும் செலவுகள் செய்யும் நிலை ஏற்படும், இந்த நிலையில் ஆயுள் காரகனான சனி பகவான் கடந்த மூன்று ஆண்டுகளாக உங்களுக்கு லாப ஸ்தானத்தில் சஞ் சரித்து நீங்கள் விரும்பிய வாழ்க்கையை வாழவைத்தார், டிசம்பர் 26 அன்று அவரும் விரயச் சனியாக, ஏழரைச் சனியின் முதல் பகுதியாக உங்கள் ராசிக்கு 12 ஆம் வீட்டிற்குப் பெயர்ச்சியாகி குருவுடன் இணைகிறார் என்பதால் ஆரோக்கியத்தில் பிரச்னைகள் உருவாகி அதன் வழியே செலவுகள் அதிகரிக்கும். பனிரெண்டில் குரு மற்றும் சனி என்ற நிலையடையும் நீங்கள் திருநள்ளார் சென்று நள தீர்த்தத்தில் நீராடி ஈசனை வணங்கி விட்டு வருவதும், ராமேஸ்வரம் சென்று முன்னோர்களை வேண்டி திலஹோமம் செய்து விட்டு வருவதும் உடல் நிலையில் மாற்றத்தை, ஆரோக்கியத்தை உண்டாக்கும்.



## மீனம்

இதுவரை பத்தாம் வீட்டில் இருந்து பல்வேறு இன்னல்களை வழங்கி உங்களை முடக்கிப் போட்ட குரு பகவான் 15.11.2020 உங்கள் ராசிக்கு 11 ஆம் வீடான மகரத்திற்கு லாப குருவாக சஞ்சரிக்கப் போகிறார். இதுவரை நீங்கள் அனுபவித்த இன்னல்களில் இருந்து இனி நீங்கள் விடுபடுவீர்கள், செய்யும் தொழிலில் பார்க்கும் பணியில் உண்டான நெருக்கடிகள் கொஞ்சம் கொஞ்சமாக மறைய ஆரம்பிக்கும், நீங்கள் எங்கு இருந்தாலும் அங்கு மதிக்கப் படுவீர்கள், உங்கள் திறன் வெளிப்படும், மனதில் புதிய நம்பிக்கை உண்டாகும், உங்களுக்கிருந்த சங்கடங்கள் விலகி நடைபோடுவீர்கள், இதே நேரத்தில் டிசம்பர் 26 அன்று சனி பகவானும் உங்கள் 11 ஆம் வீட்டிற்குப் பெயர்ச்சியாகிறார், பாப கிரகங்கள் 3,6,11 ஆம் வீடுகளில் சஞ்சரிக்கும் போது ஜாதகருக்கு அபரிமிதமான பலன்களை வழங்குவார்கள் என்பது பொது விதி, கடந்த மூன்று வருடமாக தொழில் ஸ்தானத்தில் அமர்ந்து சிக்கல்களையும், பிரச்சனைகளையும், மன உளைச்சலையும் உண்டாக்கி வந்த சனி பகவான் 11 ல் சஞ்சரிக்கும் காலம் நீங்கள் இதுவரை அனுபவித்து வந்த சங்கடங்களில் இருந்து விடுபெறும் காலமாக இருக்கும், நீங்கள் எங்கு இருந்தாலும் மதிப்பும் உங்கள் செல்வாக்கும் உயரும் காலமாக இருக்கும், குரு சனி இருவருமே லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பது என்பது உங்களுக்கு யோகமான காலம் என்றே கூற வேண்டும்.

குருவின் பார்வையும் உங்கள் ராசிக்கு 3,5,7 ஆம் வீடுகளில் பதிவதால் உங்களிடம் தன்னம்பிக்கை அதிகரிக்கும், உடல் நலனில் மாற்றம் உண்டாகும், பூர்வ புண்ணிய பலன்களை இக்காலத்தில் காண்பீர்கள், பிள்ளைகளின் வழியே சுபச்செலவுகள் உண்டாகும், புதிய நட்புகளிடம் எச்சரிக்கையுடன் இருங்கள்.

குருசனி இணைவினால் உண்டாகும் தோஷத்தில் இருந்து விடுபட்டு நன்மை அடைய ராமேஸ்வரம் சென்று வாருங்கள், இயலாதவர்கள் தொடர்ந்து குரு பகவானையும், சனி பகவானையும் வழிபட்டு வாருங்கள், நன்மைகளை அடைவீர்கள்.



# பள்ளி திறப்பதை தள்ளிப் போடுங்கள்!

## முதல்வருக்கு பொது மக்கள் வேண்டுகோள்

● பா.சு.மாறன்

**கொரோனாவின் தாக்கம் ஆரம்பமான நாளில் இருந்து உலக அளவில் இயல்பு வாழ்க்கை முடங்கிப் போயுள்ளது.**

கொரோனாவிலிருந்து மீண்டு வருவதாக கூறிக்கொண்ட நாடுகள் கூட இப்போது பெரும் அதிர்ச்சிக்கு ஆளாகி வருகிறது, கொரோனாவின் அடுத்தக் கட்டம் ஆரம்பமாகி விட்டதாக தகவல்கள் கசிந்து கொண்டுள்ளன.

கொரோனாவின் அறிகுறிகள் மாற்றம் பெற்று கொரோனாவால் இன்றும் உயிரிழப்புகள் ஏற்பட்டுக் கொண்டுதான் உள்ளன.

இந்த நிலையில் தமிழக முதல்வர் எடப்பாடியார் அவர்களின் செயல்பாடுகள் மற்றும் திட்டமிடுதலின் காரணமாக தமிழகம் இன்று பேராபத்திலிருந்து மீண்டு கொண்டிருக்கிறது.

அனைத்திற்கும் மேலாக அணி அணியாய், அலை அலையாய் திரளும் மாணவ சமுதாயத்தை இன்றுவரை பாதுகாத்து வந்ததுடன், அவர்களின் எதிர்காலம் கருதி இணைய வழியே கல்வி, பாடச்சுமைகள் குறைப்பு, தேர்ச்சி அறிவிப்பு என்று சிறப்பான பணிகளை மேற்கொண்டு வருவதுடன், மருத்துவக் கல்வியில் அரசுப் பள்ளி மாணவர்கள் 7.5% இட ஒதுக்கீடு பெற ஆளுநர் அனுமதி அளிக்காத நிலையிலும் சட்டம் நிறைவேற்றி அறிவித்து மாணவ சமூகத்திடம் உயர்ந்து நின்று கொண்டிருக்கிறார் முதல்வர் எடப்பாடியார்.

இந்த நிலையில் பள்ளி கல்லூரிகள் திறப்பு, 9 முதல் 12 வரை பள்ளிகளும், மற்றும் கல்லூரி நிறுவனங்களும் நவம்பர் 16 முதல் செயல்படும் என்று அறிவித்திருப்பது ஆச்சரியமாக உள்ளது.

கொரோனாவை அழிப்பதற்கு இதுவரை மருந்து இல்லை, அதனுடைய அறிகுறி எப்படி இருக்கும் என்பதையும் முழுமையாக உணர முடியவில்லை, சீதோஷ்ண நிலைக்கேற்ப தன்னை மாற்றிக் கொண்டு மனித உயிர்களை வேட்டையாடும் கொரோனாவிடமிருந்து மனித உயிர்களைப் பாதுகாத்திட வேண்டிய மகத்தான கடமை அரசுக்குள்ளது.

இக்கால மாணவர்களின் வாழ்வியல், உணவு முறை என்று எதுவுமே நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கிடக் கூடியதாக இல்லை என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும், அவர்களை ஒரே இடத்தில் அமர வைக்கும்போதும், அவர்கள் பள்ளிக்கு வரும்போதும் பள்ளியை விட்டுச் செல்லும்போதும் ஒன்றாக குழுமுவதையோ, நெருக்கமாவதையோ நிச்சயமாக தடுத்திட முடியாது, இது எதார்த்தமான உண்மை.

ஆசிரியர்கள் மீதுள்ள கோபத்தினால் பள்ளிகளைத் திறக்க வேண்டும் என்று குரல் கொடுப்பவர்களுக்காக முதல்வர் தன்னுடைய முடிவை தளர்த்திக் கொள்வது என்பது, பள்ளிகள் திறப்பினால் உண்டாகும் பேராபத்தை, மாணவ மாணவியர் மூலம் கொரோனா பரவுவதை, உயிர்பலி உண்டாவதை எதிர்ப் பார்க்காத நிலையில் தான், ஆனால், இந்த முடிவு பற்றி முதல்வர் மீண்டும் ஒரு முறை யோசிக்க வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக தமிழகத்தில் மிகப்பெரிய கொண்டாட்டம் என்பது தீபாவளியும், பொங்கல் பண்டிகையும்தான், இந்த இரண்டு பண்டிகைகளின் போது தமிழக மக்கள் மாவட்டம் விட்டு மாவட்டம் செல்வார்கள், அத்தகைய தீபாவளி பண்டிகை முடிந்த மறுநாளே பள்ளிகள் கல்லூரிகள் திறப்பது என்றால், அதற்காக மேற்கொள்ளும் பயணத்தை, போக்குவரத்து நெரிசலை அரசு ஒரு நிமிடம் சிந்திக்க வேண்டும், இதனால் கூட கொரோனா அதிக அளவில் பரவிட நிறையவே வாய்ப்பிருக்கிறது என்பதையும் சிந்தித்து பள்ளி மற்றும் கல்லூரிகள் திறப்பினை ஜனவரி தொடக்கத்திற்கு அரசு தள்ளி வைத்திட வேண்டும்.

இது எது பற்றியும் யோசிக்காமல் பள்ளிகளையும் கல்லூரிகளையும் திறந்தே தீர வேண்டும் என்று அரசு நினைத்தால் தீபாவளி கொண்டாட்டம், அதன் பரபரப்பு அடங்கிய பிறகு நவம்பர் இறுதியில் திறந்து கொள்ளலாம்.

சொல்ல வேண்டியதை சொல்லி விட்டோம்... கொரோனாவில் இருந்து மாணவ சமூகத்தைப் பாதுகாப்பதும் அல்லது கொரோனாவிற்குள் அவர்களைத் தள்ளி விடுவதும் இனி அரசின் கையில். ■

# ஜெயிக்கலாம் வாங்க..!

வாழ்க்கையில் முன்னேறுவதற்கு பலர் பல்வேறு சமயங்களில் நமக்கு வழிமுறை சொல்லியிருக்கிறார்கள். கவிஞர்கள் கவிதை வடிவில், அறிஞர்கள் அறிவுரை வடிவில், கலைஞர்கள் திரைவடிவில் நமக்கு அப்படி வழிகளைச் சொல்வார்கள். அந்த வகையில் ஜெயிப்பதற்கு சில விஷயங்களை பார்ப்போம்.

### புத்தகங்களைத் துணை கொள்:

மனிதனை முன்னேற்ற புத்தகங்கள் பலவழிகளில் உதவுகிறது. ஏனென்றால் புத்தகம் பண்படுத்தும். மனிதனை நல்வழிப்படுத்தும். யாருக்கு எந்த வகையானபுத்தகம் வேண்டுமானாலும் பிடிக்கலாம். அந்த புத்தகத்தை தொடர்ந்து படித்து வரலாம்.

### உடலுழைப்பை அதிகரி:

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையை தீர்மானிப்பது உழைப்புதான். உழைக்காதவர்களை இந்த உலகம் மதிப்பதில்லை.

### கொஞ்சமாய்ச் சாப்பிடு:

உணவுகூட நம் வாழ்க்கையை தீர்மானிக்கிறது. அளவோடு உண்பது என்பது ஆரோக்கிய வாழ்க்கையை அடையாளப்படுத்தும்.

### தியானம் கைக்கொள்:

உலகச் சூழல் இன்றைய காலகட்டங்களில் மனிதனை மன உளைச்சலுக்கும்,மன அழுத்தத்துக்கும் உள்ளாக்குகிறது.எனவே அதிலிருந்து விடுபட யோகா,தியானம் போன்றவற்றை செய்ய வேண்டும்.

### இரவு உறங்கும் முன் நெடுந்தொலைவு நட:

பொதுவாக உடல் நலனுக்கு கேடு இரவில் உண்ணும் உணவினால்தான் வருகிறது என்கிறார்கள். அதிகாலை நடைப்பயிற்சியைப் போலவே இரவு உணவுக்குப் பிறகு எவ்வளவு நடக்கமுடியுமோ அவ்வளவு தூரம் நடக்க வேண்டும்.

### எத்தனை வலித்தாலும் அழாதே... சிரி:

“வாய்விட்டு சிரிச்சா நோய்விட்டுப் போகும்“ என்ற வார்த்தைகள் சாதாரணமான வாசகமல்ல. நோய் மட்டுமல்ல துன்பத்தால் வரும் வலியையும் நகைச்சுவை மாற்றிவிடும்.

### ஆத்திரம் அகற்று:

கோபம் சில நேரங்களில் வாய்ப்புகளை மட்டும் இழக்கச் செய்வதில்லை.நல்ல மனிதர்களையும் இழக்க வைக்கிறது.எனவே கோபத்தை கட்டுப்படுத்துவது வெற்றிக்கு நம்மை அழைத்துச் செல்லும்.

### கேலிக்குப் புன்னகை தா:

எப்போதும் அடுத்தவரைப்பற்றி ஏதாவது கேலி செய்வது சிலருக்கு வாடிக்கை. அப்படி கேலி செய்பவரை பொருட்படுத்தாமல் கடந்து செல்வதுதான் நல்லது.

### கோபத்திற்கு மௌனத்தைக் கொடு:

நமது வளர்ச்சியை பிடிக்காதவர்கள் நம் மீது கோபத்தையும் வெறுப்பையும் கக்குவார்கள். அந்த மாதிரி நேரத்தில் நாம் அதை அமைதியாக கடந்து போனால் நம் வளர்ச்சி தடையின்றி தொடரும்.

### நட்புக்கு நட்பு செய்:

பழங்காலத்தில் நட்புக்கு இலக்கணமாக அரசனையும், புலவரையும் சொல்வார்கள். நம்முடைய நண்பர்களோடு நாம் உண்மையாக இருக்கவேண்டும்.

வாழ்க்கையில் இந்த பத்தையும் கடைபிடித்தால் எண்ணிய செயல்களில் வெற்றியே கிட்டும்.

சேலம் பனைமரத்துப்பட்டிக்கு அருகில் உள்ள கிராமம் குள்ளப்பநாயக்கனூர் மலைகள் சூழ்ந்த அழகிய கிராமம். கிராமம் முழுவதும் ஒரு காலத்தில் 25 அடியில் இருந்த கிணற்று நீரை பயன்படுத்தி பல பயிர் விவசாயம் செய்து வந்தனர். ஆனால் கடந்த பத்தாண்டுகளில் நிலத்தடி நீர்மட்டம் ஆயிரம் அடி வரை சென்றுவிட்டது. ஆழ்துளை கிணறு அமைத்து அந்த நீரை கிணற்றில் ஊற்றி பாசனம் செய்யும் நிலைமைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். எனவே குறைவான தண்ணீரில் வரக்கூடிய அரளிப் பூ சாகுபடி தான் இந்தப் பகுதியில் பிரதானமாக உள்ளது ஒரு சிலர் மட்டும் காய்கறி மற்றும் குச்சிக்கிழங்கு பயிர் செய்கின்றனர்.

# சேலத்தில் விவசாயம் செய்யும் சென்னை இளைஞர்..!



தொழில் நிமித்தமாக சென்னையில் வசிக்கும் இந்த கிராமத்தைச் சேர்ந்த திரு ராஜ்குமார் அவர்கள் தன்னுடைய பூர்விக நிலத்தை விற்க மனமில்லாமல் குறைவான தண்ணீரில் வளரக்கூடிய, ஆள் செலவு அதிகமில்லாத மரம் சார்ந்த விவசாயத்திற்கு மாற முடிவு செய்து ,

இதில் அனுபவம் உள்ள ஈஷாவை தொடர்பு கொண்டார்.

ஈஷாவின் வழிகாட்டுதலின்படி 30 ஏக்கர் நிலப்பரப்பு முழுவதும் டிம்பர் மரங்களான தேக்கு, மகாகனி, வேங்கை, கருமருது, செம்மரம், மலைவேம்பு, சந்தனம், ஆகியவற்றையும், எலுமிச்சை ,சாத்துக்குடி, ஆரஞ்சு, சீத்தா, நெல்லி போன்ற பழ மரங்களையும் கலந்து நடவு செய்துள்ளார்.மேலும் நிலம் முழுவதும் சொட்டுநீர் அமைத்துள்ளார்.

இயற்கையை நேசிக்கும் இவர் தோட்டத்தில் நாட்டு பசுக்களை வளர்த்து முழுமையாக இயற்கை இடு பொருட்களை மட்டுமே பயன்படுத்துகிறார்.

ஆரம்ப காலங்களில் வாரம் ஒரு முறை அமிர்த கரைசல், கடலை புண்ணாக்கு கரைசல் , ணிவி கரைசல், பத்து இலை கசாயம், மீன் அமிலம் போன்ற இடுபொருள்களை மாற்றி மாற்றி தொடர்ந்து கொடுத்து வந்தார்.

தற்சமயம் நாட்டு மாடுகளின் சாணம் கோமியத்தை கரைத்து அதை மட்டுமே அளிக்கிறார்.

எலுமிச்சை ,சீதா, நெல்லி ஆகியவை மூன்று ஆண்டுகளில் காய்க்க தொடங்கி தொடர் வருமானம் அளித்துக் கொண்டிருக்கிறது.

முதல் இரண்டு ஆண்டுகள் முப்பது ஏக்கர் முழுவதும் ஊடுபயிராக வாழையும் சாகுபடி செய்துவந்தார் .பின்பு தண்ணீர் பற்றாக்குறை காரணமாக வாழையை நிறுத்திவிட்டு மரங்களை மட்டும் பராமரித்து வருகிறார்.





2016 ஆம் ஆண்டு மேலும் ஆறு ஏக்கரில் முழுமையாக மரப் பயிர் சாகுபடி செய்துள்ளார் தற்சமயம் 36 ஏக்கரிலும் மரங்கள் வளர்ந்து பலகோடி மதிப்புள்ள மரக் காடாக மாறியுள்ளது.

இந்த நிலத்திற்கு உள்ளே சென்றாலே 4 டிகிரி அளவு வெப்பநிலை குறைந்து காணப்படுகிறது.

நல்ல ஒரு நுண் சூழல் ஏற்பட்டுள்ளதாலும், சமவெளியில் மிளகு சாத்தியம் என்பதாலும்,இந்த ஆண்டு 5 ஏக்கரில் பரீட்சார்த்தமாக மிளகு சாகுபடி செய்ய உள்ளார்.

கடந்த வருடமும் இந்த வருடமும் இந்தப் பகுதியில் மழைப்பொழிவு அதிகரித்துள்ளது என்றும் நிலத்தடி நீரும் உயர்ந்துள்ளது என்றும் தெரிவிக்கின்றனர்.


மேலும் இரண்டு ஏக்கரில் தென்இந்தியாவில் உள்ள அனைத்து வகையான மரங்களையும் நடவு செய்து சேலம் மாவட்டத்திலுள்ள பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு ஒருமாதிரி தாவரவியல் பூங்கா அமைக்கவும் ,

1 ஏக்கரில் மூலிகை தோட்டம் அமைக்கவும் விருப்பம் தெரிவித்துள்ளார்.

காற்று மாசால் அவதியுறும் நகரத்து மக்களுக்கு சுத்தமான காற்றை சுவாசிக்க ஒரு ஆக்ஸிஜன் தொழிற்சாலையை உருவாக்கிய திரு ராஜ்குமார் அண்ணா அவர்களுக்கு ஈஷா மரம் சார்ந்த விவசாய திட்டத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கின்றோம்.

#காவேரிகூக்குரல்
#ஈஷாமரம்சார்ந்தவிவசாயதிட்டம்
செல்: 80009 80009.

**தகவல் : கார்த்திக் கண்ணப்பன்**



# சென்னை நகர பெயர் காரணம்!

சென்னை இன்று மிகப்பெரிய மாநகரமாக விளங்க காரணம், பல சிறு சிறு கிராமங்களின் இணைவு தான். அப்படி இணைந்த கிராமங்களின் பெயர்கள் உருவானதின் பின்னணியை தெரிந்து கொள்ளுங்கள்.

- 108 சக்தி ஸ்தலங்களில் 51வது ஊர் ஆகையால் ஐம்பத்து ஒன்றாம் ஊர் என்று அழைக்கப்பட்டு, பின்னாளில் இவ்வூர் அம்பத்தூர் என மாறியது.
- Armed Vehicles And Depot of India என்பதின் சுருக்கமே ஆவடி (AVADI)
- 1912ம் ஆண்டில் 25 ஏக்கர் பரப்பளவில் ஒரு ஆங்கிலேயரால் Chrome Leather Factory என்ற ஒரு தோல் பதனிடும் தொழிற்சாலையை தொடங்கியதால் அப்பகுதிக்கு குரோம்பேட்டை என்ற பெயர் உருவானது
- 17,18 ம் நுற்றாண்டுகளில் நவாப் ஒருவரின் கட்டுப்பாட்டில் இருந்தது இப்பகுதி. அவருடைய குதிரைகளின் பசியை போக்கும் நந்தவனமாக இது விளங்கியதால், கோடா பக் (பொருள் Garden of horses) என்று






உருது மொழியில் பெயர் வைத்தார். பின்னாளில் அதுவே கோடம்பாக்கம் ஆக மாறியது.

- தென்னை மரங்கள் நிரம்பிய பகுதி ஆகையால் தென்னம்பேட்டை என பெயர் வைத்தார்கள். பிற்பாடு அது தேனாம்பேட்டை ஆக மாறிப்போனது.
- சையத்ஷா என்ற இஸ்லாமிய முக்கிய பிரமுகர் வைத்திருந்த நிலப்பகுதியின் அடிப்படையில், சையத்ஷாபேட்டை என்றிருந்த பெயர், சைதாப்பேட்டை என்றாகியது.
- உருது வார்த்தையான சே பேக் (பொருள் Six gardens) என்பதிலிருந்து உருவானது தான் சேப்பாக்கம்
- சௌந்தர பாண்டியன் பஜார் என்பதின் சுருக்கமே பாண்டி பஜார்
- கலைஞர் கருணாநிதி நகரை சுருக்கி கே.கே. நகர் என அழைக்கிறோம்.
- சிவபெருமானுக்கு உகந்த வில்வமரங்கள் அதிகம் இருந்ததால் மகாவில்வம் என அழைக்கப்பட்ட இப்பகுதி, பின்பு மாவில்வம் என்றாகி, காலப்போக்கில் எப்படியோ மாம்பலம் ஆகி விட்டது.
- பல்லவர்கள் ஆட்சி செய்ததால் பல்லவபுரம் என்றழைக்கப்பட்ட இடம் தான் பல்லாவரம்.
- சென்னை மாகாண முதல்வராக இருந்த பனகல் ராஜாவின் நினைவாக இவ்விடம் பனகல் பார்க் என அழைக்கப்படுகிறது.
- நீதி கட்சி தலைவர் சர். பி.டி.தியாகராஜன் செட்டியின் பெயராலேயே இப்பகுதி தி.நகர் (தியாகராய நகர்) என அழைக்கபடுகிறது
- கடற்கரைப்பகுதியான இங்கு புரசை மரங்கள் அதிகமாக இருந்ததால், இப்பகுதி புரசைவாக்கம் ஆனது.
- அதிக அளவில் மல்லிகை பூக்கள் பயிரிடப்பட்ட பகுதி இது. திருக்கச்சி நம்பி ஆழ்வார் தினமும் இங்கிருந்து பூக்களை பறித்துக்கொண்டு சென்று காஞ்சி வரதராஜபெருமாளை வழிபட்டுவந்தார். அதனால் இவ்விடம் சமஸ்கிருதத்தில் புஷ்பகவல்லி என்றும், தமிழில் பூவிருந்தவல்லி என்றும் அழைக்கப்படுகிறது. பின்னாளில் இது பூந்தமல்லி யாக மாறியது. வல்லி என்பது தெய்வத்தை குறிக்கும் ஒரு பெயர்.
- 17 ம் நூற்றாண்டில் இங்கு வாழ்ந்து வந்த ஒரு முஸ்லீம் துறவி 'குணங்குடி மஸ்தான் சாகிப்'. இவரது சொந்த ஊர் ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தொண்டி. ஆகையால் அப்பகுதி மக்கள் அவரை தொண்டியார் என அழைத்தனர். அந்த ஏரியா தான் தற்போதைய தண்டயார்பேட்டை.
- முன்பு இப்பகுதி ஆடு மாடுகள் மேயும் திறந்தவெளியாக இருந்துள்ளது. அதனாலேயே மந்தைவெளி என்றழைக்கபடுகிறது.
- மயில் ஆர்ப்பரிக்கும் ஊர் என்பதே மயிலாப்பூர் என மாறிப்போனது.
- பல்லவர்கள் காலத்தில் போர்கள் நடத்த இவ்விடத்தையே பயன்படுத்தியதால், இப்பகுதி போரூர் எனப்படுகிறது.
- சில நூறு வருடங்களுக்கு முன்பு இப்பகுதி முழுவதும் மூங்கில் மரங்கள் இருந்தது. அதனாலேயே பெரம்பூர் எனப்படுகிறது.
- திரிசூல நாதர் ஆலயம் இருப்பதால் இந்த ஏரியா திரிசூலம் என்று அழைக்கப்படுகிறது.
- பார்த்தசாரதி கோவிலின் எதிர்ப்புறம் இருக்கும் குளத்தில் (கேணி) நிறைய அல்லிகள் பூக்கும். அதன் காரணமாக இப்பகுதிக்கு திருஅல்லிக்கேணி என பெயர் உருவாக்கி, பின்பு திருவல்லிக்கேணி யாகி, தற்போது Triplicane என மாற்றம் கண்டுள்ளது.

**● தகவல் : காக்களூர் முருகானந்தம்**






**S.SURIYA**

Diwali is one of the most beautiful festivals of India. Everything looks beautiful and lit up under the charisma of lights and diyas. The festival is about hope, victory, winning hearts, mending relationships, spreading happiness and celebrating life. This Diwali, do not compromise on making everyone around you smile

Light a lamp of love! Blast a chain of sorrow! Shoot a rocket of prosperity! Fire a flowerpot of happiness! Wish you and your family Sparkling Diwali

May the festival of lights be the harbinger of joy and prosperity. As the holy occasion of Diwali is here and the atmosphere is filled with the spirit of mirth and love, here's hoping this festival of beauty brings your way, bright sparkles of contentment that stay with you through the days ahead. Best wishes on the festival of lights and prosperity!

Owned and Published by **M.SUNDARAMOORTHY** from No.602 Suruthi Block, Chitra Avenue, 9, Choolaimedu High Road, Chennai-600 094. and Printed by him at **SRI PADMALAYA PRINTERS**, No.8/18, Manali Salai, Korukkupet, Chennai-600 021. Editor : **M.SUNDARAMOORTHY**

பெறுபவர்களைவிட கொடுப்பவர்களே பாக்கியவான்கள்

# அனைவரும் கொண்டாடும் தீபாவளியை ஆதரவற்ற அன்னையரும் கொண்டாட உதவுங்கள்!

## அன்னையர் அகம் மகிழ அன்னதானத்திற்கு நன்கொடை அளித்து அன்னையர் வாழ்வில் தீபஒளி ஏற்றுவோம்

**அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்.** காஞ்சி ஸ்ரீ மகாப் பெரியவா ஆசியுடன் தாங்கள் எல்லா வளமும், நலமும் பெற மனதார பிரார்த்திக்கின்றோம். குமரன் இளைப்பாறிய குன்றத்தூர் முருகன் கோயில் மலை அடிவாரத்தில் அமைந்துள்ள **ஸ்ரீ அவ்வை ஹோம்** கடந்த **21 ஆண்டுகளாக** ஆதரவின்றியும், நோய்களால் பாதிக்கப்பட்டும், நடக்க முடியாமலும், படுத்த படுக்கையாகவும் உள்ள வயதான அன்னையர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி மற்றும் அனைத்து தேவைகளையும் கருணை உள்ளம் கொண்ட நல்லோர்களின் அன்பான ஆதரவோடு இலவசமாக செய்து, தினசரி இறை வழிபாட்டுடன் அவர்களை இறுதிவரை பராமரித்து பாதுகாத்து வருகிறது. **எத்தனை வரங்கள் வேண்டுமானாலும் பெற எளிய வழி ஆதரவற்ற அன்னையருக்கு அன்னதானம் செய்வது மட்டுமே.** உதவி செய்யும் நல்உள்ளங்கள் நீடூழி வாழ **தீபஒளி திருநாளன்று கூட்டுப் பிரார்த்தனையும், செல்வ வளம் பெருகவும், வறுமை நீங்கவும் ஸ்ரீ லட்சுமி குபேர ஹோமம்** சிறப்பாக நடைபெறும். ஸ்ரீ அவ்வை ஹோமில் உள்ள ஆதரவற்ற அன்னையர்களும் மகிழ்ச்சியுடன் **இத்தீபஒளித் திருநாளை கொண்டாட** உங்கள் அன்பளிப்புகளை பொருட்களாகவோ, தொகையாகவோ அனுப்பி உதவி செய்திட வேண்டுகிறோம். **தாங்களும் குடும்பத்துடன் இறைவன் அருள் பொருந்திய இந்த இல்லத்தை பார்வையிட்டு அனைத்து அன்னையரின் அளவற்ற ஆசியினையும், வாழ்த்துகளையும் பெற அன்புடன் அழைக்கிறோம்**

## ஆதரவற்ற அன்னையருக்கு தாங்கள் அன்னமிடுவதால் பரம்பொருளுக்கே அன்னமிட்டவர் ஆகின்றீர்கள்

தீபாவளி அன்று நடைபெறும் அஷ்ட ஐஸ்வர்யங்களை அள்ளித்தரும் ஸ்ரீ லட்சுமி குபேர ஹோமத்திற்கு ரூ.200/- அனுப்புபவர்களுக்கு **ஸ்ரீ லட்சுமி குபேர யந்திரம்** அனுப்பி வைக்கப்படும்

தீபாவளி அன்று இனிப்பு வழங்க ரூ.500/- அனுப்புபவர்களுக்கு ஏழுகோடி மகாமந்திர பலனை உள்ளடக்கிய **ருத்ராட்ச ஜபமாலை** அனுப்பி வைக்கப்படும்

அன்னையர் ஒருவருக்கு மருத்துவச் செலவுக்கு ரூ.1,000/- அனுப்புபவர்களுக்கு பித்தளையிலான **ஸ்ரீ காயத்ரி அம்மன் விக்ரஹம்** அனுப்பி வைக்கப்படும்

ஒரு நாள் உணவுக்கு ரூ.1,500/- அனுப்புபவர்களுக்கு பித்தளையிலான **ஸ்ரீ அன்னபூரணி விக்ரஹம்** அனுப்பி வைக்கப்படும்

அன்னையர்களுக்கான ஒரு மாத பால் செலவு ரூ.2,000/- அனுப்புபவர்களுக்கு பித்தளையிலான **ஸ்ரீ காஞ்சி காமாட்சி அம்மன் விக்ரஹம்** அனுப்பி வைக்கப்படும்

அன்னையர்களின் உடைகளுக்கு ரூ.3,000/- அனுப்புபவர்களுக்கு பித்தளையிலான **ஸ்ரீ காசி விசாலாட்சி அம்மன் விக்ரஹம்** அனுப்பி வைக்கப்படும்

காப்பகத்தின் ஒரு மாத பராமரிப்பு செலவுக்கு ரூ.4,000/- அனுப்புபவர்களுக்கு பித்தளையிலான **ஸ்ரீ லட்சுமி ஹயக்ரீவர் விக்ரஹம்** அனுப்பி வைக்கப்படும்

முதியோர் நலமருத்துவ மையம் அமைக்க ரூ.5,000/- அனுப்புபவர்களுக்கு செல்வ வளம் பெருக்கும் **பித்தளையிலான ஸ்ரீ லட்சுமி குபேர விக்ரஹம்** அனுப்பி வைக்கப்படும்

10 நாள் உணவுக்கு ரூ.10,000/- அனுப்புபவர்களுக்கு வீட்டில் ஐஸ்வர்யத்தையும், சந்தோஷத்தையும் பெருக்கும் **ஒரிஜினல் ஸ்படிக லிங்கமும்,** நீண்ட ஆயுளை அளிக்கும் **ஒரிஜினல் ஸ்படிக மணி மாலையும்,** அனைத்து விருப்பங்களையும் நிறைவேற்றும் **ஒரிஜினல் ஸ்படிகத்திலான ஸ்ரீ சக்கர மஹாமேருவும்** அனுப்பி வைக்கப்படும்

## அதிஅற்புதங்களை நம்முள் நிகழ்த்தும் ஸ்படிக மணி மாலை, ஸ்படிக லிங்கம், ஸ்படிக ஸ்ரீ சக்கர மஹாமேரு



ஸ்படிக மணி மாலை அணியும் ஒருவரின் மனதை அமைதிபடுத்தி அனைத்து காரணங்களால் ஏற்படும் பயம் மற்றும் கோபத்தை அணுகாமல் காத்து அனைவரையும் நேசிக்கச் செய்து வாழ்வை மகிழ்ச்சியுடன் வாழும் திறனை அவருக்கு அளித்து விருப்பங்களையும் பூர்த்தி செய்கிறது. மேலும் ஸ்படிக லிங்க பூஜை நமக்கு சந்தோஷத்தை நிரந்தரமாக தருகிறது. ஸ்படிக ஸ்ரீ சக்கர மஹாமேரு பூஜை நம் மனதில் தன்னம்பிக்கையும், எதையும் எதிர்கொள்ளும் தைரியத்தையும் நமக்கு வாரி வழங்குகிறது. மேற்கண்ட ஸ்படிகங்கள் நம்மைச் சுற்றிலும் அதிர்வலைகளை பரவிடச் செய்து ஒரு அரண் போல நம்மை என்றும் பாதுகாக்கிறது

## ஆதரவற்ற அன்னையருக்கான முதியோர் நல மருத்துவ மையம் அமைக்க தாங்கள் அளிக்கும் நிதி, தானமல்ல பரிசு அதிலும் உயிருள்ள பரிசு

ஆதரவின்றியும், நோய்களால் பாதிக்கப்பட்டும், நடக்க முடியாமலும், படுத்த படுக்கையாகவும் உள்ள எங்களது இல்ல வயதான அன்னையர்களின் உடல்நிலை, மருத்துவ தேவைகளை கருத்தில்கொண்டு, அவர்கள் நோயின்றி வாழவும், அவர்களுக்கு தேவையான சிகிச்சையை உடனடியாக அளிக்கவும் எங்களது இல்லத்திலேயே ஒரு முதியோர் நல மருத்துவ மையம் உடனடியாக அமைக்க வேண்டிய சூழல் எழுந்துள்ளது. இந்த முதியோர் நல மருத்துவ மையத்திற்கு தங்களால் இயன்ற நன்கொடையை அளித்து ஆதரவற்ற அன்னையரின் முதுமையை வளமாக்கி அவர்கள் தங்களின் முதுமையை ஆனந்தமாய் அனுபவிக்க உதவி செய்திட அன்புடன் வேண்டுகிறோம். முதியோர் நல **மருத்துவ மையம் அமைக்க ரூ. 5,000/- அனுப்புபவர்களுக்கு பித்தளையிலான ஸ்ரீ லட்சுமி குபேர விக்ரஹம் அனுப்பி வைக்கப்படும்**

ஆதரவற்ற அன்னையர்களின் அன்னதானத்திற்கும், முதியோர்நல மருத்துவ மையம் கட்டவும் தாங்கள் அனுப்பும் நன்கொடையை **CHEQUE/DD/MO** மூலமாக **SRI AVVAI HOME** என்ற பெயரில் அல்லது **Direct Remittance** ஆக **SRI AVVAI HOME, ICICI BANK, MYLAPORE BRANCH, CHENNAI-4, SB A/C NO: 218601000078, IFSC CODE: ICIC0002186** என்ற வங்கி கணக்கின் மூலமாகவும் நன்கொடையை அனுப்பலாம். நன்கொடை அனுப்பும்பொழுது தங்களின் பெயர், கோத்திரம், நட்சத்திரம், முகவரி, தொலைபேசி எண்ணை தெளிவாக குறிப்பிட வேண்டுகிறோம். **நன்கொடை அனுப்பும் அனைவருக்கும் ஸ்ரீ லட்சுமி குபேர ஹோமத்தில் பூஜிக்கப்பட்ட மேற்கண்ட பொருட்களும், அன்னையர்களின் ஆசீர்வாத பிரசாதங்களும், ரசீதும் தீபாவளிக்குபின் அனுப்பி வைக்கப்படும்**

தங்களின் பிறந்த நாள், திருமண நாள், தொழில் தொடங்கிய நாட்கள், முன்னோர்களின் நினைவு நாட்கள், அமாவாசை, பௌர்ணமி, கிருத்திகை மற்றும் தாங்கள் விரும்பும் நாட்களில் அன்னையர்களுக்கு சிறப்பு அன்னதானம் செய்து தங்கள் மகிழ்ச்சியினையும், நினைவுகளையும் பகிர்ந்து கொள்வதற்கு ஈடு இணை வேறு எதுவுமில்லை

மகாப் பெரியவா ஆசியுடன் 21 ஆண்டுகளாக ஆதரவற்ற அன்னையரை அரவணைக்கும் ஆனந்தம் ததும்பும் அன்பு இல்லம்

# ஸ்ரீ அவ்வை ஹோம்®

குன்றத்தூர் முருகன் கோயில் அடிவாரம், குன்றத்தூர், சென்னை-69

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வரி விலக்கு உண்டு

www.sriavvaihome.com

sriavvaihome@gmail.com

Off: 8754 888 888

Home: 8754 999 999



ஓய்வு பெற்ற IOB வங்கி அலுவலர்கள் ஸ்ரீ அவ்வை ஹோம் இல்ல அன்னையர்களுக்கு உதவிகள் வழங்கி மகிழ்ந்தபோது

தீபஒளி திருநாளை நம் இல்லத்து அன்னையர்களுடன் கொண்டாடி மகிழுங்கள். தங்கள் இல்லங்களிலும், உள்ளங்களிலும் தீபஒளி மலரட்டும்


99 DELIGHTS
Dream your Reality, Secure your future!
Appreciating deal Don't miss!! Don't feel!!
ARE YOU THAT LUCKY PERSON?
WE WELCOME YOU
SEASON GREETINGS
RETTERI STATION @ OUR DOOR STEP
NEXT ANNA NAGAR
CMDA APPROVED
Pay 1 Rupee get 1 Crore House
Location Advantages:
3 Minutes from Satellite Bus Terminal (A.P)
2 Minutes from Reliance Market
8 Minutes from Anna Nagar
5 Minutes from Saravana Stores
2 Minutes from Vijaya Park Hotel
7 Minutes from Perambur Railway Station
10 Minutes from CMBT Terminal
25 Minutes from International Airport
20 Minutes from Central Railway Station
Well Connected by Metro Network for Future Communication
30 Minutes from OMR
5 Minutes form Ambattur IT Park
Retteri Station @ our Door Step
Lake View Appartment
Premium Star Category Apartments
Jaigopal Garodia School
Velammal School
Hospital
Railway Station
Bus Stand
WORLD CLASS AMENITIES
JUST FEW MINUTES FROM MERIDIAN HOSPITAL
A TOWERING LIFE STYLE
9 FLOORS | 99 UNITS
2,3 BHK | 963-1469 Sq.Ft
World Class Ameneties
WE OFFER YOU AN INCOMPARABLE PRICE AROUND Rs.10 LAKHS LESSER THAN THE PREVAILING MARKET PRICE WITHIN THE VICINITY OF OUR HEAVENLY ABODE.
*Terms and conditions appl
READY TO OCCUPY
RENTAL INCOME GUARANTEE
For booking Call:
9003-454-454
Approved by Major Banks
AXIS BANK
State Bank of India
ICICI Bank
LIC
HDFC BANK
Indiabulls
SEMI FURNISHED FLATS IN AFFORDABLE PRICE
Channel Partners: Do you want to make money? Contact
KRM
No.1. Jawaharlal Nehru Road, (200 Ft. Inner Ring Road), Ponniamman Medu, Kolathur, Chennai - 600 099.
E-mail: sales@mitrahomemakers.com
www.krmhomemakers.com